புரட்சிகர வெகுஜன அரசியல் மாத இதழ்
Registered as a Newspaper in Sri Lanka

# புதிய நீதி

முரசம் 04
முழக்கம் 01
விலை ரூபா. 30
பெப்ரவரி-மார்ச் 2015

පුදිය නීදී
PUTHIYA NEETHI

# அமெரிக்காவின் ஏமாற்றும் தமிழ்த் தலைமைகளின் விசுவாசமும்



கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஒரு தீர்மானத்தை ஐக்கிய அமெரிக்கா பெரும் ஆரவாரத்துடன் கொண்டுவந்து நிறைவேற்றியது. அதனைப் பிரித்தானியா, கனடா உட்பட அமெரிக்கச் சார்பு நாடுகள் மிகுந்த அக்கறையுடன் ஆதரித்தன. அதாவது இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் 2002 முதல் 2009 மே 19 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த தாக்குதல்கள் உயிரழிவுகள், கைதுகள், காணாமற் போகச் செய்தமை உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுமாறு கேட்டு, மனிதஉரிமைகள் பேரவை ஒரு விசாரணையை நடத்தி அறிக்கையிட வேண்டும் என்பதே அமெரிக்கத் தீர்மானத் தின் சாராம்சமாகும். அதனை அன்றைய ராஜபக்ச அரசாங்கம் கடுமையாக எதிர்த்ததுடன் எந்த ஐ.நா. விசாரணையாளரையும் நாட்டுக்குள் அனுமதிக்க மறுத்திருந்தது. அதனால் இலங்கைக்கு வெளியே வெவ் வேறு வழிமுறைகள் மூலம் மூவர் கொண்ட குழு விசாரணை நடாத்தியது.



மேற்படி விசாரணை அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் மார்ச் மாத அமர்வின் போது முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அதனை ஆறுமாதங்களாற் பிற்போட்டு செப்ரம்பர் மாத அமர்வின் போது அது சமர்ப்பிக்கப்படும் எனக் கூறி ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இது ஏன் என்பதுதான் எழுந்துள்ள கேள்வியாகும். அதாவது தற்போது பதவிக்கு வந்துள்ள மைத்திரி-ரணில் ஆட்சியானது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக சக்திகளினாற் கொண்டுவரப்பட்ட ஆட்சியாகும். அதே மேற்குலக சக்திகளின் தேவைகள், நலன் கள், ஆதிக்கம் நிலவவேண்டும் என்பதால் இந்த ஆட்சிக்கு எவ்வித நெருக்கடியும் கொடாது அதைப் பாதுகாக்கவேண்டும் என்பதே அமெரிக்க, ஐரோப்பிய

> **"தற்போது பதவிக்கு வந்துள்ள மைத்திரி-ரணில் ஆட்சியானது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக சக்திகளினாற் கொண்டுவரப்பட்ட ஆட்சியாகும். அதே மேற்குலக சக்திகளின் தேவைகள், நலன் கள், ஆதிக்கம் நிலவவேண்டும் என்பதால் இந்த ஆட்சிக்கு எவ்வித நெருக்கடியும் கொடாது அதைப் பாதுகாக்கவேண்டும் என்பதே அமெரிக்க, ஐரோப்பிய வல்லாதிக்கச் சக்திகளின் விருப்பாகும்.**

வல்லாதிக்கச் சக்திகளின் விருப்பாகும். ஆனாற் கடந்த ஜனவரி 8ம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சி மீண்டிருப்பின் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாத அமர்வில் அறிக்கை நிச்சயம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும். தமிழ் மக்களுக்காக அமெரிக்கா அழுவது போன்ற தோற்றம் காட்டப் பட்டிருக்கும். தமிழ்த் தலைமைகளும் போற்றிப் புகழ்ந்திருப்பார்.

மனிதஉரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானமும் அதன் தற்போதைய ஒத்திவைப்பும் இலங்கைத் தமிழர் நலன்கள் சார்ந்தோ அவர்களுக்கான அரசியல் தீர்வை மையப்படுத்தியயையல்ல என்பது இப்போது எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும் உண்மையாக விளங்கி இருக்கும். இதனை மாக்சிச லெனினிசவாதிகளும் புதிய நீதிப் பத்திரிகையும் பிற நேர்மையான இடதுசாரிகளும் முற்போக்கு ஜனநாயகவாதிகளும் ஆரம்ப முதலே சுட்டிக் காட்டி வந்திருக்கிறார்கள். ராஜபக்ச அரசாங்கத்தை அகற்றித் தமக்கான ஒரு அரசாங்கத்தைக் கொண்டுவருவதற்கு ஒரு எறிகயிறாகவும், பிடிகயிறாகவுமே அமெரிக்காவின் ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் இருந்ததென்பதே உண்மையாகும். இதனைச் சராசரித் தமிழ் மக்கள் அறிந் திருந் தனர்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

# மைத்திரி-ரணில் ஆட்சியின் 100 நாட்கள்



மைத்திரி- ரணில் ஆட்சி, 100 நாட்களில் நாட்டில் நல்லாட்சியைக் கொண்டு வருவோம் என்ற வாக்குறுதியுடனேயே பதவிக்கு வந்தது. ஏறத்தாழ ஐம்பது நாட்கள் தாண்டியும் புதிய ஆட்சி நல்லாட்சிக்கான அடிப் படை நிலைப்பாடு எதையும் எடுக்கவில்லை. அதனை மக்கள் கூர்ந்து அவதானித்து வருகின்றனர். இடைக்கால வரவுசெலவுத் திட்டத்திற் பதின்மூன்று அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைகள் குறைக்கப்பட்டன. அவற்றின் பலனாகப் பெரிய தாக்கம் எதுவும் விளையவில்லை. ஆனால் மேலும் பொறுத்திருக்குமாறே ஆட்சியாளர்களும் அவர்களது நெருங்கிய உயர்மட்டத்தினரும் கூறிவருகின்றனர். தாங்கள் இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கி வருவதாகவே பிரதமர் ரணில் கூறுகிறார். வெளிவிவகார அமைச்சர், இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் சென்று திரும்பியதுடன், ஐ.நா. மனித உரிமைகள் கழகத்தின் மார்ச் மாத அமர்வில் ஐ.நா. விசாரணை அறிக்கையின் முன்வைப்பை ஒத்திப்போடுவிக்க முயன்று அதில் வெற்றி பெற்று மீண்டுள்ளார். அதே வேளை, நிதி அமைச்சர் அமெரிக்கா சென்று சர்வதேச நாணய நிதியத்துடன் பேசிப் பெருந்தொகைப் பணம் பெற இணக்கம் ஏற்படுத்தி வந்துள்ளார். ஆனாற் சர்வதேச நாணய நிதியம் வழங்கும் பணத்திற்கான வட்டி பற்றியோ பிற நிபந்தனைகள் பற்றியோ வாய் திறக்கவில்லை. அதன் விளைவுகள் பாராளுமன்றத் தேர்தலுக் குப் பின்பே வெளிச்சத்திற்கு வரும்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## மலையக மக்களின் உடனடித் தேவை!

**சம்பள உயர்வு**

**20 பேர்ச் காணி உரிமை**

**தனி வீடு!**

**மக்களே அணிதிரள்வீர்!!!**



மலையகத் தமிழ் மக்களான பெருந் தோட்டத் தொழிலாளர் இதுவரை (200 வருடங்கள்) மிகக் கொடூரச் சுரண்டலுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வந்த மக்களாவர். அன்றைய கொலனித்துவ ஆட்சியாளர்கள் முதல் இன்றைய நவ-கொலனித்துவ ஆட்சியாளர்கள்வரை அவர்களுக்குரிய சம்பத்தை மறுத்துக் குறைந்த ஊதிய நாட்கூலிகளாகவே நடாத்தி வருகின்றனர். அத்துடன் அன்று கட்டிக் கொடுத்த சிறிய லயன் அறைகளிலேயே இன்றும் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டு வருகின்றனர்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

1ம் பக்கத் தொடர்ச்சி...

## அமெரிக்காவின்...

ஆனால் அதனை அறிந்தும் அறியாதவர்கள் போன்று ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக ஆட்சி அதிகாரச் சக்திகளைச் 'சர்வ தேசம்" என விழித்துத் தமிழ் மக்களுக்கு விமோசனம் தரப் போகும் மீட்பர்களாகவே தமிழர் தரப்புத் தலைமைகள் அக்கரைப்பச்சை காட்டிவந்தனர். தமிழ் மக்களைத் தமிழ்த் தேசியம் என்பதன் பேரில் அவ்வப்போது ஏமாற்றி வந்ததன் தொடர்ச்சியே சர்வதேசத் திடம் முறையிடுகிறோம். அவர்கள் எமக்கு நீதியான தீர்வுபெற்றுத் தருவார்கள். இதோ ஐ.நா. தலையிடுகிறது. அதோ அமெரிக்கத் தீர்மானம் வருகிறது. மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் விசாரணை அறிக்கை வெளியி வரப் போகிறது எனத் தமிழ் மக்களின் காதுகளில் பூச்சுற்றிவந்தார்கள். ஆனால் இப்போது அமெரிக்காவின் இரண்டக நிலை எத்தகையது என்பதைச் சாதாரண தமிழ் மக்கள் மேலும் பகுத்தறிந்து பார்ப்பது அவசியமானதாகும். குட்டக் குட்டக் குனிகிறவன் மடையனே தவிரக், குட்டுகிறவன் எப்போதும் கெட்டிக்காரனகவே இருப்பான் என்பதைத் தமிழ்த் தேசிய உச்சாடனம் செய்துவரும் தமிழ்த் தலைமைகளும் அவர்களது எசமானர்களும் எடுத்துக்காட்டி நிற்கின்றமை தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதில் இணைந்துள்ள கட்சிகளும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் வழிவழியாகவும் பாரம்பரியமாகவும் அந்நிய விசுவாசமும் வொள்ளை ஆதிக்க அடிமைத்தன மோகமும் கொண்டவர்கள். கொலனித்துவக் காலம் முதல் இன்றைய நவகொலனிய காலம் வரை அந்நிய அடிமை விசுவாசத்தில் ஊறித் திளைத்தவர்களாகவே இருந்து வருகிறார்கள். இதனாலேயே அவர்கட்குச் சிங்கள பௌத்த பேரினவாத மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்துடன் உள்ளார இணங்கிப் போகமுடிகிறது. அதனாலேயே இன்றைய மைத்திரி-ரணில் ஆட்சியின் தேசிய நிறைவேற்றக் குழுவிலும் கடந்த சுதந்திர-தினக் கொண்டாட்டத்திலும், கூட்டமைப்பின் ஆர். சம்பந்தனும்,எம்.ஏ. சுமந்திரனும் மனக் குளிர்ச்சியுடன் பங்கு கொண்டனர்.

எனவே இத்தகையவர்கள் மார்ச் மாத அமர்வில் விசாரணை அறிக்கை முன்வைக்கப்பட வேண்டும் எனச் சிலிர்த்து நிற்பது தமது மேற்குலக அடிமை விசுவாசத்தை மறைப்பதற்கும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு மக்களை உசுப்பிவிடுவதற்குமே அன்றி வேறு எதற்குமல்ல. ஆதலால் இத்தகைய கபோதித் தனம் கொண்ட தமிழர் தரப்புத் தலைமை களை இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பதே அரசியல் வழிச் சிந்தனைக்குரிய கேள்வியாகும். குருட்டுத்தனமும் மலட்டுத் தனமும் கொண்ட பிற்போக்குத் தமிழ்த் தேசியத்தை நிராகரித்து முற்போக்குத் தேசியத்தை முன்னெடுப்பது பற்றித் தமிழ் மக்கள் குறிப்பாக இளம் தலைமுறையினர் சிந்திக்க முன்வருவது அவசியம். அதன் மூலமே மாற்று அரசியல் பாதையில் சரியான இலக்கு நோக்கிப் பயணிக்கமுடியும். இல்லையெனில் தொடர்ந்தும் பாராளுமன்ற டப்பாங்கூத்து அரசியல் தொடர்வதைத் தவிர்க்கவியலாது.

1ம் பக்கத் தொடர்ச்சி...

## மைத்திரி–ரணில்...

அதே வேளை, நாட்டின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு பற்றி நல்லாட்சிக்கான மைத்திரி ரணில் ஆட்சி எந்த உறுதிமொழியையும் வழங்கத்தயாராக இல்லை. அண்மையில் இந்தியா சென்ற மைத்திரி பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட வேளை இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி ஒரு வார்த்தை தானும் பேசப்படவில்லை. இது இங்குள்ள மோடி விசுவாசிகளான தமிழ்த் தலைமைகளுக்கு தலை குனிவை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் அவர்களது இந்திய ஆளும் வர்க்க விசுவாசம் குறையவில்லை.

மைத்திரிபால சிரிசேனவை ஜனாதிபதியாக்குவதில் சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் அமோகமாக வாக்களித்தனர். ஆட்சி மாற்றத்தின் மூலம் தமது அடிப்படைப் பிரச்சினைகட்குத் தீர்வு கிட்டும் என நம்பினர். இதுவரை அவை பற்றி உருப்படியாக எதுவும் நடைபெற வில்லை. ஆட்சி அதிகாரத்தின் உயர்மட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்று மக்கள் மட்டங்களில் எதையும் செய்ய ஆட்சியினர் முயலவில்லை. பெருந் தொகையான தமிழ் அரசியற் கைதிகளுடன் முஸ்லிம், மலையகத் தமிழ் மற்றும் சிங்கள அரசியல் கைதிகள் அடையாளத்திற்குக் கூட விடுவிக்கப்படவில்லை. காணாமல் போன பெருந்தொகையானோர் பற்றி எப் பதிலும் தரப்படவில்லை. சிறைகளில் கொல்லப்பட்ட அரசியல் மற்றும் பிற கைதிகட்கான நீதி விசாரணை எதுவும் முன்னெடுக்கப் படவில்லை.

வடக்கு கிழக்கில் ராணுவம் ஆக்கிரமித்துள்ள வாழ்விடங்களும் விவசாய மற்றும் தொழில் இடங்களும் விடுவிக்கப்படவில்லை. அகதி முகாம்களிற் கடந்த 25 வருடங்களாக அகதிவாழ்வு வாழ்வோருக்குத் தமது சொந்த இடங்கட்குத் திரும்பிச் செல்லும் வழிவகைகள் கூறப்படவில்லை. இவற்றுள் வடக்கே வலி வடக்கும் கிழக்கே சம்பூரும் உள்ளடங்குகின்றன என்பது குறிப்பிடவேண்டியதாகும். எனவே புதிய ஆட்சியின் 100 நாட்கள் திட்டமும் நல்லாட்சி என்பன யாருக்கானவை என்ற கேள்வி எழுகிறது. ஜே.ஆர். வழிந்த ரணிலும், சந்திரிக்கா வழிவந்த மைத்திரியும் புதிய பாதையில் அல்லாது பழைய பாதையிலேயே பயணிக்கிறார்கள். அதிற் சில அற்ப மாற்றங்களே தெரிகின்றன. அவை இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கானவையோ அல்லது ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கானவைகளோ அல்ல. இவ்வாட்சியும் மேட்டுக்குடி உயர்வர்க்க மற்றும் அந்நிய சக்திகளுக்கான ஆட்சியே என்பதை ஐம்பது நாள் நல்லாட்சியின் போது காணமுடிகிறது.

1ம் பக்கத் தொடர்ச்சி...

## மலையக மக்களின்...

அது மட்டுமன்றி அந்த லயன்களும் அவர்களுடைய சொந்த இருப்பிடம் அல்ல. அதே வேளை அவர்களது கல்வி, சுகாதாரம், மற்றும் பிற சமூக வாழ்வுக்குரிய தேவைகளைப் பெற முடியாத நிலையில் குடிமக்களுக்குரிய எவ்வித உத்தவாதமோ பாதுகாப்போ இன்றி வாழ்ந்து வருகிறார்கள். இன்று மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இன அடையாளம் பெற்று நிற்கும் இலங்கைப் பிரசைகள். ஆனால் அவர்களுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

எனவே அவர்களது இருப்பையும் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்த வேண்டுகிற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இரண்டு நூற்றாண்டைக் காணப் போகும் மலையக மக்களுக்கு, 20 பேர்ச் நிலம் வழங்கப்பட வேண்டும். அதில் தனி வீடு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். அதே வேளை, வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். இன்றைய நாட் சம்பள முறை அகற்றப்பட்டு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பள நிர்ணய சபை ஊடான மாதச் சம்பளமும் உயர்வும் வழங்கவேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாகும். இவற்றைப் பெறுவதற்கு அமைச்சுப் பதவி பெற்ற மலையகத் தலைவர் எவரையும் நம்பி எப் பயனும் ஏற்படாது. அதேபோன்று பதவி இழந்து அதனை அடையத் துடிப்போரை நம்பியும் பயன் இல்லை. மலையகத் தொழிலாளர்களுக்கு உள்ள ஒரே மார்க்கம் வெகுஜனப் புரட்சிகரப் போராட்டம் மட்டுமேயாகும். எனவே புதிய கொள்கையுடன் புதிய பாதையில் மக்கள் தலைமையைக் கட்டியெழுப்பி முன்செல்லவேண்டும்.

# தலவாக்கெலை இளைஞனின் உயிரிழப்புக்குப் புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியின் மாத்தளை மாவட்ட அமைப்பு கண்டனம்

### பொலீஸாரின் அதிகாரப் போக்கை வன்மையாக கண்டிக்கின்றோம்
### ஒரு இளைஞனின் உயிர் இழப்புக்கு யார் பதில் கூறுவது

கடந்த சனிக்கிழமை மாலை தலவாக்கலை நகரில் "பாபுல்" வெற்றிலையை கையில் வைத்திருந்த தலவாக்கலை கிறேட்வெஸ்டன் கல்கந்தவத்தை தோட்டத்தைச் சேர்ந்த 21 வயது நிரம்பிய மாரிமுத்து மனோஜ் என்ற இளைஞனை சிவில் உடையில் கடமையில் ஈடுப்பட்டிருந்த பொலிஸார் இருவர் கைது செய்து விசாரனைக்காக அழைத்து செல்வதற்கு முன், இளைஞனை முச்சக்கரவண்டியொன்றில் உட்கார வைத்து பொலிஸார் வேறு யாருடனோ உரையாடிக்கொண்டிருக்கும் போது பிடியில் இருந்து தப்பி ஓடிய இளைஞன் மேல் கொத்மலை நீர்தேக்கத்தில் பாய்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கைதுச்செய்யப்பட்ட ஒருவரை பாதுகாப்பாக பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லத் தவறிய பொலீஸிசாரின் கையாலாகாதனத்தால் தப்பி ஓடியதாக கூறி விரட்டிச் செல்லப்பட்ட போது உயிரிழந்த சம்பவத்தை புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியின் மாத்தளை மாவட்ட அமைப்பு வன்மையாகக் கண்டிப்பதோடு மனோஜின் பிரிவால் வாடும் அவரின் குடும்பத்தாரின் துயரில் எமது அமைப்பும் பங்குக் கொள்கிறது என அதன் செயலாளர் தோழர் சுரேன் குறிப்பிடுகின்றார். அமைப்பு சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுவதாவது.

மலையகத் தேசிய இனம் காணி, வீட்டுரிமைக்கான வெகுஜன போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் இத் தருணத்தில் ஒரு மலையக இளைஞனின் உயிரிழப்பானது ஈடுச்செய்ய முடியாததாகும். கைதுச் செய்தவரை பாதுகாப்பாக பொலீஸ் நிலையத்திற்கு அழைத்து செல்ல அருகதையற்ற இரு பொலீஸாரையும் கடமையில் இருந்து இடைநிறுத்தாது, உடனடியாக இடமாற்றம் வழங்கியிருப்பதானது ஓர் இளம் உயிரின் இழப்பையும் மக்களின் நியாயமான உணர்வலைகளையும் மதிக்காத செயலாகவே பார்க்கப்படவேண்டியுள்ளது. இளைஞன் நீர்தேக்கத்தில் பாயும் சந்தர்ப்பத்தை உருவாக்காமல் தவிர்த்திருக்கலாம். ஆதலால் இளைஞனின் உயிரிழப்பிற்கு பொலிஸாரே காரணம் என கூறி மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். மக்களின் உணர்வுகளையும் ஒன்றுகூடி எதிர்ப்பைத் தெரிவிக்கும் உரிமையைக் கண்டுக்கொள்ளாது அடக்கு முறையை பிரயோகித்தமையானது வன்மையாகக் கண்டிக்கபட வேண்டியதாகும். இச்செயல் எதிர்காலத்தில் அனைத்து சாதாரண மக்களுக்கும் அச்சுறுத்தலாகவே அமையும் என்பதையே காட்டி நிற்கின்றது.

சுரேன்
மாவட்ட செயலாளர்

# வைத்தியசாலையும் அடிப்படை தானே?

உண்ணஸ்கிரிய(எல்கடுவ) நான்கு பிரிவுகளைக்கொண்ட அதிக மக்கள் தொகையையும் கொண்ட தோட்டப்பகுதியாகும். அப்பிரதேச மக்களின் தேவைக்காக ஓரளவு வசதிக்கொண்ட தோட்ட மருத்துவமனை காணப்பட்டது. மகப் பேற்று நிலையம் அம்புலன்ஸ் என்பனவும் இருந்துள்ளது. இன்று அந்த வைத்தியசாலை இயங்காது கட்டடத்திற்குள் புல் முளைத்து பயன்பாடற்று கிடக்கிறது. இதனை மக்கள் வெளிப்படுத்தியும் இன்று வரை தீர்வு கிடைக்கவில்லை அம்மக்கள் தம் வைத்திய தேவைக்கு 13 km தூரம் உள்ள வத்தேகம வைத்தியசாலைக்கோ அல்லது 22 km தூரம் உள்ள மாத்தளை நகரத்திற்கோ செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலையிலேயே மக்கள் காணப்படுகின்றனர். பாழடைந்த வைத்திய சாலை அமைந்துள்ள இடத்திலிருந்து 45 km தூரத்தில் உள்ள மிக மோசமான பாதையை கொண்ட செங்கசாடு புதுக்காடு போன்ற தோட்டங்களும் காணப்படுகின்றன. உயிருக்காக போராடும் ஒருவரை வத்தேகம மாத்தளை வைத்தியசாலைக்கு கொண்டு போகும் போதே அவரின் நிலை கவலைக்கிடமாகும். முன்பு இயங்கிய வசதியுள்ள வைத்தியசாலை கட்டடம் இருந்தும் அதனை புனரமைக்காத மீள இயக்க விருப்பம் இல்லாத அனைத்து தரப்பினரும் குற்றவாளிகளே. மலையக மக்கள் அரச சுகாதார கட்டமைப்பிலிருந்து புறக்கணிக்கப் பட்டுள்ளனர் என்பது இதிலிருந்து புலனாகிறது. மக்களும் பிரச்சினையை அம்பலப்படுத்தி நியாயம் கேட்க வேண்டும் என்பதே மக்கள் மத்தியில் உள்ள ஒரே தெரிவாகும்.

# லயத்து வாழ்க்கை வேண்டாம்

## 20 பேர்ச் காணி, வீட்டுரிமை வேண்டும்

### மாத்தளையில் சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி



மலையக மக்களுக்கு 20பேர்ச் காணி வீட்டுரிமையை வலியுறுத்தி, சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு மாத்தளையில் 2015.03.01 (ஞாயிற்றுக்கிழமை) மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்தியிருந்தது. இவ்வார்ப்பாட்டப் பேரணிக்கு புதிய ஜனநாயக மா.லெ கட்சி, முன்னிலை சோசலிக்கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகளும் அடையாளம், மொன்லார், மலையக சமூக ஆய்வு மையம் போன்ற சிவில் அமைப்புகளும் பல இளைஞர் அமைப்புகளும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. 20பேர்ச் காணியுரிமை,கிராமிய கட்டமைப்புடனான தனி வீடு,வாழ்க்கை செலவுக்கேற்ற சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளுடன் மனிதர் தான் மனிதர் தான் நாங்களும் மனிதர் தான், வேண்டும் வேண்டும் 20 பேர்ச் காணி வேண்டும் என்ற பல்வேறு கோசங்களுடன் மக்கள் ஊர்வலமாக சென்றனர். மாத்தளையில் உரிமைக்காக மக்கள் உணர்வுபூர்வமாக ஒன்று கூடிய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

# பதவிப் போட்டியில் கிழக்கின் தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிக்கப்படுகிறார்கள்

–சாமித்தம்பி

கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்துத் தம்மவரை முதலமைச்சராக்கியுள்ளது. அதற்காக முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைவர் ரவூஃபும் செயற்பட்ட விதம் மோசமான சந்தர்ப்பவாதமாகும். முஸ்லிம் காங்கிரசும் ஏனைய இரண்டு அல்லது, மூன்று முஸ்லிம் கட்சித் தலைமைகளதும் நிலைப்பாடு யாதெனில் எவர் பதவிக்கும் அதிகாரத்திற்கும் வருகிறார்களோ அவர்களோடு சேர்ந்து அமைச்சுப் பதவி பெறுவதும் அதிகாரத்தில் பங்கு கொள்வதுமாகும். அதனால் சாதாரண முஸ்லிம் மக்களுக்கு இதுவரை நன்மை எதுவும் வந்ததுமில்லை, இனி வரப்போவதுமில்லை என்பதே உண்மை. கடந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி பெற்றுச் 'சீருஞ் சிறப்புமாக' இருந்து வந்த இரண்டு அமைச்சர்களான ரவூஃப் ஹக்கீமும் ரிசாட் பதியூதீனும் குத்துக்கரணம் அடித்துத் தற்போதைய ஆட்சியிலும் கௌரவ அமைச்சர்களாகிக் கொண்டனர். இத்தகைய பச்சோந்தி அரசியலையும் அதன் தலைவர்களையும் முஸ்லிம் மக்கள் தான் விசாரிக்க வேண்டும்.

இந்நிலையிற் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் உடன்பாடு ஏற்படவில்லை. தமிழர் தரப்பு தமக்கே முதலமைச்சர் என முரண்டு பிடித்தது. முஸ்லிம் காங்கிரஸ் தானே முதல்வர் பதவியைத் தொடர வேண்டும் என்றது. ரவூஃப் ஹக்கீம் தனது பழைய கூட்டாளியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து சகோதர முஸ்லிம் கட்சிக்கும் காய் வெட்டித் தனது கட்சியின் ஆட்சியை அமைத்தார். அதனால் முஸ்லிம் கட்சிகட்குள்ளும் மோதல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் மோதல். எல்லாம் பதவிகட்கும் பணச் சுருட்டல்கட்கும் அதிகாரச் சுவைத்தலுக்குமானவையே. கிழக்கு மாகாணம் ஏற்கெனவே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிடிக்குள் படிப்படியாக இறுகி வரும் மாகாணமாகும். அங்கு தமிழ் முஸ்லிம் முரண்பாட்டை வளர்த்துக் குரங்கு அப்பம் பங்கிட்ட கதை போன்றே விடயங்கள் நடந்துள்ளன. அதைப்பற்றி அக்கறையற்ற முஸ்லிம் தலைமைகள் அதிகாரத்திற்கும் பதவிக்கும் துடியாய்த் துடிக்கின்றன. அதேவேளை தமிழ்த் தேசியம் என உரத்துக் கூறித் தமது ஆதிக்க அரசியலைப் பேணத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படு கிறது. இங்கு முக்கியமான விடயம், தமிழ் முஸ்லிம் குறுந் தேசியவாதங்கள் தமக்குள் மோதுவதாகும். அதற்குத் சாதாரண தமிழ் முஸ்லிம் மக்கள் பலிக்கடாக்களாகின்றனர். அதனாற் கிழக்கில் இன ஒடுக்குமுறைக்கு உட்படும் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு அற்ப முரண்பாடும் தமிழ் முஸ்லிம் என்று பகை நிலையாக்கப்படுகிறது. அதனாற் சாதாரண உழைக்கும் வர்க்கமாக வாழ்வோடு மல்லாடி வரும் முஸ்லிம்கள் தமது மத அடையாளமான தொப்பியை தலையில் இறுக்கியவாறு தமிழ் மக்களை எதிர்த்து நிற்கத் தலைப்படுகின்றனர்.

அதேவேளை தமிழர்கள் தமிழ்த் தேசியம் என்று தமது வேட்டியை இறுக்கிச் சால்வையைத் தலையிற் கட்டி நிற்கின்றனர். இவ்வாறான அடையாள அரசியல் உழைக்கும் வர்க்க அரசியலுக்கு அப்பாற் சொத்து சுகம் பதவி அதிகாரம் படைத்த அந்தந்த அரசியற் தலைமைகளால் ஏமாற்றப்படுகின்றனர். தேர்தல்கள் வழியே அரசியலில் நன்கு முதலிடும் இவர்கள் அதன் மூலம் லட்சங்களாகக் கோடிகளாகப் பணம் சொத்து சுகம் தேடுவதுடன் சமூகத்தின் உயர் அந்தஸ்தையும் பெற்றுத் தத்தமது மக்களின் முதுகுகளிற் சவாரி செய்து வருவதையே காண முடிகிறது.

# தமிழ்த் தேசியவாதிகளின் சுடலை ஞானம்

இப்போது தமிழ்த் தேசியவாதிகட்குச் சில உண்மைகள் விளங்குகின்றன. சில வேளை ஏலவே விளங்கியதை ஏற்கக் கூடிய நிலைமை இப்போதுதான் உருவாகி இருக்கலாம். ஆனாலும் அடிப்படையிலேயே நேர்மையற்ற ஒரு கண்ணோட்டம் தமிழ்த் தேசியவாதத்தின் போட்டியிடும் தரப்புகளிடையே உள்ளது.

எவ்வாறு 1965இல் யூ.என்.பியின் தலைவர் டட்லி சேனநாயக்கவை நம்பித் தமிழரசுக் கட்சி முட்டாளானதோ. அவ்வாறு, 2015இல், சரியாக 50 வருடங் கழித்து, ரணில் விக்ரமசிங்ஹவை நம்பி ஏமாற அக் கட்சியின் வாரிசான த.தே.கூ. அந்தரிக்கிறது.

எவ்வாறு இந்திய அரசாங்கம் 1978க்குப் பின்பு தமிழ்மக்களின் பிரச்சனையைத் தனக்கு வாய்ப்பாக்கியதோ அவ்வாறே 2009இற் போர் முடிவதற்குச் சற்று முன்பிருந்து மேற்குலகு மனித உரிமை, போர்க் குற்றங்கள் ஆகியவற்றைத் தனது ஆயுதங்களாக்கியது. இந்தியா ஜயவர்தன ஆட்சியை இலக்கு வைத்து இயங்கியது. இந்தியக் கணக்குக்கள் இடையிலே கொஞ்சம் பிழைத்தாலும் அது அமைதிப் பேச்சுக் காலத்தைத் தனக்கு வாய்ப்பாக்கி இலங்கை அரசாங்கத்துடன் இணக்கங் கண்டது. மேற்குலகு, தான் இந்தியாவிடம் 1987இல் இழந்த அரசியல் மேலாதிக்கத்தை 1990களில் மீளவும் தன் வசமாக்கியது. 2002இல் தனக்குக் கூட நெருக்கமான யூ.என்.பி. பாராளுமன்ற அதிகாரத்திலிருந்த போது அமைதிப் பேச்சுக்களின் மூலம் தனது செல்வாக்கை மேலும் வலியுறுத்த முயன்ற போது, விடுதலைப் புலிகள் அமெரிக்காவின் சமாதான அக்கறை யையும் அதன் கூட்டாளிகளான ஐரோப்பிய நாடுகளின் தோற்றப்பாடான அனுதாபத்தையும் பிழையாக விளங்கினர். விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி அடக்குவதில் மேற்குலகும் இந்தியாவும் உடன்பட்டபோதும், அவற்றின் திட்டங்கள் வேறுபட்டன. பாராளுமன்ற இடதுசாரி களும் கண்மூடித் தனமாகப் புலிகளை ஆதரித்த இடதுசாரிகளும் இவற்றை விளங்கத் தவறினர் என்பதும் உண்மை. விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுகட்கு உடன்பட்டது தான் அவர்களுடைய தவறு என்று இப்போது சொல்லுகிற தமிழ்த் தேசிய ஞான சூனியங்களும் உள்ளன. உண்மை ஏதெனினின் புலிகளின் சரணாகதி அல்லது பூரண அழிவு என்ற முடிவை அமெரிக்க 2001ம் ஆண்டே எடுத்து விட்டது.

இப்போது, ராஜபக்ச ஆட்சி தொடர்ந்திருந்தால் மேற்குலகின் அழுத்தங்கள் ஜெனீவாவில் மேலும் தொடர்ந்திருக்குமெனவும் அதனாற் தமிழர்கள் நன்மை பெற்றிருப்பர் எனவும் ஒரு தமிழ்த் தேசியவாதக்குழு நமக்குக் காதிற் பூச் சுற்றுகிறது.

மேற்குலகின் நோக்கம் இலங்கையிற் தமக்கு உடன்பாடான ஒரு ஆட்சியை நிலை நிறுத்துவது மட்டுமேயெனின், ராஜபக்சவால் எவ்வளவு காலத்துக்குத் தாக்குப் பிடித்திருக்க இயலும்? எப்போது ராஜபக்ச மனம் மாறுகிறாரோ அப்போதே மனித உரிமை, போர்க் குற்ற நெருக்குவாரங்கள் விலகிவிடும். அல்லது ராஜபக்சவின் இடத்தில் இன்னொரு அமெரிக்க சார்பு சனாதிபதி ஆட்சி சதிப் புரட்சி மூலம் வந்தாலும் எல்லா ஜெனீவாத் தீர்மானங்களும் காற்றோடு போயிருக்கும். முற்கூறிய பூச்சுற்றால் ராஜபக்ச ஆட்சிக்கு ஒரு தரப்பினர் வழங்கிய மறைமுக ஆதரவிற்கான அறிவுசாராத நியாயப்படுத்தல் மட்டுமே.

மாக்சிய லெனினியர்கள் மட்டுமே, தேசிய இனப் பிரச்சனை போராக்கப்பட முன்பிருந்தே, நிலைமைகளைச் சரியாகச் சொல்லி வந்தனர். ஏனெனில் அவர்கள் அரசியலை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தனர்.

த.தே.கூ. ஒரு இக்கட்டில் உள்ளது. ராஜபக்ச இருந்தளவும் அவர்களுடைய இயலாமைகட்கு நல்ல சாட்டுக்கள் இருந்தன. இனி அது இயலாது. இனியாவது, தமிழர் அரசியல் அயல்நாடுகள் பற்றிய நெட்டைக் கனவுகளிலிருந்து விடுபடுமா?

# ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று சம்பந்தனும், சுமந்திரனும் நினைக்கிறார்கள். சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட போது தேசிய கீதத்தை அவர்கள் தமிழிற் பாடியிருப்பார்களா சிங்களத்திற் பாடியிருப்பார்களா அல்லது ஈழத் தமிழ்த் தேசிய கீதத்தின் சொற்களை உச்சரித்திருப்பார்களா?

தமிழரசுக்கட்சியானாலும்கூட்டணியானாலும் கூட்டமைப்பானாலும் எதிலும் ஸ்தாபனக் கட்டுப்பாடு இருந்ததில்லை. தனிமனித அதிகாரப் போட்டிகள் 1960கள் முதலாகத் தமிழரசுக் கட்சியைப் பீடித்தன. செல்வநாயகத்தின் மறைவுடன், தோற்றப்பாடான ஒற்றுமையும் காற்றோடு போயிற்று.

1957ம் ஆண்டு முதல் தமிழரசுக் கட்சி சுதந்திர தினம் கொண்டாட மறுத்தது. சில தடவைகளிற் கறுப்புக் கொடியையும் ஏற்றியுள்ளது. இப்போது என்ன மாறிவிட்டது? தமிழ்ப் பாடசாலைகளிற் சிங்களம் கற்பிக்கத் தடைகளை உருவாக்கியது. ஆனாற் தமிழரசுத் தலைவர்கள் சிலரின் பிள்ளைகள் இரகசியமாகச் சிங்களம் படித்தனர். சிங்களம் படியாதே என்ற அறிவுறுத்தல் காலத்திற் கரைந்து போனது. சிங்கள அரசாங்கத்தில் மந்திரி பதவி ஏற்றதற்காக ஜீ.ஜீ. பொன்னம்பலத்தைச் சாடியவர்கள் பதினேழு ஆண்டுகளில் தமக்கு ஒரு அமைச்சுப் பதவியைப் பெற்றனர். 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் என ஒன்றை எடுத்தமையே இப்போது த.தே.கூ.வுக்கு மறந்து விட்டது

வட மாகாண சபைத் தேர்தலை அறிவித்த நாள் தொட்டுக் கூட்டமைப்பு அரசியல் குத்து வெட்டு அரசியலாகவே இருந்துள்ளது. அற்ப அதிகாரமுள்ள அமைச்சர் பதவிகட்காகப் பகிரங்கமாகவே வசைமொழிகள் பரிமாறப்பட்டன. அப் பழக்கம் மாறவில்லை. ஒருபுறம் மூடு மந்திரமான காரியங்கள். இன்னொருபுறம் தனிப்பட்ட அதிருப்திகளைப் பொதுப் பிரச்சனையாக்கும் அற்பத்தனங்கள். இவற்றையே கடந்த இரண்டாண்டுகளாக வட மாகாண சபை நமக்குக் காட்டியுள்ளது.

இப்போது கட்சியைக் கலந்தாலோசியாமல் தலைவரும் உப-தலைவரும் சுதந்திர தினம் கொண்டாடப் போயிருந்ததைப் அக் கட்சிப் பிரமுகரான பேராசிரியர் சிற்றம்பலம் என்பவர் பகிரங்கமாகக் கண்டித்துள்ளார். ஒரு ஒழுங்கு மீறிய செயலைக் கண்டிக்க இன்னொரு ஒழுங்கு மீறிய செயல் சரியாகாது. தமிழ்த் தேசிய அரசியல் நிறுவனங்களில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் முதல் அவருடைய பேரன் வரை, தமிழரசுத் தந்தை முதல் தம்பி பிரபாகரன் வரை, நிறுவனக் கட்டுப்பாடும் சனநாயக ஒழுங்கும் பற்றி அறியாதோராகவே இருந்துள்ளனர். இது தமிழ்த் தரப்புகளின் ஆதிக்க அரசியலின் அடையாளமாகும்.

தனிப்பெருந் தலைவர்கள் என்ற வழமையின் இடர்பாடுகளில் முக்கியமானது யார் அத் தலைவரென முடிவெடுப்பதாகும். விடுதலைப் புலிகளின் விடயத்திற் குறைந்தபட்சம் கட்சி சார்பாக யார் பேசுவது என்ற விடயத்திலாவது தெளிவான கட்டுப்பாடுகள் இருந்தன. ஆனாற் சனாதிபதித் தேர்தல் பற்றிக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை அறிவிக்கு முன்பே ஒரு முந்திரிக் கொட்டைச் சிற்றரசர் தனது நிலைப்பாட்டைத் த.தே.கூ நிலைப்பாடென அறிவித்தார். இன்னொருவர் த.தே.கூ. முடிவுக்குத் தான் உடன்பாடில்லை எனத் தெரிவித்து ஒரு மாற்று ஆலோசனையை முன்வைத்தார்.

சனநாயகம் என்பது தெரியாது மீண்டும் ஒருமுறை ஆள நினைக்கும் ஆண்ட பரம்பரை, தான் போகத் தெரியாத மூஞ்சூறுகள் தமிழீழத்தையும் இழுத்துக் கொண்டு போன கதையைத் திரும்பத் திரும்ப நடத்திக் காட்டுகிறது.

# எட்டாத பழத்துக்கு இன்னுமொரு கொட்டாவி?

இந்த நாட்டை ஆளப் போவது யார் என்பதைத் தமிழரே தீர்மானிப்பர் என்ற பிரகடனம் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினது. அது 1965ம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கு முன்பு சொல்லப்பட்டாதா அல்லது பின்பு சொல்லப்பட்டதா என நிச்சயமில்லை. அனேகமாகப் பின்பு என்றே நினைக்கிறேன். 1970ம் ஆண்டு அந்த வீம்புப் பேச்சு அடங்கிப் போய் "இனிக் கடவுள்தான் தமிழரைக் காப்பாற்ற வேண்டும்" என்று தலைமேற் கைவைத்ததை நான் மறக்கவில்லை. ஆனால் எந்த எல்லாம் வல்ல கடவுள் நினைத்தாலும் தமிழரைக் காப்பாற்ற இயலாதபடி முட்டாள்தனமான காரியங்களையே செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சி முதல் அதன் நேரடி வாரிசான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை செய்துவந்துள்ளன.

சிங்களவர் மட்டுமே இருக்கக்கூடிய ஒரு அமைச்சரவையை வகுக்க டி.எஸ். சேனநாயக்காவுக்குத் திட்டந் தீட்டிக் கொடுத்தவர் என்று அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் பற்றிப் பேசப்படுகிறது. அந்தத் தமிழரும் ஆளப் போகிறது யார் என்பதைத் தீர்மானித்த பெருமைக்குரியவர்தான். 1977இல் ஜயவர்தனவின் வெற்றியிலும், தீர்மானமான பங்காக இல்லாவிடினும், சொல்லத்தக்க ஒரு பங்கைத் தமிழரசுக் கட்சி வகித்தது. இப்போது மீண்டுமொருமுறை எங்கள் ஆண்ட பரம்பரை இந்த நாட்டை ஆளப்போவது யார் என்பதைத் தமிழரே தீர்மானித்துள்ளனர் என மார்தட்டிக் கொள்கிறது.

ஆளப் போகிறவர்கள் யார் என்பதைத் தீர்மானிப்பதில் ஒரு கணப் பொழுதின் பெருமை இருக்கும். ஆனால் அக் காரியத் தின் பெறுமதி தான் முக்கியமானது. எனினும் த.தே.கூ.வுக்கும் அதன் முன்னோடியான தமிழரசுக் கட்சிக்கும் இவ்வாறான வீம்புப் பேச்சுக்களில் ஒரு அரசியல் ஆதாயம் உள்ளது. தமிழ் மக்கள் ஒன்றுபட்டுத் தம்மைத் தேர்ந்தெடுத்தால் தமிழருக்கு இந்த நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வலிமை இருக்கும் என்று சொல்லித் தமிழ் மக்களை மயக்கித் திரும்பத் திரும்ப ஏய்க்க அவர்கட்கு இயன்றுள்ளது.

1977க்குப் பின் அவர்களுடைய நம்பகம் அழிந்து போன பிறகு, இப்போதுதான் முதன் முறையாக அவ்வாறான வீம்புப் பேச்சு மீண்டுள்ளது. எனினும் அவர்கள் உரிமை கொண்டாடும் இந்த வெற்றியோ ஒன்றரை ஆண்டுகள் முன்பு மாகாண சபைத் தேர்தலில் அவர்கள் பெற்ற மகத்தான வெற்றியோ உண்மையில் அவர்களை நம்பித் தமிழ் மக்கள் அவர்கட்கு வழங்கிய வெற்றியல்ல. ராஜபக்ஸவின் இனப் படுகொலை ஆட்சியை நிராகரிப்பதாகத் தமிழ் மக்கள் செய்த பிரகடனங்களே அவை. எனினும் இது வரையும் த.தே.கூ. தலைமைகள் தாங்கள் வென்று தருவதாக உறுதியளித்த பல விடயங்களைச் சாதிக்கத் தடையாக இருந்தது ராஜபக்ஸ ஆட்சியே என்று முறைப்பட்டுச் சமாளித்தார்கள். இப்போது அவர்கள் தீர்மானித்ததாக உரிமை கோருகிற ஒரு ஆட்சி வந்திருக்கிறது. இனி மேல் என்ன சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிப்பது என்பதை அவர்கள் இப்போ திருந்தே திட்டமிடுவது நல்லது. ஏனென்றால் அடுத்த பொதுத் தேர்தல் வரை மைத்ரிபால தேசிய இனப் பிரச்சனை பற்றிய எந்த நகர்வையும் மேற்கொள்ளமாட்டார்.

தமிழ்த் தலைமைகள் சங்கடமான ஒரு நிலையிலுள்ளன. இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க எவ்வளவு தூரம் செல்லும் என்பது நிச்சயமற்றது. தென்னிலங்கையிற் பேரினவாதிகளின் குரல்கள் இன்னமும் வலுவாக உள்ளன. எனவே 13வது சட்டத் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுமளவுக்குக் கூட மைத்ரிபால அரசாங்கம் துணியுமா? ஜே.வி.பியினதும் ஜாதிக ஹெல உருமயவினதும் நிலைப்பாடுகள் எவ்வாறு இருக்கும்? தென்னிலங்கையின் பேரினவாத ஊடகங்களின் விஷமத்துக்கு முகங்கொடுத்துத் துணிவாக ஒரு முடிவெடுக்க மைத்ரிபால ஆட்சிக்கு முடியுமா?

இந்தியா இரட்டை வேடமிட்டு மைத்ரிபாலவின் வெற்றிக்கு மறைமுகமாக உதவியது. அமெரிக்காவும் உதவியது. நரேந்திர

தொடர்ச்சி 13ம் பக்கம்

# மலையக மக்களின் காணி வீட்டுரிமைக்கான மக்கள் இயக்கத்தை முன்னெடுப்போம்!

**மலையக மக்களுக்கு 20பேர்ச் காணி!**

**காணி உரிமையுடன் தனி வீடு!**

**கிராமிய கட்டமைப்பைக் கொண்ட வீடமைப்பு முறைமை!!**

மலையக மக்களே! ஐக்கியப்பட்டு முன்செல்ல வாரீர். மலையக தலைமைகளின் மாயைக்குள் வீழ்ந்து கிடந்தது போதும். எமக்காக நாமே குரல் கொடுப்போம். எமது காணி வீட்டுரிமையை வென்றெடுக்க வெகுஜன அரசியல் தளத்தில் அணிதிரள்வோம்.

மலையக மக்கள் இந்த நாட்டில் சுமார் இருநூறு வருடகால வரலாற்றுப் பாரம்பரியத்தோடு மலையக மண்ணிலே நிரந்தரமாக வாழ்ந்து வரும் ஒரு தேசிய இனமாகும். அவர்கள் அரசி யல் சமூக பொருளாதார பண்பாட்டுத் தளங்க ளில் தொடர்ந்தும் சுரண்டலுக்கும் அடக்கு முறைகளுக்கும் முகம் கொடுத்து வந்திருக்கி றார்கள். இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்து வரும் முதலாளித்துவ பேரினவாத அரசாங்கங்கள் மலையகத் தமிழ் மக்களின் வர்க்க உரிமைகளையும் இன அபிலாசைகளையும் மறுதலித்தே வந்துள்ளனர். அத்தோடு ஜனநாயக வாழ்வுரிமைக்கான கோரிக்கைகளையும் வீடு, சுகாதாரம், கல்வி, போன்ற அடிப்படை வாழ்வாதார உரிமைகளையும் நிராகரித்துவந்த வரலாறே தொடர்கிறது. நாட்டின் "சுதந்திரத்திற்குப்" பின்னரான காலகட்டத்தில் மலையக மக்களின் தலைமைகளாக முன்னின்று வந்த தொழிற் சங்க அரசியல் தலைமைகள் தூர நோக்கற்ற குறுகிய அரசியல் செயற்பாடுகளினாலும் தமது சுயநல அரசியல் தேவைகளை முன்னிறுத்தியும் மலையக மக்களை சலுகைகளுக்குப் பின்னால் கையேந்தி நிற்கும் மக்கள் கூட்டமாக நிலை நிறுத்திக் கொள்வதற்கே வழிகாட்டி வந்திருக்கிறார்கள். பெருந்தோட்டத்துறை தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் தோட்டத் தொழிலாளர்கள் மீதான உழைப்புச் சுரண்டலும் மேலாதிக்கப் போக்கும் மென்மேலும் அதிகரித்தே வந்துள்ளது. எனவே அம்மக்களை அடக்கி ஆள்வதிலும் அவர்கள் மீதான உழைப்புச் சுரண்டலிலும் அரசு, தொழிற் சங்கங்கள், தனியார் கம்பனி கள் என்பன கூட்டு சதிகார கும்பல்களாகவே இருந்து வந்திருக்கின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் உயர் மலையகப் பிரதேசத்தில் இடம்பெறும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்ச்சியாக இம்மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் அவ்வப்போது காவு கொண்டு வந்திருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே அண்மையில் கொசலாந்த மீறியபெத்த தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவுப் பேரனர்த்தம் வரலாற்றில் துயர் மிகுந்த சாட்சியாகி நிற்கிறது. மிகவும் பழமையான பாதுகாப்பற்ற ஒழுங்கமைக்கப்படாத லயத்து வீடமைப்பு முறைகளும் இயற்கைக் கெதிரான மனித அழிப்பு நடவடிக்கைகளுமே இவ்வாறான பேரழிவுகளுக்கு காரணமென நில ஆய்வாளர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் மீறியபெத்த சம்பவத்தின் எதிரொலியாக மலையக மக்களின் காணி வீட்டுரிமைக்கான கோரிக்கை மக்களின் அடிப்படைத் தேவைக்கான குறைந்தபட்சக்கோரிக்கையாகஎழுச்சிபெறத் தொடங்கியிருக்கிறது. எனவே மலையக மக்களின் காணி வீட்டுரிமையினைப் பெற்றுக் கொடுக்கவும் தேசிய இன அடையாளத்தை வென்றெடுக்கவும் தொடர்ந்தும் கோரிக்கைகளை முன்வைத்து வரும் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிச கட்சி மலையக மக்களின் பிரதான தேவையாக முன்னெழுந்து நிற்கும் காணி வீட்டுரிமைக் கோரிக்கையினை வலியுறுத்தும் வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அறைகூவல் விடுக்கிறது.

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிச கட்சி
மலையகப் பிராந்தியக் குழு

இப் பிரசுரம் புதிய–ஜனநாயக மாக்சிச–லெனினிசக் கட்சியின் மத்திய குழுவின் சார்பில் இல 121, ஹம்டன் வீதி, கொழும்பு–06 இலிருந்து தேசிய அமைப்பாளர் இராகலை வெ. மகேந்திரனால் வெளியிடப்பட்டது.

# ரத்வத்த மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

ரத்வத்த மேற்பிரிவு மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருவது வாசிகசாலை அமைக்கப்படவேண்டும் என்பதேயாகும். தமது கிராமசேவகர் பிரிவிற்கு ஓதுக்கப்பட்ட பத்து இலட்ச ரூபாயிலிருந்து ஐந்து இலட்ச ரூபாவை பெரும் முயற்சி செய்து வாசிகசாலை அமைப்பதற்கு ஒதுக்கினர். தோட்ட முகாமையாளர் காணி வழங்க தனக்கு விருப்பம் எனினும் தன் மேலதிகாரிக்கும் தனது அமைச்சுக்கும் தகவல் கொடுத்து அவர்களின் அனுமதி பெறப்படவேண்டும் என கூறியுள்ளனர். ஆறு மாதத்திற்கு மேலாகியும் அனுமதி தரப்படாததால் ஒதுக்கப்பட்ட பணத்தினை அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் அவல நிலை உருவானது. நூற்றாண்டுக்காலம் தேசிய பொருளாதாரத்திற்கு உழைப்பை வழங்கி வரும் ஒரு சமூகத்தின் தேவையான வாசிகசாலை அமைப்பதற்கு ஒரு 6 பேர்ச் நிலத்தை வழங்க பாருங்கள் எவ்வளவு இழுத்தடிப்பு என்று.

ஆனால் அதே தோட்ட பிரிவில் மண்டபம் விகாரை அமைப்பதற்கு தோட்ட எல்லைக்கு அருகில் வாழும் சிங்கள மக்கள் நிலத்தை சுவீகரித்தனர். அதனை தடுக்க சக்தியில்லாத தோட்ட நிர்வாகம் 6 பேர்ச் நிலத்தை வழங்க சட்டம் பேசுகின்றது என்றால் சமூகத்தில் வேரூன்றியுள்ள இன சமூக பாகுபாடுகளைப் பற்றி விளங்கிக்கொள்வதற்கும் அதற்கு காரணமான சக்திகளை இனங்கண்டுகொள்வதற்கும் அதனை சமூகத்திலிருந்து அகற்றுவதற்கான வழிவகைகளையும் நாம் சிந்திக்க வேண்டும்.

கடந்த வருடம் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் எல்கடுவ ரோட்டலா டிவிசனின் சில பகுதிகளில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டதால் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்த கடும் எச்சரிக்கையினால் எல்கடுவ தோட் நிர்வாகம் அனர்த்த வலயத்தைச் சேர்ந்த 14 குடும்பத்தின் 74 பேரை பிரதேசத்திலிருந்து அகற்றி செம்புவத்தயில் உள்ள இயங்காத தோட்டத்தில் தங்கவைக்கப்பட்டனர். உணவு நிவாரணங்கள் வழங்கப்பட்டாலும் அப்பிரதேசம் வருங்காலத்தில் பாரிய அழிவை சந்திக்கும் என்பதே அனைவரினதும் கருத்தாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான இடத்தில் காணி வீட்டுரிமையுடன் கூடிய வீடமைப்பு திட்டத்தினை ஏற்படுத்தி கொடுப்பதே சிறந்த தீர்வும் இதுவே தோட்ட நிர்வாகம் அரசாங்கத்தின் பொறுப்புமாகும். இதனையே அம்மக்களுக்கும் கூறி வந்துள்ளனர் என்றாலும் இன்று வரை உருப்படியான எந்த காரியமும் நடைபெறவில்லை. மழை விட்டு வெயில் அடிக்க தொடங்கியதால் உங்கள் இடத்திற்கே செல்லுங்கள் என தோட்ட நிர்வாகம் கூறிவருகின்றது. காலங்காலமாக உழைப்பை வழங்கி பொருளாதாரத்திற்கு பங்காற்றி வருபவர்களுக்கு ஒரு துண்டு நிலம் கூட வழங்கத் தயங்கும் தோட்ட நிர்வாகம் அரசாங்கம் அதே எல்கடுவ பிரிவில் மைதானம் அமைப்பதற்கு 2 ஹெக்டேயர் நிலத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடதக்கது. மலையக மக்களின் காணி வீட்டுரிமை சம்பளம் போன்ற பிரச்சினைகள் என்றால தோட்ட நிர்வாகத்தோடு பார்த்துக் கொள்ளுங்கோ என கூறும் அரசாங்கம் தனக்கு (அரசாங்கம்) நிலம் வேண்டும் என்றால் கம்பனியிடம் பேசி உடனடியாக பெறும் போது மக்களின் பிரச்சினை என வருகின்ற போது தட்டிக்கழிக்கின்றது. இதற்கான காரணத்தை மக்கள் புரிந்துக் கொண்டு மாற்று வழி முறைப் பற்றி சிந்திக்க வேண்டும்.




## 01. 29.11.2014

இன்று மீரியபெத்த பேரவலம் நிகழ்ந்து ஒரு மாத நிறைவில் அம்மக்களின் அவலத்தை வெளிப்படுத்தும் முகமாக சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு உரனய அமைப்புகளின் ஏற்பாட்டில் பூனாகலை மாகந்த தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டிருந்த மீரியபெத்த மக்களுடனான காணி வீட்டுரிமையை வலியுறுத்திய பேரணியும் ஆர்பாட்டமும் இடம்பெற்றது.

எமது உறுப்பினர்களினால் ஏற்கனவே மக்களுக்கு போராட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது. இன்று காலை 9.00 மணியளவில் தொழிற்சாலை வளாகத்திற்குள் சென்று மக்களை தயார் படுத்தினோம். சில இளைஞர்கள் தமது கோரிக்கையை வெளிப்படுத்த தயாராக இருந்தாலும் பலர் இராணுவத்திடம் சென்று அனுமதி வாங்கப்போவதாகவும் அவர்களிடம் கூறாது பேரணியில் கலந்துக்கொள்வது சரியல்ல என்று அத்தனை இழப்புகளிற்கு பிறகும் யோசித்து நின்றனர். பெரும்பாலான இளைஞர்களும் மக்களும் இராணுவத்தை மீறி அணிவகுத்து முன்செல்ல ஏனையோர் கூனிக்குறுகி நின்றனர்.

பேரணியில் கலந்துக்கொண்ட சிலரும் "அண்னே அமைதியாகத்தானே செல்ல வேண்டும் இல்லாட்டி பிரச்சினை வரும் தானே என்றெல்லாம் பேசிக்கொண்டு கோசம் சத்தம் வேண்டாம் என்று உணர்வை உரத்து வெளிப்படுத்துபவர்களுக்கும் கட்டளையிட்ட வண்ணம் வந்தனர். பின் மாகந்த சந்தியில் கூடிய மக்கள் தம்மிடமிருந்து அகற்றப்பட்டிருந்த போராட்ட உணர்வை ஆழமாக வெளிப்படுத்தினர். இன்று பேரவலம் நடந்து ஒரு மாத நிறைவு என அவர்களின் வாக்குகளை பொறுக்கிய அனைவருக்கும் தெரிந்திருந்தும் போராட்டம் நிறைவு பெற சற்று முன்பு சுமார் 1.20 மணிவரை எங்களை தவிர எவனும் மக்களை சந்திக்க வரவில்லை. மக்கள் வீதியில் இறங்கி போராடுகிறார்கள் என தகவல் அறிந்ததும் செந்தில் தொண்டமான் அவ்விடத்திற்கு வந்தான். மீரியபெத்த மக்கள் தமது காணி வீட்டுரிமையை வழியுறுத்தி நடாத்திய போராட்டத்தை வெறும் உணவுக்கானதாக திசைத்திருப்பி முன் நின்ற அப்பிரதேசத்து இளைஞர்கள் சிலரையும் பயமுறுத்தினான்.

இச்சம்பவத்தின் ஊடாக நாம் கூற முற்படுவது இலங்கையில் மிக மோசமான சமூக அரசியல் பொருளாதார நிலையில் வாழும் மலையக மக்களின் எதிர்ப்புணர்வு போராட்ட உணர்வு கடந்த காலமாகவே வெளிப்படுத்தபடாது மழுங்கடிக்கப்பட்டது அம்பலமாகின்றது.

எந்நாளும் தமது பிரச்சினைகளுக்காக போராடவேண்டிய ஒரு சமூகத்தை உணர்வற்றதாக்கியிருப்பது வேதனைக்குரியது. இளைஞர்கள் கூட விழிப்புணர்வில்லாது சவால்களுக்கு முகம் கொடுக்க முடியா நிலமைக்கு மலையக தொழிற்சங்க தலமைகள் என்கின்றவர்களால் பழக்கவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலை மாற சந்தர்ப்பவாத பிற்போக்கு அரசியல் காட்போட்டுக்களை நிராகரித்து எமது பிரச்சினைக்காக நாமாகவே ஐக்கியப்பட்டு போராடும் மரபை ஏற்படுத்த வேண்டும் இந்நிலை ஆரோக்கியமான மலையக சமூகம் ஏற்பட நிச்சியம் வழிவகுக்கும் என்பதே இச்சம்பவம் எமக்கு தரும் படிப்பினையாகும் ●

## 2. 2015.1.10

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் பற்றிய கலந்துரையாடல் ரத்துவத்தை மேற்பிரிவு குறிஞ்சிக்கள இளைஞர்களினால் ஏற்பாடுச் செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்துக்கொள்ள சைக்கிள் தோழர்களாகிய எமக்கும் அழைப்பு வந்தது. கலந்துரையாடலில் பங்குக்கொண்ட கோவிந்தன் என்பவர் மைத்திரி வென்றுவிட்டார் நாமேல்லாம் வாக்களித்திருக்கின்றோம் சிறுபான்மை ஒட்டு இல்லண்னா வந்திருக்க முடியாது எங்கட U.N.P அரசாங்கம் வந்திருக்குது எங்கட ஆண்டு சும்மா பாருங்க அதிருமுள்ள அது இதுன்னு கலந்துரையாடல கதிகலக்கிட்டாரு குறிக்கிட்ட ராஜகோபால், மாறி மாறி இலங்கையை ஆண்ட 2 அரசாங்கங்களும் சாதாரண தொழிலாள விவசாய அரசாங்க தனியார் துறை ஊழியர்களின் அரசாங்கங்கள் அல்ல மாறாக உயர் பணக்கார மேட்டுக்குடி வெளிநாட்டு கம்பனிகள் முதலீட்டாளர்கள் பண முதலாளிகளின் அரசுகள். இதுல என்றுமே அதிக பொரும்பான்மையாக(அடி மட்ட மக்கள்) உள்ள எமக்கு எதும் நடந்ததும் இல்லை. இனி நடக்கபோவதும் இல்லை. நம்பள எப்படி கவுக்களானு ஆளுபவனுக்கு தெரியும். எங்கட பலவீனத்த பயன்படுத்தி இனவாதம் மதவாதம் சலுகை தேர்தல் தஞ்ஞுபடி அது இதுன்னு 66 வருசத்துக்கு மேல கவுத்துக்கிட்டு தான் வாறாங்க நாமும் அது சரியில்லனா இது இது ஒட்ட விழுந்தா அது ஏமாந்ததும் ஏமாறதும் தான் மிச்சம் என்றார். 66 வருட கால தேர்தல் அனுபவத்தை மக்கள் கொண்டிருந்தும் U.N.P விட்டு சுதந்திரகட்சியையும் அக்கட்சி சலித்து போனபின் மீண்டும் யு.என்.பியையும் ஆதரிக்கும் பண்பாட்டையே சிங்கள மக்கள் கொண்டுள்ளனர். தமிழ் முஸ்லீம் மலையக தேசிய இனங்களும் அவர் அவர் சமூக மேட்டுக்குடி உயர்வர்க்க தரப்பினரை ஆதரிக்கும் போக்கையே கொண்டுள்ளனர். இவ் உண்மையை ராஜகோபால் போன்ற சாதாரணமானவர்கள் புரிந்திருப்பது மிகுந்த நம்பிக்கை தருவதாக அமைந்தது. இதே போல் பெரும்பான்மையான அடிமட்ட மக்கள் புரிந்துக் கொண்டால் தான் எம்மை பீடித்திருகின்ற தரித்திரயங்கள் தகரும் என்ற நம்பிக்கையை இக் கலந்துரையாடல் எமக்கு எடுத்து காட்டுகின்றது ●

## 3. 14.1.2015

இன்று மலையக மக்களின் காணி வீட்டுரிமையை வழியுறுத்திய துண்டுப்பிரசுர சுவரொட்டி இயக்கம் நடத்த ஆயத்தமாகி காலை பத்து மணியளவில் புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியினருடன் சைக்கிள் தோழர்களாகிய நாமும் புறப்பட்டோம். ரத்தோட்டை நகரில் துண்டு பிரசுரங்களை விநியோகித்து பல்லத்தன்ன கம்மடுவ எலகல ஒபல்கல கட்டாரந்தென்ன தங்கந்த றப்பர்மல மிட்லண்ட் ஆகிய தோட்டங்களுக்கு சென்று வெற்றிகரமாக துண்டுபிரசுர இயக்கத்தினை நடத்தினோம். பகலுணவு கம்மடுவ நண்பரின் வீட்டில் சிறப்பாக நடந்தது. பின் கம்மடுவ நண்பர் சிவாவுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவரின் வீடு லயத்தில் அமைந்திருக்கவில்லை "சிவா இந்த வீடு கடனடிப்படையில் வழங்கப்பட்ட 7 பேர்ச் நிலமா? என கேட்டப்போது" "இந்த நிலம் சுமார் 12 ஏக்கரை கொண்டது .சந்திரிக்காவின் ஆட்சிக்காலத்தில் மொண்டி கொபல்லாவ இத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் நிலமற்றவர்களுக்காக பகிரப்பட்டது. இத்திட்டம் தோட்ட தொழிலாளர்களை மையப்படுத்தியதாகவே காணப்பட்டது. அதிகாரிகள் அதனை சிங்களவர்களுக்கு சாதகமாக மாற்றியமைத்ததோடு இன விகிதத்திற்கேற்ப கூட பகிரவில்லை. மருந்துக்காக ஓரிரு தமிழ்க் குடும்பங்களுக்கு 12 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது அதில் எங்கள் குடும்பமும் ஒன்று" என்றார் சிவா. வந்த திட்டங்களை பேரினவாத நோயிற்கு அகப்பட்டு அதிகாரிகளும் திட்டிய திட்டங்களை அரசாங்கங்களும் பேரினவாத நோக்கோடு செய்ததும் இன முரண்பாட்டை ஊக்குவித்தது. சிவாவின் வீடு 7 பேர்ச் அளவில் கட்டப்பட்டிருந்தது ●

புதிய நீதி
PUTHIYA NEETHI
පුදිය නීදි
முரசம் 04, முழக்கம் 01, பெப்ரவரி–மார்ச் 2015, பக்கம் 16, விலை ரூ. 30
இல, 15/4, மகிந்தாராம வீதி, கல்கிசை
தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல்: 0112 473 757
Web: www.ndmlp.org Email: Puthiyaneethi2012@gmail.com

# சம்பள உயர்வும் தனியார் துறையினரும்

மைத்திரி-ரணில் அரசாங்கம் தமது ஒரு மாத ஆட்சிக் காலத்தில் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து நிறைவேற்றியுள்ளது. அதன் மூலம் தனது தேர்தல் கால வாக்குறுதியின் ஒரு பகுதியை நிறைவேற்றினாற் பரவாயில்லை, அதாவது கிடைத்தது என்ற பொதுக் கருத்தை உருவாக்க முயன்றுள்ளனர். எரிபொருள்கள் மற்றும் ஒரு சில பொருட்களின் விலைக் குறைப்பு மூலம் ஏதோ பெரிய அளவிலான விலைக் குறைப்புகள் இடம்பெற்றிருப்பது போன்ற ஒரு தோற்றத்தைக் காட்டியுள்ளனர். ஆனால் அத்தியாவசிய அன்றாட உணவுப் பொருட்களில் தாக்கம் விளைவிக்கக் கூடியதான விலைக் குறைப்பு இடம்பெறவில்லை. முக்கியமாக, அரிசி விலை காட்டுப்பாட்டிற்குள் வரவில்லை.

மேலும் சம்பள உயர்வு விடயத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று பெரும் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறது. அதனை இரண்டாகப் பிரித்து ஜனவரியில் முதல் கட்டமும் யூன் மாதத்தில் இரண்டாவது கட்டமும் வழங்கப்படும் எனக் கூறியுள்ளது. இந்தப் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு மகிந்தரின் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வையும் உள்ளடக்கியே வழங்கப்படவுள்ளது. இப் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படவில்லை என்பதும் மேலதிகப் படியாகவே சேர்க்கப்பட்டுள்ளது என்பதும் கவனத்திற்குரியன. இப் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வுக்குரியோர் 14 லட்சம் அரசாங்க ஊழியர்கள் மட்டுமே. அதேவேளை சுமார் 70 லட்சம் தனியார் துறையினர் கைவிடப்பட்டுள்ளமை கண்டனத்திற்கு உரியது. அவர்களுக்கு வெறும் 2500 ரூபாவைக் கொடுக்கும்படி தனியார் நிறுவனங்களும். வேலை வழங்குவோரும் அரசாங்கத்தால் கேட்கப்பட்டுள்ளனர். அதற்கு அரசாங்கச் சட்டமோ வற்புறுத்தலோ கிடையாது. அரசாங்கத் துறையினரும் தனியார் துறையினரும் ஒரே வாழ்க்கைச் செலவின் கீழே ஒரே விதமாகப் பாதிக்கப்படுகின்றனர். அப்படியாயின் ஏன் இந்த வேறுபாடும் பாகுபாடும் என்பது பலத்த கேள்விக்குரியதாகும்.

கடந்த அரசாங்கத்தின் இறுதிக் கால ஆட்சியின் போது ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதம் ஐம்பதினாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவாகத் தேவைப்படுகிறது எனத் தொழிற்சங்கத் தரப்பில் கூறப்பட்டது. எனவே பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வேண்டும் என ராஜபக்ச ஆட்சியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. புதிய ஆட்சியினர் பெயரளவிற்குப் பத்தாயிரம் எனக் கூறிவிட்டு பழைய சம்பள உயர்வையும் சேர்த்தே பத்தாயிரம் எனக் கணக்குக் காட்டிக் கயிறு விட்டுள்ளனர். அண்மையில் அமைச்சர் கிரியல்ல கூறும் போது, தமது ஆட்சியின் விலைக் குறைப்பினால் வாழ்க்கைச் செலவில் 7500 ரூபா குறைந்துள்ளதாகக் கூறியுள்ளார். எனவே சம்பள உயர்வும் விலைக் குறைப்பும் வெறும் கண் துடைப்பு என்பது அவர்களுக்கே விளங்கும். ஏனெனில் ஆட்சியில் உள்ளவர்கள் எவரும் சாதாரண உழைப்பின் மூலமான வருமானம் பெறுவோர் அல்லர். பாராளுமன்ற, அமைச்சுப் பதவிகளில் பெறும் சம்பளங்கள், அலவன்சுகள் போன்றவற்றைப் போன்று பல மடங்கு வருமானம் ஈட்டும் சொத்துக்களுக்கு உரியவர்களே அவர்கள். அவர்கட்குத் தனியார் நிறுவனங்களிற் பெரும் முதலீட்டின் மூலமான சுரண்டல் லாபங்களும் குறைவின்றி வந்து கொண்டிருக்கும். நிலங்கள், கட்டிடங்கள், பெருந் தொகையான தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டங்கள் இருந்து வருகின்றன. இவ்வாறானவர்களும் அவர்களைப் போன்ற உயர் சொத்துடையோரும் அரசியல் பிரதிநிதிகளாக இருந்தே ஆட்சி ஆதிகாரம் செலுத்தி வருகிறார்கள். அத்துடன் பல்தேசியக் கம்பனிகளும் உள்ளூர் நிறுவனங்களும் பெரு வணிக நிறுவனங்களும் தோட்டக் கம்பனிகளும் சம்பள உயர்வை விரும்பமாட்டாதவை. இவ்வாறு, சிறிய தொழில்களிற் தொட்டு மிகப் பெரிய தொழிற்சாலைகளில் வரை, சுமார் 70 லட்சம் பேர் தனியார் துறையிற் தொழில் புரிகிறார்கள். இவர்களில், நாட்டின் பிரதான ஏற்றுமதித் துறையிற் பல லட்சம் பேர் பணி புரிகிறார்கள். உதாரணத்திற்கு, ஆடை ஏற்றுமதித் துறையில் சுமார் ஒரு லட்சத்திற்கு மேல் பணி புரிகிறார்கள். அத்துடன் மூன்று சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள கம்பனிகளிலும் பல்தேசியக் கம்பனிகளிலும் தனியார் துறைத் தொழிலாளர்களும் ஊழியர்களும் தொழில் செய்கின்றனர். பெருந்தோட்டத் துறையில் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் சுமார் நான்கு லட்சத்திற்கு மேற்பட்டோர் நாளாந்தச் சம்பளத் திற்கு வேலைசெய்கிறார்கள். இவர்கள் அரசாங்க-தனியார் துறைச் சம்பள உயர்வுக்குள் வருவதில்லை. அவர்கள் சார்பாகச் சில தொழிற்சங்கத் தலைமைகள் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேரம்பேசிக் கூட்டு ஒப்பந்த மூலம் மிகக் குறைந்த நாட் சம்பளத்தை இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தீர்மானித்துக் கொள்கிறார்கள். எதிர்வரும் மார்ச் மாதம் மேற்படி கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவுள்ளது. இக் கூட்டு ஒப்பந்த முறை வேண்டாம், வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிப்புக்கு ஏற்ப சம்பள நிர்ணய சபை ஊடான சம்பளமும் சம்பள உயர்வு வேண்டும் என வற்புறுத்தித் தொழிலாளர்கள் மத்தியில் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்துள்ளன. ஆனாற் தொழிற்சங்கத் தலைமைகள் வழமை போன்று சோரம் போகும். அரசாங்கம் தலையிடாது ஒதுங்கிக் கொள்ளும்.


எனவே தனியார் துறையினருக்கான நியாயமான சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து அதற்கான தொழிற்சங்கப் போராட்ட இயக்கத்தை முன்னெடுப்பது அவசியமாகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்காக முன்வைக்கப்பட்ட சம்பள உயர்வு வரவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கும் உதவும் என்றே ஆட்சியில் இருப்போர் நம்புகிறார்கள். ஆனால் இடைக் கால வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டவை, அடிப்படையில், மக்களைச் சில காலம் ஏமாற்றி வைத்திருக்கும் ஒரு விதத் தந்திரம் மிக்க திட்டங்களேயாகும். மக்களுக்கானது என்று கூற முடியாதது மட்டுமன்றி வழமை போன்று சொத்துடையோருக்கும் சுரண்டுவோருக்கும் ஆட்சியதிகார உயர்வர்க்கத்தினருக்குமான ஒன்றாகவே வரவுசெலவுத் திட்டம் காணப்படுகிறது. நிதி அமைச்சர் மூலம் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் பற்றி புகழும் போது பணக்காரர்களிடம் பறித்து ஏழைகளுக்கு கொடுத்து வரப்பிரசாதங்களை வழங்கியுள்ள வரவு செலவுத் திட்டம் என்று வர்ணிக்கப் பட்டது. எந்தப் பணக்காரரிடம் எவ்வாறு பறிக்கப்பட்டது என யாருங் கேட்கவில்லை. பெரும் பணப்புள்ளியான நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, பறித்த விபரம் பற்றிக் கூறவும் இல்லை. அவர் கூறியுள்ள மற்றொரு விடயம், மகிந்த ஆட்சியில் ஒரு சிலரின் சட்டைப் பைகளுக்கே பணம் சென்றடைந்தது ஆனால் நமது ஆட்சியில் நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் சட்டைப் பைகளிட்கும் பணம் சென்றடைய வைப்போம் என்று கூறினார். மேற்படி கூற்று மக்களுக்குக் கேட்க உற்சாகம் தருவது போல இருக்கிறது. ஆனால், நடக்கப் போவதை அடுத்து வரவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்பு இவ்வாட்சியின் நீடிப்பில் இருந்து பார்ப்பது நல்லதாகும். மக்கள் ஏமாந்த கதையும் ஏமாற்றப்பட்ட கதைகளும் நிச்சயம் வெளியே வரவே செய்யும்.

மேலும், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஐக்கிய அமெரிக்காவிடமும் இந்தியாவிடமும் உதவிகளையும் முதலீடுகளையும் மிகுந்த பணிவுடன் கேட்டு நிற்கிறார். அங்கு உத்தியோகபூர்வப் பயணத்தின் போது அதனை வலியுறுத்தியுள்ளதுடன் சர்வதேச நாணய நிதியத்திடம் தாராளக் கடன் உதவி பெறப் பேச்சுவார்த்தையும் நடாத்தியுள்ளார். மகிந்த ஆட்சியில் எல்லாம் சீன மயம் எனக் கிண்டல் செய்து வந்த இன்றைய நிதி அமைச்சர் நமது ஆட்சியில் அனைத்தையும் அமெரிக்க-இந்திய மயமாக்குவதில் முன்நின்று வருபவர்களில் முக்கியமானவராக உள்ளார். இத்தகைய அமெரிக்க-இந்திய மயம் நாட்டு மக்களை எவ்வாறு ஏறி மிதிக்கப் போகிறது என்பதை விரைவில் அனைத்து மக்களும் காண்பார்கள்.


# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டுங்கெட்ட நிலை

**வெகுஜனன்**

கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மகிந்த ஆட்சிக்குத் தகுந்த பாடம் படிப்பிக்கும் வகையில் தமது வாக்குக்களை மைத்திரிபால சிறிசேனாவிற்கு அமோகாமக வழங்கினர். அம் முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முடிவை அறிவிக்கு முன்பாகவே மக்கள் சுயமாக எடுத்த முடிவாகும். ஆனாலும் தாங்கள் கூறியே தமிழ் மக்கள் மைத்திரிக்கு வாக்களித்ததாகக் கூட்டமைப்பினர் உரிமை கொண்டாடினர். எவ்வாறாயினும், தமிழ் மக்கள் வாக்களித்த நோக்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரி ரணில் ஆட்சியை ஆதரித்து நிற்பதன் நோக்கமும் வெவ்வேறானவை. 1965ல் டட்லி தலைமையிலான ஏழு-கட்சித் "தேசிய அரசாங்கத்தில்" தமிழரசுக் கட்சி அமைச்சர் பதவி பெற்றுப் பங்காளியாகியது. பச்சை இனவாதிகளுடன் ஒரே அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி அங்கம் பெறக் காரணமாயிருந்தது அவர்களது உயர் வர்க்க, உயர் சாதி, மேட்டுக்குடி அரசியலுக்கு இணக்கமான ஆட்சித் தலைமை இருந்தமையேயாகும். அதன் பின்பு 1977ம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியாகி நின்ற தமிழர் தரப்பு அவருக்குத் தேவைப்படவில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி பெற்றுக் கூட்டணி பாராளுமன்றத்தில் வீறாப்புடன்இருந்து வந்தது. ஜே.ஆர். அதையும் விட்டு வைக்கவில்லை. அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் மூலம் அவர்களுடைய பாராளுமன்றப் பதவிகளை









பறித்த பரிதாபம் இடம்பெற்றது. அத்துடன் ஜே.ஆரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் 17 வருடகால இருண்ட ஆட்சியிற் தமிழ் மக்களுக்குச் செய்த அநீதிகட்கும் இன அடக்குமுறைகட்கும் மேலாக ஒரு கொடிய யுத்தத்தையும் கட்டவிழ்த்து விட்டனர். அதே ஜே.ஆரின் மருமகனாரும் அதே ஐக்கிய தேசியக் கட்சியுமே இன்று பல கட்சிகளையும் இணைத்து மைத்திரி-ரணில் ஆட்சியாகக் காட்சி தருகிறது. இதில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால நிபந்தனைகட்குட்பட்ட நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்து வருவது ஒரு விசேட அம்சமாகும். இப் புதிய அரசாங்கத்திற்குத் தேசிய நல்லிணக்கம் கொண்ட நல்லாட்சிக்கான அரசாங்கம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. எவ்வாறு பெயரிட்டாலும் அரசாங்கத்தின் பொருளாதார, அரசியல், சமூகக் கொள்கைகள் அடிப்படையில் முன்னையவற்றின் தொடர்ச்சியேயாகும். அதாவது நவகொலனியத்தின் கீழான நவ-தாராளப் பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துவதும் அவ் வழியில் அமெரிக்காவின் தலைமையிலான உலக மயமாதல் நிகழ்ச்சிநிரலுடன் இணங்கி ஒட்டிச் செல்வதாகும். அதாவது அன்று ஜே.ஆர். ஆரம்பித்து வைத்த பயணத்தை, அடுத்து வந்தவர்கள் எவ்வித முறிவுமின்றி முன்னெடுத்து வந்தவாறு, அதே பாதையில் மைத்திரி-ரணில் ஆட்சியும் பயணிக்கிறது.

இந் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை பின்பற்றி வந்த வெளித்தோற்றமான எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்க இயலாமலும் அரசில் அங்கம் பெற்று அமைச்சர் பதவி பெற முடியாமலும் இரண்டும் கெட்டான் நிலையிலே தடுமாறுகிறது. கூட்டமைப்பிற்கு ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை பற்றிய தெளிவானதும் தூரநோக்குடையதுமான எக் கொள்கையோ கோட்பாடோ கிடையாது. அதற்கு இன்றைய மைத்திரி-ரணில் அரசாங்கம் பற்றிய சரியான நிலைப்பாடும் இல்லை. ஏனெனில் தமிழத் தேசியக்

தொடர்ச்சி 13ம் பக்கம்

# வட மாகாண சபையின் இனப் படுகொலைத் தீர்மானம் எதைச் சாதிக்கும்?

தமிழ் மகன்


அண்மையில் வட மாகாண சபை "இலங்கையில் தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலை" என்ற தலைப்பில் தீர்மானமொன்றைநிறைவேற்றியிருந்தது. இது வரலாற்று முக்கியமான தீர்மானமெனத் தமிழ்த் தேசியவாதிகளும் ஊடகங்களும் மெய்சிலிர்க்கின்றன. எனவே தீர்மானத்தையும் அதன் காலப் பொருத்தத்தையும் பற்றிச் சிறிது தெளிவாக்குதல் தகும்.

தமிழ் மக்கள் தொடரான இன ஒடுக்குமுறைக்கு ஆளாகிவருகிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. தமிழ்ச் சிறுபான்மையினர் காலங்காலமாக அனுபவிக்கும் கொடுமைகள் பதிவாக வேண்டும் என்பது நியாயமானது. ஆனால் வட மாகாணசபை அதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றிச் சாதிக்கப் போவதென்ன என்பது முக்கியமானதொரு கேள்வி.

இத் தீர்மானம் என்ன செய்யும்? அதை நிறைவேற்றுவதன் மூலம் வட மாகாண சபை செய்ய நினைப்பது என்ன? அதனால் வடக்கில் வாழும் தமிழ் மக்களின் வாழ்விற் பயனுள்ள மாற்றம் ஏதென் நிகழுமா? இவை பயனுள்ள பதில்களை வேண்டிநிற்குங் கேள்விகள். வட மாகாண சபை அதை இப்போது நிறைவேற்றிய நோக்கம் என்ன என்பது அனைத்தினும் முக்கியமான கேள்வி.

தீர்மானத்தைச் சமர்ப்பித்து உரையாற் றிய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் "உண்மையை உரைப்பதற்கு நேரகாலங்கள் தேவையில்லை. நீதியைப் பெறுவதற்கு நீண்ட நேரம் நிற்கவேண்டும் என்ற கடப்பாடொன் றில்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டிய நிட்சயமான நல்லநேரம் இதுதான் என்பதே என் கருத்து" என்று சொன்னார். அந்த நல்ல நேரம் எப்படி இப்போதானது என்பதே நாம் அவரி டம் கேட்கும் கேள்வி. புதிய அரசாங்கத்தின் நூறு நாள் தேனிலவில் எதை நிறைவேற்றினாலும் கண்டுகொள்ளமாட்டார்கள் என்ற துணிவா? அல்லது இது இன்னுஞ் சில மாதங்களில் வரவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான கிலுகிலுப்பையா?

ஜெனிவாவில் இலங்கை பற்றிய அறிக்கை மார்ச் மாதம் வரவிருந்த சூழலில் அதற்கு வலுச் சேர்க்கும் நப்பாசையில் கொண்டுவரப்பட்ட தீர்மானமா என்ற ஐயமும் இல்லாமல் இல்லை. அவ்வாறான நம்பிக்கையிற் கொண்டு வந்ததாயின் அதில் மண் விழுந்துவிட்டது. அறிக்கை மார்ச் அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படாது என்று உறுதியாகிவிட்டது. யாரோ எறிகிற கல்லில் விழுகிற மாங்காய்க்குத் தான் எறிந்ததாக உரிமை கோரும் வழமையில், எதிர்பார்த்தவர் கல்லை எறியாமல் விடுகிறபோது ஏற்படும் அவமானம் தவிர்க்கவியலாதது. ஒரு வேளை இம் முறை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், "இலங்கை அரசாங்கம் அறிக்கையைப் பிற்போடமுயன்றும் வட மாகாண சபையின் தீர்மானத்தின் வலிமையால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது" என்று கதைசொல்லி அடுத்த தேர்தலில் வாக்குகளை அள்ளியிருக்கலாம். கணக்குத் தவறிவிட்டது.



**தமிழ் மக்களின் விடுதலையை அந்நிய மேலாதிக்கத்தினின்று முழு நாட்டினதும் விடுதலையுடன் இணைக்கும் வாய்ப்புகள் பாராளுமன்ற அரசியலுக்கு வெளியே அமைதிக்கான போராட்டங்கள் உட்பட்ட வெகுசனப் போராட்டங்களில் உள்ளன. அதைப் பற்றித் தமிழ், முஸ்லிம் மக்கள் கவனிப்பது அவசியம்.**

தீர்மானத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய விக்னேஸ்வரன் "வரலாற்றுரீதியாக இன அழிப்பை எதிர்கொண்டுவந்த நாங்கள் எமது மக்களின் இதுவரையான உள்ளக் குமுறல்களை உலக அரங்கிலே கொட்டித்தீர்த்து நீதியைச் சர்வதேச விசாரணை மூலம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்று கட்டியங் கூறும் நன்னாள்" என்றுகுறிப்பிட்டார். நாங்கள் இன்னமும் இலவுகாத்த கிளி போல அந்நியர் உதவியைக் காத்திருக்கிறோம்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் வேர்கள் கொலனி யுகத்துடனும் அப்போது உருவாகிய ஒரு புதிய உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் அதிகார மோதல்களுடனும் தொடர்புடையன. அதற்கான பழியைக் கொலனி நிர்வாகத்தின் பிரித்தாளும் உபாயத்தின் மீது மட்டுமே சுமத்த இயலாது. தேசிய இனப் பிரச்சினை ஒரு போராகும் அளவுக்கு அதை வளரவிட்டதும் நியாயமான நின்று பிடிக்கக்கூடிய தீர்வுகளை இயலாமலாக்கியதும் முற்றிலும் பேரினவாத அரசியலுக்கு ஆதாராமாயிருந்த உள்ளூர் அதிகார வர்க்கங்களது செயல்களே. எனினும், பேரினவாதம் சிறுபான்மைத் தேசிய இனங்களை இலக்குவைப்பதுடன் நில்லாது தனது அடக்குமுறை அரசியலின் போக்கிற் பல சமூகச் சீரழிவுச் சக்திகளைக் கட்டவிழ்த்து விடுகிறது. அவற்றின் பிடியிலிருந்து ஒரு சமூகம் எளிதில் விடுபட இயலாது. இலங்கையில் நிகழ்ந்து முடிந்த போர் தேசிய இனங்கட்கிடையிலானதல்ல. அது ஒரு தேசிய இனத்தின் மீது சுமத்தப்பட்ட போர். அது இன்னொரு தேசிய இனத்தின் பேராற் சுமத்திய போரே ஒழிய அவ்வினம் தொடுத்த போரல்ல. எனினும் தூண்டப்பட்டுவந்த சந்தேகங்களும் பகையை மூட்டக்கூடிய தீயசெயல்களும் மிகுந்த கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன என்பது உண்மை. அவற்றைக் களையாமல் நிலையான ஒரு தீர்வைக் காண இயலாது. போர் யாருடைய நலன்கட்காக நடக்கிறதோ அவர்கள் தேசிய இனங்களிடையில் நல்லுறவை விரும்பார்கள். அதைவிடப், போரின் சிக்கலான தன்மையும் வெவ்வேறு பிரிவினரிடையிலான முரண்பாடுகளும் அயற் குறுக்கீட்டை மேலும் வசதியாக்குகின்றன. அயற் குறுக்கீடு சிலவேளைகளில் முரண்படும் தரப்புகளால் விரும்பப்பட்டாலும் அதன் விளைவுகள் குறுக்கீட்டை விரும்புவோர் விரும்புமாறு அமைவதில்லை. இது தென்னாசியப் பகுதியில் மட்டுமன்றி மூன்றாம் உலக நாடுகள் பலவற்றிலும் கடந்த சில தசாப்தங்களில் நாம் கண்டது.

இந்த நாடு ஒரு அந்நிய மேலாதிக்கச் சுழிக்குள் சிக்கத் திணறுகிறது. தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கும் அயல் நாடுகளின் தலையீட்டை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வேண்டிநிற்கும் வரை, இந்த நாடு தேசிய இனப் பிரச்சினைக்கு நிலைக்கக்கூடிய தீர்வு எதையும் காணப் போவதில்லை. அமைதிக்கான அந்நிய முயற்சி எதுவும் இந்த நாட்டு மக்களின் அவல நிலை பற்றிய கவலையின தும் அவர்களது நலன் பற்றிய கரிசனையி னதும் அடிப்படையில் எழ வில்லை அயற் குறிக்கீடு தேவைப்படும் சூழ்நிலையை நாமே உருவாக் கினோம். அது தொடர்வதற்கும் நாமே காரணமாக இருக்கிறோம்.

தமிழ் மக்களின் விடுதலையை அந்நிய மேலாதிக்கத்தினின்று முழு நாட்டினதும் விடுதலையுடன் இணைக்கும் வாய்ப்புகள் பாராளுமன்ற அரசியலுக்கு வெளியே அமைதிக்கான போராட்டங்கள் உட்பட்ட வெகுசனப் போராட்டங்களில் உள்ளன. அதைப் பற்றித் தமிழ், முஸ்லிம் மக்கள் கவனிப்பது அவசியம்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பரந்துபட்ட வெகுசன ஒற்றுமையின் அடிப்படையிலும் ஒடுக்கப்படும் சகல தேசிய இனங்களதும் ஒடுக்குமுறைக்குட்படும் சிங்கள மக்களதும் ஆதரவுடனும் முன்னெடுக்கும் வாய்ப்புகள் பல தவறியுள்ளன. அது தொடர்பிற் தமிழ்த் தேசிய இன விடுதலை இயக்கத்தின் பொதுவான வரலாற்று வளர்ச்சியை விமர்சிப்பது பொருத்தமாயிருக்கும்.

தமிழ் மக்கள் எப்போதோ கற்றிருக்க வேண்டிய பாடங்களைக் கசப்பான அனுபவங்களின் மூலமே கற்க முடிந்துள்ளது. பிறருடைய அனுபவங்களிலிருந்து கற்க மறுக்கிறவர்கள் பிறரது கசப்பான அனுபவங்களை மேலும் கசப்பாகக் கற்க நேருகிறது. இன்றுவரை, தமிழ் மக்களின் உண்மையான நண்பர்களையும் நட்புவேடம் பூண்டவர்களையும் வேறுபடுத்த இயலாதவாறு பல்வேறு புனைவுகள் நம்முன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இனப் படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றிய வட மாகாணசபை, இதுவரை, அன்றாடம் இந்திய மீன் கொள்ளையர்களாற் துன்புறும் வடக்குத் தமிழ் மீனவர்களுக்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. வடக்கு மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையைப் பாதுகாப்பதோடு இந்திய மீனவர்களின் அடாவடித்தனத்தைக் கட்டுப்படுத்துமாறு இலங்கைக் கடற்படையைக் கோரி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. இவையெல்லாம் இந்தியாவைப் பகைக்கிற விடயங்கள். எனவே அவை தீர்மானம் நிறைவேற்றத்தக்க விடயங்களல்ல. தமிழ்த் தேசிய உணர்ச்சி அரசியலின் புதிய குடுகுடுப்பைக்காரர்களே இவர்கள், அவ்வளவுதான்.

இப்போது குடாநாட்டில் அவசரமான, அவசியமான பிரச்சனை குடிநீர்மாசடைதலாகும். இத் தொடர்பில் வாய்திறக்கவோ ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவோ வடமாகாண சபைக்குத் திராணியில்லை. இன்று வட பகுதி மக்களின் குடிநீரே கேள்விக்குள்ளாகிய நிலையில் அது பற்றிக் கருத்துரைக்கவோ செயலாற்றவோ வழியற்ற ஒரு மாகாணசபை தான் நல்ல சகுனம் பார்த்து இந்த இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் அதி முக்கிய சக்தி தமிழ் மக்கள் தான். அதை மறக்கும் போதே அந்நிய உதவிக் கரங்கட்காகத் தவங்கிடக்கும் அவலமும் அநாவசிய ஏமாற்றங்களும் நமக்குக் கிடைக்கின்றன. தமிழ் மக்கள் பல முனைகளிலும் பல வகைகளிலும் ஒன்றுபட்டுப் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தீர்வுபற்றிய பேச்சுகள் ஒலிக்கும் அதேவேளை, போரை விடக் கொடிய போரில்லா அழிவுகள் நடக்கின்றன. அவை நடந்துமுடிந்த போரையும் அழிவுகளையும் விடப் பாரியவை. ஆனால் நாங்களோ சர்வதேச விசாரணையையும் அவர்களது தயவிலான விடுதலையையும் நம்பி இருக்கிறோம். இந்த வாக்குப்பெட்டிக் குறளிவித்தைக்காரர்களின் கைகளில் அரசியற் தலைமை இருக்கும் வரை, தமிழ் மக்களின் விடுதலை சாத்தியமாகாது என்பது கசப்பான மெய்யாகும்.

9ம் பக்கத் தொடர்ச்சி...


## சீனப் பூச்சாண்டியும்...

சிங்கள மக்களிடையே சீனா பற்றிய நல்லெண்ணம் வலுவானது. அது இன்று அரசியற் சார்புகளைத் தாண்டி நாட்டில் நிலைகொண்டுள்ளது. அமெரிக்காவையோ இந்தியாவையோ போல இலங்கையை யார் ஆளலாம் எனச் சீனா கருத்துத் தெரிவிக்கவில்லை. போட்டியிடும் எவருக்கும் உதவவுமில்லை. ஒரு காலத்தில் நல்ல சோசலிச நண்பனாக இருக்குமாறு சீனா வகுத்த அயற் கொள்கையின் முக்கிய கூறுகளைத் தந்திரமான ஒரு வணிகனாகச் செயற்படும் முதலாளியச் சீனாவும் கடைப்பிடிக்கின்றமை சீனாவுக்கு எதிராக மக்களின் உணர்வுகளைக் கிளற இடைஞ்சலாகவே உள்ளது.

ரணில் விக்ரமசிங்ஹ இந்தியாவிடம் ஆலோசனைக்காக ஓடியோடிப் போனவரேயானாலும் இந்தியாவை மகிழ்விக்க வலிந்து சீனாவைப் பகைக்க விரும்பமாட்டார். சனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் கட்சிப் பாரம்பரியம் சீனாவுக்கு நட்பானது. எனவே சீன விரோத விக்ஷமங்கள் உடனடியாக அதிகம் பயன்தரப் போவதில்லை. அனைத்தினும் முக்கியமாக இலங்கையிடம் சீனாவின் குறைந்தபட்ட எதிர்பார்ப்பு, சீனாவை வலிந்து பகைக்காத ஒரு நிலைப்பாடு மட்டுமே. சீனப் படைகள் அயல் மண்ணிற் கால்பதிப்பதன் அபாயங்களைச் சீனா நன்குணரும். எனவே தான் சீனா இதுவரை எந் நாட்டிலும் எவ்வகைப் படைத்தளத்தையும் நிறுவ முயலவில்லை.

முதலாளிய சீனாவைப் பற்றி நாம் கவன மாக இருக்கவேண்டும். அதற்காகச் சீன எதிர்ப்பை முதன்மைப்படுத்தி சீனாவை விடப் பெரிய மிரட்டல்களான பிராந்திய மேலாதிக்கத்தையும் உலகமேலாதிக்கத்தையும் பற்றிய மக்களின் கவனத்தைத் திருப்புவதே பலவாறான சீனப் பூச்சாண்டிக்காரர்களின் செயலாகும். பின்விளைவுகளை எண்ணாமற் சிலர் சீனாவைப் பற்றிய தமது நியாயமான விமர்சனங்களின் அடிப்படையிற் பேசுகின்றனர். பிறர் குறிப்பான அந்நிய நலன்களின் தூண்டுதலால் அல்லது தமது குருட்டு விசுவாசத்தால் அவ்வாறு செய்கின்றனர்.

நமது தெரிவு சீன முதலீடா வேறு முதலீடா என வரையறைப்பட இயலாது. நமக்கு வேண்டியன அயல் வணிகத்தையும் முதலீட்டையும் தேசியப் பொருளாதாரத்துக்குப் பயன் தருமாறு அமைப்பதும் அயல் உறவுகள் நாட்டின் சுதந்திரத்துக்கும் சுயாதிபத்தியத்திற்கும் கேடாக அமையாது இருப்பதை உறுதிப்படுத்துவதுமேயாம்.



# அதிகார மாற்றம்

## ஆக்கமான மாற்றமாகுமா?

தேசபக்தன்

நீண்ட இடைவெளியின் பின் ஆட்சியைப் பிடிக்க ஆவலாயிருந்த யூ.என்.பி, அதன் தூண்டுதலில் ஆளுங் கட்சியிலிருந்து விலகிய ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர்கள், தமிழ் மக்களுடைய சுயாட்சியைப் பெற எந்தக் குறுக்கு வழிக்கும் ஆயத்தமான தமிழ்த் தலைமை, சிங்கள இனவாத அரசியலின் அந்தத்திலிருந்த திக்கற்ற அரசியற் தலைவர்கள், விரக்தியின் விளிம்பில் நின்ற ஒரு ட்ரொட்ஸ்கிவாதி அனைவரும் இணைந்து ஒரு வெற்றியைப் பெற்றனர்.

நான் சொல்கிற கதை இற்றைக்கு அரை நூற்றாண்டு முன்பு 1965ம் ஆண்டு நடந்தது. அதைப் போன்ற ஒரு குழப்பமான கூட்டணி இருந்திருக்க இயலாது. அதற்குள் நுழைந்த அனைத் துச் சிறு கட்சிகளும் அடையாளமிழந்தன. தமிழ்த் தலைமையும் தமிழ் மக்களுக்காக எதையும் சாதிக்க இயலாமல் ஏமாந்தது. 1970ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் யூ.என்.பி. படுதோல்வி கண்டது. கே.எம்.பி. ராஜரத்ன, ஆர்.ஜி. சேனா நாயக்கா, சி.பி. டி சில்வா ஆகியோர் அரசியல் முகவரியிழந்தனர். பிலிப்குணவர்தனமேலும்பேரினவாதியாகி அறவே சீரழிந்தார். அவருடைய வாரிசுகள் இப்போது நாலாதிசையிலும் சீரழிவு அரசியலை முன்னெடுக்கின்றனர். 1970 தேர்தலில் தமிழரசுக் கட்சியினதும் தமிழ்க் காங்கிரசினதும் முக்கிய தலைவர்கள் இருவர் படுதோல்வி கண்டனர். தமிழரசுக் கட்சியின் செல்வாக்கிலும் பெருஞ் சரிவு ஏற்பட்டது. தமிழ்க் காங்கிரஸ் தன்னை ஒரு உரிய மாற்றாக நிறுத்த இயலாமல் குழம்பியது. யூ.என்.பி. 1970இற் கண்ட தோல்வி 1956 இற் கண்ட தோல்வியினுங் கடுமையானது.

இப்போது ஏறத்தாழ அதேவிதமான ஒரு கூட்டணி ஆனால் ஒரு முக்கிய வேறுபாடாக முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடன் தேர்தலில் வென்றுள்ளது. ஆனால் நிலைமைகளிலும் முக்கியமான வேறுபாடுகள் உள்ளன.


பேரினவாதம் தமிழ் மக்களுக்கெதிரான ஒரு இன ஒழிப்புப் போரை முடித்து இப்போது சட்டரீதியாகக் கொடுக்க வேண்டிய அதிகாரங்களையும் மறுத்து வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தை நிலைநிறுத்தியுள்ளது. அதற்கு மப்பால் அரசின் துணையுடன் முஸ்லிம்கள் மீது வலிந்து வன்முறையைக் கட்டவிழ்த்துள்ளது.

இத் தேர்தலில் ராஜபக்ஸ கண்ட தோல்வியில் ராஜபக்ஸவை முஸ்லிம் கள் ஏறத்தாழ ஏகமனதாக நிராகரித் துள்ளமைக்கு ஒரு முக்கிய பங்குண்டு. அதிற் சிறப்பானது என்னவெனில் முஸ்லிம் கட்சித் தலைமைகள் எல்லாம் சுய லாபத்திற்காகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த இயலாது தடுமாறிய போதும், முஸ்லிம் மக்கள் தாமாகவே முடிவெடுத்துத் தலை வர்களைப் பணிய வைத்தமையாகும். தமிழ் மக்களின் நிலைமையும் ஏறத்தாழ அவ்வாறே. எனினும் தமிழ்த் தலைமைகள் தமது இயல்பான வர்க்கக் கூட்டாளியான யூ.என்.பி.யை ஆதரிப்பார்கள் என்பது தெரிந்த விடயமே. உடனடியாகவே யூ.என்.பி.யின் பிரதி வேட்பாளரான மைத்ரி பாலவுக்கு ஆதரவு தெரிவிப்பின் ராஜபக்ஸ தரப்பு சிங்களப் பேரினவாதத்தை உசுப்பி விடும் என அவர்கள் தயங்கினார்களா அல்லது யூ.என்.பி.யுடனான முன் கூட்டிய ஏற்பாடு அவர்களைத் தாமதித்ததா எனச் சொல்வது கடினம். ஆனால் நிகழ்வுகள் நகர்ந்த விதம் யூ.என்.பி.யுடனான ஒரு புரிந்துணர்வையே சுட்டுகிறது.

1965இல் டட்லி சேனநாயக்கவும் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் செய்த ஒரு உடன்பாட்டை அறிவோம். இம்முறை அப்படி வெளிப்படையாக ஏதும் இல்லை. ஆனால், 2010இல் சரத் பொன் சேகாவுடன் இருந்தது போல ஒரு புரிந்துணர்வு கூட இல்லாமல் த.தே.கூ. மைத்ரி பாலவை ஆதரிப்பதில் ஒரு பெறுமதியுமில்லை. இன்றும் தமிழ் மக்களின் அபிலாசைகளில் அற்பமான ஒரு பகுதியையேனும் நிறைவேற்றுவதற்குத் தடையாக ஜாதிக ஹெல உருமயவும் பிற பேரினவாதிகளும் மைத்ரிபால தலைமையிலான கூட்டணிக்குள் உள்ளமை 1965இல் ஆட்சிக்கு வந்த ஏழு கட்சிக் கூட்டணிக்குள்ளும் டட்லி-செல்வா உடன்படிக்கைப்படி மாவட்ட சபைகளை நிறுவுவதற்கு இருந்த எதிர்ப்பை நினைவூட்டுகிறது.

1966ம் ஆண்டும் தமிழ் மொழி உரிமை தொடர்பான ஒரு சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கம் எடுத்த முயற்சி கேவலமான ஒரு இனவாத ஆர்ப்பாட்டத்தைத் தூண்டியது. ஜே.வி.பி.யின் தோற்றமும் எழுச்சியும் அதையொட்டியே நடந்தமை கவனிக்கத்தக்கது.


இன்றைய நிலைமைகள் அதைவிட ஆபத்தானவை என்பதை நினைவிலிருத்துவது நல்லது. ராஜபக்ஸவின் தோல்வியில் முஸ்லிம்களதும்



> ராஜபக்ஸ தோல்வியை மனதார ஏற்றாரா அல்லது வேறு வழியின்றி ஏற்றாரா என்ற நியாயமான ஐயம் வலுப்பட்டுள்ளது. எனினும் இராணுவ உதவியுடன் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை இயலாமலாக்கிய சக்திகள் உள்நாட்டை விட வெளிநாட்டிலேயே வலுவாக இருந்தன எனத் தேர்தலுக்குச் சற்று முன்பான நிகழ்வுகளும் பின்பான நிகழ்வுகளும் உறுதிப்படுத்தின.

அடுத்துத் தமிழரதும் மலையகத் தமிழரவும் பங்கு முக்கியமானது என்பதை மறுத்தற்கில்லை. ஆனால் ராஜபக்ஸவின் தோல்விக்குக்

தொடர்ச்சி 12ம் பக்கம்



# மோடி அரசாங்கத்தின் ஆறுமாதச் சாதனைகள்

மோடி தலைமையில் பாரதிய ஜனதா ஆட்சியை ஏற்படுத்துவதற்காக இந்திய ஊடக நிறுவனங்கள் மோடியையும் குஜராத்தில் மோடி ஆட்சியையும் பற்றிய பெரிய புனைவுகளைக் காட்சிப்படுத்தின. ஊழலற்ற ஆட்சி, சீரான நிருவாகம் என்பன மிக வலியுறுத்தப்பட்டன. குஜராத்தின் பொருளாதார வளர்ச்சி பற்றி மிகப் பேசப்பட்டது. குஜராத்தை இந்தியாவின் அதிக முன்னேறிய மாநிலமாகவும் அதை இயலுமாக்கியவராக மோடியையும் காட்சிப்படுத்தி அவரை மையப்படுத்தி அரசியல் அனுபவமற்ற ராகுல் காந்தியை அவருடன் ஒப்பிட்டு நடந்த பிரசாரம் நல்ல பலனளித்தது. ஊடகங்களின் ஒத்துழைப்புக்கும் மேலாக இந்தியப் பெரு முதலாளிகளின் ஆதரவும் மோடிக்கு இருந்தது.

பாரதிய ஜனதாவின் பொருளாதாரக் கொள்கையும் அயற்கொள்கையும் காங்கிரஸ் ஆட்சிகள் 1980களின் போதிலிருந்து படிப்படியாக முன்னெடுத்த ஏகாதிபத்திய உலகமயமாக்கம், திறந்த பொருளாதாரம், அந்நிய மூலதனத்துடன் ஒத்துழைப்பு, தனியார் மயமாக்கம் என்ற போக்கும் வளர்ந்து சென்ற அமெரிக்கச் சார்பும் உடன்பட்டன. மன்மோகன் சிங் பிரதமாயிருந்த போது வலுவடைந்த இப் போக்குப் பொதுசன எதிர்ப்பால் ஓரளவு தடைப்பட்டது. மோடியின் ஆட்சியில் அது மக்களின் எதிர்ப்புக்களை எல்லாம் புறக்கணித்து முன்னெடுக்கப்படும் என்ற பெரு முதலாளிய எதிர்பார்ப்பை மோடி அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது.

பாரதிய ஜனதாவின் இந்துத்துவத்தை வெறும் மதப் பழமைவாதம் என்று நினைப்போர் மத நம்பிக்கைக்கும் மதவெறிக்குமிடையிலான வேறுபாட்டை அறியார். இந்துத்துவ மத வெறியின் ஆதாரம் எவ்வித ஆன்மீகச் சிந்தனையோ நம்பிக்கையோ அல்ல. அதன் அடிப்படை இந்து என்ற சமூக அடையாளத்தை வலியுறுத்தி இந்துக்களல்லாதோரை இலக்கு வைப்பதாகும். இந்து எனும்போது அது உயர்சாதி இந்துக்களின் நலன்களை முன்னிறுத்திப் பார்ப்பானிய அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளையும் வலியுறுத்துகிறது. எனினும் முஸ்லிம்களையோ கிறிஸ்தவர்களையோ இலக்குவைக்கும் போது வன்முறையில் இறங்க உதவியாகத் தாழ்த்தப்பட்ட சாதியினரையும் பழங்குடிகளையும் இந்துக்களாக ஏற்று அவர்களைப் பயன்படுத்துகிறது.

பாரதிய ஜனதாவின் கிறிஸ்தவ விரோதம் கிறிஸ்தவத்தின் பேரால் அதிகாரத்தைப் பேணும் மேற்குலக ஆட்சியிடம் காட்டப்படுவதில்லை. அதே வேளை பாரதிய ஜனதா அமெரிக்காவின் எடுபிடியாகச் செயற்படத் தயங்காது. இந்திய தேசியப் பொருளாதாரம் பற்றிய அதனுடைய பார்வை இந்தியாவின் உற்பத்தித் தளத்தை இந்திய மக்களின் தேவைகட்கு ஏற்ப விருத்தி செய்வதைப் பற்றியதல்ல. மாறாக இந்தியாவின் மூலவளங்களை அந்நியக் கம்பனிகளுடன் கூட்டாக இயங்கும் இந்தியப் பெரு முதலாளிகள் சூறையாடி அவ் வளங்கள் பொதிந்திருக்கும் பிரதேசங்களின் முழுச் சமூகங்களையும் நிர்க்கதியாக்குவதாகும்.

பாரதிய ஜனதா பாராளுமன்ற உறுப்பினர்களது நடத்தையைப் பற்றி மோடி அரசாங்கம் கண்டிப்பாயிருக்கும்என்றார்கள். ஆனாற்பாரிய நடத்தைப் பிசகுகள் கண்டுங் காணாமற் போயுள்ளன. பலவாறான நிதி ஒழுங்கீனங்கள் கட்டுப்பாட்டுக்குள் வரும் என்றார்கள். ஆனால் மோடியின் தேர்தல் வரவு செலவுக் கணக்கே இன்னுங் காட்டப்படவில்லை.

தேர்தலின் போது மோடி தனது இந்துத் துவ அரசியலைக் சற்று அடக்கி வாசித்தார். மோடி ஆட்சிக்கு வந்த பின்பு முஸ்லிம்கள் மீதான வன்முறை நிகழ்வுகள் வலுத்துள்ளன. பழங்குடிக் கிறிஸ்தவர்கள் கட்டாயமாக மதமாற்றப்படுகின்றனர். சாதி அடிப்படையிலான ஒடுக்குமுறையும் தாழ்த்தப்பட்டோர் மீதான வன்முறையும் வலுத்துள்ளன. அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல பாரதிய ஜனதா கட்சி வெகுசன அமைப்புக்கள் இப்போது நாடெங்கும் காந்தியைக் கொன்றவனான கோட்சேக்குச் சிலை எழுப்பப் போகிறார்கள். அவனுக்கு ஏலவே குஜராத்தில் ஒரு கோயிலும் கட்டப்பட்டுள்ளது. இதுதான் மோடி காட்டுகிற இந்தியா.

சீனாவைப் பகைப்பதன் மூலம் தன்னை அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் நெருக்கமாக்கும் போக்கில் மோடி சீனாவைப் பற்றி நிந்தனையாக யப்பானில் பேசியது போகப் பின்பும் சீனாவுக்குச் சவால் விடுகிற தொனியிற் பேசியிருந்தார். அதன் பயனாகச் சீனச் சனாதிபதியின் இந்தியப் பயணத்தின் போது சீனா இந்தியாவில் முதலிடவிருந்த பெருந்தொகைக்கான உடன்படிக்கையைச் சீனா குறைத்து விட்டது. அதற்கு ஈடு செய்யுமாறான முதலீடு எதுவும் அமெரிக்காவிலிருந்தோ யப்பானிலிருந்தோ வருவதற்கில்லை. இதுதான் மோடியின் ராஜதந்திரத்தின் அழகு. அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் கிடைத்த ஆரவாரமான வரவேற்பு எந்த நோக்கத்திற்கானது என விளங்காமல் இந்தியாவின் பழைய நண்பர்களைப் பகைக்கும் காரியம் வேகமடைகிறது. அண்மையில் பலஸ்தீனத்தின் ஐ.நா. அங்கீகாரத்திற்கு ஆதரவாகப் பாதுகாப்புச் சபையில் கையுர்த்துவதை இந்தியா தவிர்த்தமை இந்தியாவின் சர்வதேச நடு நிலைமைக்குப் பாதகமான ஒரு செயலேயாகும்.

மோடியின் பொருளாதாரக் கொள்கை இந்தியப் பொருளாதாரத்திற்கு நீண்ட காலத்தில் நன்மை தராது. அவரது சமூகக் கொள்கை இந்தியாவைப் பொருளாதார, சாதி, மத, இன அடிப்படைகளில் மேலும் பிளவுபடுத்தும் என்பதும் இன்று தெளிவாகின்றது.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 28

வெகுஜனன்

வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத் தீவு வரை என்னும் இத் தொடர் இப் பகுதியுடன் முடிகிறது. 1979ல் வட்டுக் கோட்டைத் தொகுதியின் பண்ணாகத்தில் இடம்பெற்ற தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மாநாட்டில் முடிந்த முடிவு எனக் கூறித் தீர்மானிக்கப்பட்டதே தனித் தமிழீழக் கோரிக்கையாகும். அகிம்சை வழியிலும் பின் பாராளுமன்றத் தேர்தல் ஊடாகவும் தமிழீழத்தை வென்றெடுக்கப் போவதாகத் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சூளுரைத்தது. அது சாத்தியமற்றுப் போகவே, ஆயுத நடவடிக்கை மூலம் அதை வென்றெடுக்கப் பத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் இயக்கங்கள் 1983க்குப் பின் களம் இறங்கின. காலப் போக்கில் அவற்றை எல்லாம் ஒதுக்கித் தனியொரு இயக்கமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளும் தனியொரு தலைவனாக வே. பிரபாகரனும் மேலெழுந்து முன்னெடுத்த தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டம் இறுதியாக 2009 மே 18 இல் முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் நந்திக் கடல் ஒரத்தில் தலைவர் பிரபாகரனும் அவரது தளபதிகளும் அழிக்கப்பட்டதுடன் தோற்றது. அத்துடன் தமிழீழக் கோரிக்கையும் மூழ்கடிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் நம்பிச் சென்ற பல்லாயிரக்கணக்கான மக்களும் அழிவுகட்கு உள்ளாகினர். 33 வருடங்கள் நீண்ட தமிழீழக் கோரிக்கைக்கான போராட்டத்தைப் பற்றி 28 பகுதிகளில் மிகச் சுருக்கமாகவே கூறவியலும். வாய்ப்பு வரும் போது இதை விரித்து எழுத வேண்டும். ஏனெனில் அதற்கான தேவை தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில் இன்னமும் உள்ளது.

**தேசிய இனப் பிரச்சினை இருப்பதை ஏற்றுப் பேரினவாதத் தரப்பிலிருந்து தீர்வுக்குரிய ஆய்வுகள் இன்னமும் முன்வைக்கப்படவில்லை. அது போன்றே தமிழீழக் கோரிக்கை நியாயமானதா, இலங்கையின் பிரத்தியேக நிலையில் இயலுமானதா, அதனூடு தமிழ் மக்களின் விடுதலை கிட்டுமா என்பன பற்றித் தமிழ்க் குறுந்தேசியப் பழைமைவாத ஆதிக்க அரசியல் தரப்பிலிருந்து மீள்மதிப்பீட்டுக்கோ சுயவிமர்சனத்திற்கோ எவரும் துணியவில்லை.**

33 வருட காலத் தமிழீழப் போராட்டத்திற் பல தமிழ் இளைஞர் இயக்கங்களும் குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தமது போராளிகளான இளைஞர் யுவதிகளை களப் பலி கொடுத்துள்ளன. பேரினவாத ராணுவத்தின் மூலமாகவும் சகோதரப் படுகொலை எனப்படும் உள், வெளி இயக்க அழிப்புக்கள் மூலமும் எல்லா இயக்கங்களையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இவ்வாறு தமிழீழக் கோரிக்கையின் ஆரம்பம் முதற் போரின் இறுதி வரையான காலத்தில் புலிகள் இயக்கம் உட்பட்ட எல்லா இயக்கங்களையும் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் இளைஞர்களும் யுவதிகளும் களப்பலியாகினர். எல்லோரையும் சேர்த்துப் பார்த்தால் வடக்கு கிழக்கிலும் அப்பாலும் சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்கள் தமிழீழப் போராட்டத்தின் பெயரால் உயிரிழந்துள்ளனர். மக்கள் பல கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்களை இழந்தனர். பல ஆயிரம் பேர் அங்கவீனர்களாகி இழப்புக்களை ஈடு செய்ய முடியாது நொந்து நொடிந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். கணவரை இழந்த மனைவியர், மனைவியரை இழந்த கணவர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், உறவுகளை இழந்த உறவினர் என வடக்குக் கிழக்கு எங்கும் சோக வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். வடக்குக் கிழக்கில் விதவையர் எனக் கூறப்படும் பெண்களின் தொகை மட்டும் எண்பத்தொன்பதாயிரம் என ஒரு புள்ளி விபரம் கூறுகிறது. பேரினவாத ஒடுக்குமுறையின் விளைவான தமிழீழப் போராட்டமும் அதை முறியடித்த ராணுவத்தின் ஒடுக்குமுறை யுத்தமும் தமிழ் மக்களை மட்டுமன்றிச் சிங்கள முஸ்லீம், மலையகத் தமிழர்கள் என்போரையும் வெவ்வேறு அளவுகளில் உயிரிழப்புக்கட்கும் சொத்து அழிவுக்கும் உள்ளாக்கியது. அதே வேளை, தமிழீழப் போராட்டத்தின் பெயரில் சொத்துச் சுகங் கண்ட கணிசமானோர் இருந்து வருகின்றமையும் நோக்குதற்குரியது.

இவ்வாறு, தமிழீழத்திற்கென உருவாக்கப்பட்ட கொள்கையும் போராட்டங்களும் தமிழரை அடக்கி ஒடுக்கிய பேரினவாத யுத்தமும் தற்செயல் நிகழ்வுகளின் தொடர்ச்சி அல்ல. அவற்றை வரலாற்று வளர்ச்சியின் வழி பார்ப்பது அவசியம். தேசிய இனப்பிரச்சினையும் தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையும் சுமார் ஒரு நூற்றாண்டு வரையான காலப் பகுதியை உள்ளடக்கியதாகும். அது கொலனிய எசமானர்களான பிரித்தானிய ஆட்சியினர் தமது ஆட்சி நிலைப்பிற்கும் சுரண்டற் கொள்ளைக்கும் பிரித்தாளும் சூழ்ச்சியின் ஊடே நாட்டி வளர்த்த நச்சு மரமாகும். இலங்கைக்குச் சுதந்திரம் தருவதாகக் கூறித், தமது பாராளுமன்ற அரசியலமைப்பின் மூலம் இலங்கையின் உயர்வர்க்க, உயர்சாதி மேட்டுக்குடி ஆளும் வர்க்கத்திடம் கொலனியவாதிகள் ஆட்சி அதிகாரத்தைத் கையளித்துச் சென்ற போது, இந்த நச்சு மரம் அழியவில்லை. அது பின்னைய இலங்கை அரசியலில் மேலும் உரமிட்டு வளர்க்கப்பட்டது. இலங்கையின் ஆளும் வர்க்கங்களும் மேட்டுக்குடி ஆதிக்க அரசியற் சக்திகளும் அந்நிய மேலாதிக்கவாதிகளும் அதனாற் பயனடைந்தனர். அதாவது, கொலனியத்தின் கீழ் உருவாகி முன்னெடுழுந்த தேசிய இனப் பிரச்சினை நவகொலனியத்தின் கீழும் தொடர்கிறது. இச் சிறிய தீவின் தேசிய இனப் பிரச்சினைக்கு மிக எளிதாக அரசியற் தீர்வு காண வாய்ப்புகள் இருந்தன. ஆனால் ஆளும் வர்க்கத்தினரும் சிங்கள பௌத்த பேரினவாதிகளும் ஒருபுறமும் தமிழ்க் குறுந்தேசியவாதிகளும் அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்கவாதிகளும் இன்னொரு புறமும் அதற்கு இடமளிக்கவில்லை. தேசிய இனப் பிரச்சினையைத் தத்தமக்கேற்ப நன்கு பயன்படுத்தி உச்சநிலை நலன்களையும் பொருளாதார அரசியல் லாபங்களையும் பெற்றனர். இன்றும் அவ்வாறே பெற்று வருகிறார்கள்.

தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததாக அறிவித்து ஐந்து வருடங்கள் கடந்தும் விடயங்கள் உரிய முறையில் அணுகி ஆராயப்படவில்லை. (1) தேசிய இனப் பிரச்சினை எவ்வாறு வரலாற்று ரீதியாகத் தோன்றி வளர்ந்து தமிழீழக் கோரிக்கையாக முன்னெழுந்தது? (2) அது எவ்வாறு ஆயுதப் போராட்டமாக வளர்ந்தது? (3) அது ஏன் தோற்றது? (4) அக் கோரிக்கை மீள எழும் சாத்தியங்கள் உள்ளனவா?

தேசிய இனப் பிரச்சினை இருப்பதை ஏற்றுப் பேரினவாதத் தரப்பிலிருந்து தீர்வுக்குரிய ஆய்வுகள் இன்னமும் முன்வைக்கப்படவில்லை. அது போன்றே தமிழீழக் கோரிக்கை நியாயமானதா, இலங்கையின் பிரத்தியேக நிலையில் இயலுமானதா, அதனூடு தமிழ் மக்களின் விடுதலை கிட்டுமா என்பன பற்றித் தமிழ்க் குறுந்தேசியப் பழைமைவாத ஆதிக்க அரசியல் தரப்பிலிருந்து மீள்மதிப்பீட்டுக்கோ சுயவிமர்சனத்திற்கோ எவரும் துணியவில்லை.


ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனமும் ஏனைய இனங்களும் சமூகங்களும் தமக்கு எதிரான இன, மத ஒடுக்குமுறைகட்கு எதிராகப் போராடுவதானால், உரிய வழிகளிற் கொள்கை வகுத்துத் தூரநோக்குடன் போராடினால் மட்டுமே அவை விடுதலை என்ற இலக்கை அடையலாம். அதற்கு வழிகாட்டும் ஆற்றல் மாக்சிச லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனைக்கே உண்டு. அதனாலேயே விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குமாறு அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஐரோப்பிய வல்லரசுகளும் இந்திய பிராந்திய மேலாதிக்கவாதிகளும் கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கவனித்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் ஒவ்வொரு நாட்டிலும் மாக்சிச, சோசுஷலிச, இடதுசாரிக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் திட்டமிட்டு முறியடிக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக, அமெரிக்க மத்திய புலனாய்வு உளவு நிறுவனம் (சி.ஐ.ஏ.) 365 நாட்களும் இருபத்திநான்கு மணிநேர விழிப்புடன் செயற்படுகிறது. ஏனைய ஏகாதிபத்திய முதலாளித்துவ உளவு நிறுவனங்களின் தொழிற்பாடுகளும் அது போன்றவே.

33 வருடங்களாக இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை இனப் பிளவாகவும் போராட்டங்களாகவும் ஈற்றில் ஆயுதப் போராட்டமாகவும் வளர்த்து முன்தள்ளியதில் அமெரிக்க சீ.ஐ.ஏ.யும் இந்திய றோ நிறுவனமும் முன்னின்றன. தமிழீழக் கோரிக்கை உருவாக உதவி அதற்கு உருக்கொடுத்து வளர்த்துவந்த இந்திய அமெரிக்க ஐரோப்பிய சக்திகளே இறுதி யுத்தத்திற் புலிகள் இயக்கத்தையும் அதன் போராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டு வரக் கைகோர்த்து நின்றன. சிங்கள பௌத்த பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை யுத்தத்தை முன்னெடுத்து வெற்றிபெறப் பலவகைப் பங்களிப்பையும் வழங்க அமெரிக்க, ஐரோப்பிய, இந்திய ஆட்சியாளர்களைவிடச் சீனாவும் யப்பானும் வேறு நாடுகளும் கூட்டுப் பங்காளிகளாக இருந்தன. குறிப்பாக அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகட்கும் இந்திய பிராந்திய மேலாதிக்க வல்லரசுக்கும் தத்தமது தேவைகள் நிறைவுற்றதும் தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டத்தை முடிவுகட்டும் தேவை ஏற்பட்டது. எனவே தான், 2009ல் முல்லைத் தீவின் நந்திக் கடலோரம் தமிழீழ விடு தலைப் புலிகளையும் அதன் தலைவரான வே. பிரபாகரனையும் இலங்கை ராணுவம் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அழிப்பதற்குப் பச்சைக் கொடி காட்டித் தமது பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் ஒரே கோட்டில் ஐக்கியப்பட்டு நின்றன.

அவர்களின் நிலைப்பாட்டையிட்டு வியப்புற்று அவ்வாறு நடந்தது ஏன் என்ற வினா தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தோருக்கு இருக்கலாம். ஆனால் மாக்சிச லெனினிசவாதிகட்கு அதில் வியக்க எள்ளளவும் இருக்கவில்லை. ஏனெனில் மோதலின் முதலும் முடிவும் அமெரிக்க, ஐரோப்பிய, இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் எழுதி வைத்தவையாகவே இருந்தன. மூன்று லட்சம் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டமை அவர்கள் எதிர் பார்த்து விரும்பிய ஒரு சிறு தொகையே. அது மட்டுமன்றி, அத் தொகையில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் உள்ளடங்குகின்றமை ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்கவாதிகட்கு மனநிறைவான மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஏனெனிற் பிரிவினைக்கான தமிழீழப் போராட்டத்திலும் தெற்கில் இடம்பெற்ற இளைஞர் கிளர்ச்சியிலும் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பேர் காணாமற் போயினர். இவ்வாறான இளைஞர்களில் ஏகப் பெரும்பாலோர் இலங்கையின் உழைக்கும் மக்களின் பிள்ளைகள் ஆவர். அவர்கள் நாட்டின் சமூக மாற்றத்திற்கான புரட்சிகர சக்திகளாக வரவேண்டியவர்கள். அவ்வாறான இளம் தலைமுறையின் அழிவு ஏகாதிபத்தியச் சக்திகட்கும் உள்நாட்டு பிற்போக்கு ஆளும் வர்க்கங்கட்கும் மன நிறைவான ஒன்றேயாகும்.

அடுத்து 33 வருடத் தமிழீழப் போராட்டத்தாலும் அதனை மறுத்த யுத்தத்தாலும் மக்களின் கவனம் திசைதிருப்பப்பட்டது. அதன் மறைவில் நாடு நவகொலனியத்தின் கீழ் நவதாராள பொருளாதாரத்திற்கு முற்று முழுதாக அடிமையாக்கப்பட்டது. உலகமயமாதலின் கீழ்த் தாராளமயமும் தனியார்மயமும் முற்று முழுதாக எந்த வெகுஜன எதிர்ப்பும் இன்றி நிறைவேற்றப்பட்டன. உள்நாட்டில் நுகர்வுப் பொருளாதாரமும் தரகு முதலாளித்துவமும் வளர்ந்து தேசிய முதலாளித்துவத்தை நலிவடைவித்து அதன் ஒரு பகுதியை உள்வாங்கின. அவற்றை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உள்ளிட்ட 1978ம் ஆண்டின் அரசியலமைப்பு பாதுகாத்தது.







எனவே தனித் தமிழீழக் கோரிக்கை தனியே தேசிய இனப் பிரச்சினையை மட்டும் குறிக்கவில்லை. இன முரண்பாடு என்பது பிரதானமானதாக இருந்த அதேவேளை நாட்டின் அடிப்படை வர்க்க முரண்பாட்டுடன் பிணைந்தும் இருந்தது. அதன் மூலம் ஏகாதிபத்தியத்துடன் தொடர்புடையதாயும் அதற்குச் சேவை செய்வதாயும் அமைந்தது.

எனவே 1976-2009 கால கட்டத்தின் தமிழீழப் பிரவினைப் போராட்டம் என்பதை வெறுமனே தேசிய இனப் பிரச்சினையாகப் பேரினவாதத்தின் ஊடாகவோ தமிழர் பழைமைவாதக் குறுந் தேசியவாதத்திற்கு ஊடாகவோ பார்ப்பதிற் பயன் இல்லை. அதை மாக்சிச உலகக் கண்ணோட்டத்துடனான வர்க்கப் போராட்ட வழியாகப் பார்ப்பதே நாட்டிற்கும் தேசிய இனங்கட்கும் குறிப்பாகத் தமிழ்த் தேசிய இனத்திற்கும் அதன் விடுதலைக்கும் பயன் தரும்.

**முற்றும்.**

# சீனப் பூச்சாண்டியும் ஏகாதிபத்தியப் பிசாசும்

சீனாவைப் பற்றிய அச்சங்கள் இரு தரப்பினரால் கடந்த தசாப்தத்தில் மும்முரமாகக் கிளறப்பட்டன. ஒன்று தமிழ்த் தேசியவாத இந்திய முகவர்களின் அணி. அது, நீண்டகாலமாகவே கம்யூனிச விரோதமும் சீன-இந்திய முரண்பாட்டைத் தமிழரின் பிரச்சினையாகக் காட்டும் போக்கும் இணைந்து தமிழருக்கும் சீனாவுக்குமிடையே ஒரு மதிலை எழுப்பிய மரபின் தொடர்ச்சியாகும். சீன-இலங்கை உறவு 1960களின் முற்பகுதி தொட்டு வேகமாக வளர்ந்ததைச், சிங்களவருக்குச் சாதகமான சீனப் போக்காகக் காட்டுவதில் தமிழரசுக் கட்சி மும்முரமாயிருந்தது. 1965இல் ஏழு-கட்சிக் கூட்டணியில் யூ.என்.பியுடன் கூட்டணி அமைத்த பின்பு, தமிழரசுக் கட்சியின் சீன விரோதம் மேலும் வேகம் பெற்றது. அதன் முக்கிய காரணங்களில் ஒன்று, மாக்சிய லெனினியவாதிகள் வடக்கில் வெகுசனங்களிடையே ஆற்றிய பணிகள் தமிழரசுக் கட்சியின் உயர் வர்க்க, உயர் சாதி மேட்டுக்குடிகளுக்கு ஒரு சவாலாக அமைந்தமையாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்ட நாடுகளிற் சீனாவும் அடங்கும். ஆனாற் சீனா இலங்கையின் உள் அலுவல்களிற் குறுக்கிட மறுத்தது. தேசியப் பிரச்சனையைச் சுமுகமாகத் தீர்ப்பதை வலியுறுத்தியதற்கு மேலாக அது எதையுஞ் செய்யவில்லை. மறுபுறம், தனது நட்பு அரசாங்கம் ஒன்றின் வேண்டுகோட்கிணங்க அது ஆயுதங்களை வழங்கியது. சீனா சோசலிச நாடாயிருந்த காலத்தில் சீனா ஆயுத வணிகத்தில் இறங்கியிராது என்பதுடன் தமிழ் மக்களின் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் பிரிவினை முயற்சியாக நோக்கியிராது என நம்ப இடமுண்டு. எனினும் மேற்குலகு சீனாவின் தேசிய இனங்களிடையே கலகத்தைக் கிளறிப் பிரிவினையைத் தூண்டுகிற நிலையிற், சீனா பிரிவினை இயக்கங்களை ஆதரித்திராது என்பதை நாம் எதிர்பார்த்திருக்கலாம். எவ்வாறாயினும் சீனா திட்டமிட்டுத் தமிழ் இன ஒழிப்பிலோ விடுதலைப் புலிகளின் அழிப்பிலோ பங்கு பற்றியதெனக் கூற இயலாது. தமிழ் மக்களுக்கு ஆசைகாட்டி ஏமாற்றியவை மேற்குலகும் இந்தியாவுமே. சீனா இலங்கை அரசாங்கத்திற்கு ஆயுதங்களை வழங்கியதற்கு அப்பால் தமிழ் மக்களுக்குக் கேடாக எதையுஞ் செய்யவில்லை. அதன் செயல் கண்டிக்கத்தக்கது. ஆனால் அதன் தாக்கத்தை மேற்குலகும் இந்தியாவும் செய்த காரியங்களின் தாக்கத்துடன் ஒப்பிட இயலாது. சீனாவையும் மேற்குலகையும் ஒரே தராசில் எவரும் இடுவதன் நோக்கம் மேற்குலகினதும் இந்தியாவினதும் துரோகங்களை மழுப்புவது மட்டுமே.

இந்திய, அமெரிக்க ஆதரவுடன் விடுதலைப் புலிகளை அழித்த ஒரு அரசாங்கத்துக்கு எதிராக மேற்குலகு போர்க்குற்றப் பிரச்சினையை ஐ.நா. மனித உரிமைக் கழகத்தில் எழுப்பிய நோக்கத்தைப் பேரினவாதிகளும் தமிழ்த் தேசியவாதிகளும், ஏறத்தாழ ஒரே விதமாகத், தவறாக விளக்கியுள்ளன. மனித உரிமை மீறல்களைப் பிரச்சினையாக்கிய காரணம், தமிழ் மக்கள் மீதான பரிவல்ல. ராஜபக்ச அரசாங்கம் பூரணமாக மேற்குலகச் சார்பாக நடக்க வேண்டியே அது மேற்குலகின் அரசியல் அழுத்தங்கட்குட்பட்டது. பொருளாதாரக் கொள்கை விடயத்தில் ராஜபக்ச ஆட்சி முற்றிலும் மேற்குலகச் சார்பாக இணங்கிச் செயல்பட்டது. ஏனெனில் அதனிடம் ஜயவர்தன அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும் தாராளமயத்துக்கும் எதிரான மாற்றுக்கள் இருக்கவில்லை. இலங்கைக்கு ஆதரவாகவோ எதிராகவோ மனித உரிமைக் கழகத்தில் வாக்களித்த நாடுகட்கு இலங்கையையோ ராஜபக்ச ஆட்சியையோ விடப் பெரிய கவனங்கள் இருந்தன. மனித உரிமைகளும் போர்க்குற்றங்களும் சர்வதேச அரசியலில் மேற்குலகின் (குறிப்பாக அமெரிக்காவின்) அரசியல் நோக்கங்கட்குப் பயன்படும் வலிய கருவிகள் என விளங்கின் நமக்கு வாக்களிப்பின் கோலங்கள் விளங்கும். எந்தவொரு தீர்மானமும் தனக்கெதிரான ஒரு முன்மாதிரியாகப் பயன்படும் வாய்ப்பை ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு விதமாகக் கருதுகிறது.



இலங்கையில் அமெரிக்காவும் இந்தியாவும் விரும்புமாறான ஒரு ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது. சர்வதேச விசாரணை பற்றிய அழுத்தங்கள் இனித் தணியும் என எதிர்பார்க்கலாம். ஆனால் ஒரேயடியாக அல்ல. எவ்வாறாயினும், மேற்குலகிடம் மிக ஏமாறவுள்ளவை பல்வேறு தமிழ்த் தேசியவாத அணிகளே.

சீன எதிர்ப்பை தீவிரப்படுத்தித் தமது இந்திய எசமானர்களை மகிழ்விக்க முயல்வோர் தமிழ் மக்களை ஏமாற்றுவதை விட எதையுமே சாதிக்க மாட்டார்கள்.

சிங்களவர்களிடையே சீனாவைப் பற்றிய நல்லெண்ணம் வலிது. அதற்கு ஆறு தசாப்த வரலாறுண்டு. பல்வேறு ஆட்சி மாற்றங்களும் இலங்கை-சீன உறவின் நட்புப் பரிமாணத்தைக் கெடுக்கத் துணியவில்லை. ஜயவர்தன ஆட்சியின் கீழ் அமெரக்க ஊக்குவிப்பில் ஜப்பான் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடாகியது. சீனா அதனாற் பாதிக்கப்படவில்லை. ஒரு நாடு தனக்குப் பகையாக நடப்பதை எவ்வாறு கையாள்வது என்பதிற் சீனா வேறெந்த வல்லரசையும் விட நிதானமாகவே நடந்து வந்துள்ளது. தவறுகள் நிகழவில்லை என்று எவருங் கூற இயலாது. ஆனால் சீனாவின் அயற் கொள்கையும் அயல் நாடுகளுடனான உறவு பற்றிய அணுகுமுறையும் கொலனிய, நவகொலனிய, பிராந்திய மேலாதிக்க வல்லரசுகளினவற்றினும் வேறுபட்டவை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

> **இலங்கையில் அமெரிக்காவும் இந்தியாவும் விரும்புமாறான ஒரு ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது. சர்வதேச விசாரணை பற்றிய அழு த்தங்கள் இனித் தணியும் என எதிர்பார்க்கலாம். ஆனால் ஒரேயடியாக அல்ல. எவ்வாறாயினும், மேற்குலகிடம் மிக ஏ மாறவுள்ளவை பல்வேறு தமிழ்த் தேசியவாத அணிகளே.**

சீனாவை வலிந்து பகைக்கும் சில ஊடக நிறுவனங்களும் சிங்கள அரசியல்வாதிகளும் உள்ளனர். அவர்களுடைய காரணங்கள் கவனிக்கத்தக்கன. மேற்குலகு இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான மனித உரிமைகளும் போர்க் குற்றங்களும் பற்றிய பிரச்சனைகளை முக்கியப்படுத்தும் காரணம் இலங்கை அரசாங்கத்துக்கும் சீனாவுக்குமுள்ள நெருக்கமே என்பதை அவர்கள் ஓரளவுக்கேனும் சரியாக விளங்கியுள்ளனர். ஆனால் அவர்கள் காட்ட முனைவது போல, சீனா, அரசியற் தளத்திலோ இராணுவ அலுவல்களிலோ இலங்கையைத் தனது ஆதிக்கத்துக்குட் கொண்டுவர முயலவில்லை. எந்த அயல் அரசாங்கமும், குறிப்பாக ஒரு அரசியல், பொருளாதார வல்லரசும், இலங்கையில் தனது செல்வாக்கை வளர்க்க விரும்புவது இயல்பானது. அதுவே அரசியல் ஆதிக்கமாவது ஆபத்தானது. நாட்டு மக்கள் இவ் விடயத்தில் விழிப்பாக இருப்பது அவசியம்.

அமெரிக்காவும், இந்தியாவும் அரசியல் ராணுவ ஆதிக்கத்திற்காகக் கடுமையாக முயன்றுள்ளன. குறிப்பிட்ட காலங்களில் ஆதிக்கஞ் செலுத்தியுமுள்ளன. சீனா அவற்றுடன் போட்டியிடுவதாகக் கூறின் அது பொருளதாரத் துறையிலேயே ஆகும். அமெரிக்காவின் ஆதிக்கம் இலங்கையின் ஏற்றுமதிகளின் அதன் பங்கின் மூலம் மிக இறுக்கமானது. அதைவிட, ஐரோப்பாவுடனான ஏற்றுமதி வணிகத்தின் அளவும் கடல்கடந்த இலங்கைத் தொழிலாளர்களிற் பெருந் தொகையானோர் அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழுள்ள அல்லது அதன் செல்வாக்கு உட்பட்ட நாடுகளிற் பணியாற்றுகின்றமையும் அமெரிக்கப் பொருளாதாரக் கிடுக்கிப் பிடியை மேலும் வலிதாக்குகின்றன. இன்று இலங்கைக்கு அதிகளவிற் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடு இந்தியா. இந்தியத் தனியார் முலதனம் பல துறைகளையும் ஊடுருவியுள்ளது. இப் பின்னணியின் சீனாவின் பொருளாதாரத் தாக்கத்தைப் பார்ப்பது தகும். சீனா கணிசமாக முதலிட்டிருப்பது அபிவிருத்தித் திட்டங்களிலேயே. சீனா தனது நிபந்தனையற்ற பெரும் வட்டிக் கடன்கள் மூலம் இலங்கை மீது சுமையேற்றுவதாயும் சீன நிர்மாணச் செலவுகள் மிகையானவை எனவும் கூறப்படுவனவற்றில் உண்மையுண்டு. ஆனால் அது முழு உண்மையா என்பதை விசாரிக்க வேண்டும். சீன அரசாங்கம் வழங்கும் கடன்கள் இலகுவான வட்டி, மீள் செலுத்தல் நிபந்தனைகளையுடையன. மேற்குலகின் கடன் வசதிகள் குறைந்த நிலையில் 2006 அளவிலிருந்து இலங்கை அரசாங்கம் தனியார் வங்கிகளிடம் கடும் வட்டிக்குப் பணம் பெற்றது.

அதன் தொடர்ச்சியே இன்றைய அபிவிருத்தித் திட்டங்களின் பாரிய முதலீடுகட்கான அந்நியக் கடன்கள் ஆகும்.

சீனா இலங்கையைக் கொள்யைடிக்கிறது என்றும் சீன முதலீடுகளாலேயே இலங்கையில் ஊழல் பெருகுகிறது என்றும் சில யூ.என்.பி பிரமுகர்கள் பேசி வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஹர்ச டி சில்வா எனும் பொருளியல் நிபுணரும் தனியார் ஊடக சாம்ராச்சியம் ஒன்றின் செல்லப்பிள்ளையுமாவார். அவர், ஆபிரிக்காவில் சீனாவின் தில்லுமுல்லுகள் நமீபியன் (நமீபியா என்பது முன்னாள் தென்மேற்கு ஆபிரிக்காவாகும்) என்ற ஏட்டில் அம்பலமாகி உள்ளதாகத் தனது 'கண்டுபிடிப்பைச்' சில மாதங்கட்கு முன் வெளியிட்டார். 'த நமீபியன்' என்பது நம்பகமற்ற ஒரு மின் ஊடாக நிறுவனமென்பது இங்கே ஏலவே பலரறிந்த உண்மை. அதைச் சீன அரசாங்கப் பேச்சாளர் விளக்கிய பின்பு நமது நிபுணர் வாயடைத்துப் போனார். சீன முதலாளிகள் ஊழலுக்கும் லஞ்சம் வழங்கலுக்கும் அப்பாற்பட்டோரல்ல. ஆனால் லஞ்சமும் ஊழலும் அவர்களுடைய ஏகபோகமல்ல. உண்மையில் மேற்குலக முதலாளிய நிறுவனங்களை விட நன்றாக அவர்கள் நடப்பதனாலேயே அவர்களுடைய செல்வாக்கு ஆபிரிக்காவிலும் தென்னமெரிக்காவிலும் வலுத்து வருகிறது.

எந்த நாட்டினதும் பொருளாதார விருத்திக்கு அந்நிய முதலீடே வழி என்பதோ சீன முதலீடே சிறந்தது என்பதோ என் வாதமல்ல. ஆனாற் சீன முதலீட்டை மட்டுமே விமர்சித்து நிராகரிப்போர் பிற நாடுகளின் முதலாளிய முதலீடுகளைப் பற்றி ஏன் பேசுவதில்லை என்பது கவனிக்க உகந்தது. ஊழலுக்குக் காரணம் சீனா தான் என்போர் மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற் சிலர் அடித்த மாபெருங் கொள்ளைக்கும் சீனாவைக் காரணஞ் சொல்வார்களா?

சீன முதலீடுகளால் நாட்டின் நலனுக்குக் கேடு என்றால் அதன் காரணம் சீனா அல்ல. அந்த முதலீடுகளின் தன்மையோ இன்று பல்வேறு கடன்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளோ தேசியப் பொருளாதாரத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் அதிக நன்மையானவையல்ல. அவற்றை மீளாய வேண்டும். சனாதிபதித் தேர்தலுக்குப் பின்பு சில புதிய அமைச்சர்கள் தமது சீன விரோதப் பல்லவியை மீண்டும் பாடத் தொடங்கினர். துறைமுக நகரத் திட்டம் முற்றாகக் கைவிடப்படும் என்றும் இதுவரையிலான செலவு சீனக் கம்பனிக்குச் செலுத்தப்படாது என்றெல்லாம் வீறாப்புப் பேசியவர்கள் ஒடுங்கிவிட்டார்கள். அவர்கள் மனம் மாறினாலும் இல்லாவிட்டாலும் திட்டத்தை முற்றாகக் கைவிட அரசாங்கம் ஆயத்தமாயில்லை. எனவே சில விடயங்கள் சரியோ பிழையோ, முடிவுகள் செயற்படத் தொடங்கிய பின் அவற்றைத் திருத்தலாமே ஒழியக் கைவிட இயலாது என்பதே யதார்த்தம். சீனாவுடனான சுதந்திர வர்த்த உடன்படிக்கையை முன்னெடுப்பதிலும் அரசாங்கம் ஆர்வமாக உள்ளது. ஏனெனில், அது, இந்தியாவுடன் இலங்கை பதினைந்து ஆண்டுகள் முன் கைச்சாத்திட்டதிற் போல் இலங்கைக்குக் கேடான அம்சங்களைக் கொண்டிருக்கவில்லை.

சில யூ.என்.பி. பிரமுகர்களதும் குறிப்பாக விஜய பத்திரிகை நிறுவனத்தினதும் சீன விரோதப் பிரசாரம் ஏன் அரசாங்கத்திடம் எடுபடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மகிந்த ராஜபக்ச ஆட்சியுடன் சீனாவின் நெருக்கம் நாட்டின் ஆட்சித் தலைவர் என்ற அடிப்படையிலானது. அது தனிப்பட்ட முறையிலானதல்ல. எனவே சீனாவை எந்த ஆட்சி மாற்றமும் பாதிக்கும் வாய்ப்புக் குறைவு. நாட்டில் முற்றாகவே ஒரு அமெரிக்க அல்லது இந்தியக் கொத்தடிமை ஆட்சி (2010இல் அமெரிக்கா விரும்பிய சரத் பொன்சேகா ஆட்சி போல) ஒன்று வந்தாலொழிய சீனாவின் அரசியல் பொருளாதார உறவுகட்குக் குறிப்பிடத்தக்க கேடு விளையாது.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு 47

**இலங்கை இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் பதின் மூன்றாம் சட்டத் திருத்தம் நிறைவேறியது. வட, கிழ் மாகாணங்களை இணைந்த வடக்கு–கிழக்கு மாகாண சபையுட்பட எட்டு மாகாண சபைகள் நிறுவப்பட்டன.**

**எனினும், எந்த நோக்கத்திற்காக மாகாண சபைகள் நிறுவப் பட்டனவோ அந்த நோக்கம் இன்றுவரை நிறைவேற்றவில்லை என்பது வருந்தத்தக்க உண்மை.**

இமயவரம்பன்

## இந்திய வலையில் இலங்கை அரசாங்கம்



**1983** ஜூலை தமிழர் விரோதக் கலவரம் இலங்கை அரசியலில் முக்கியமான திருப்புமுனையெனினும், அதன் முக்கியமானதொரு விளைவு இலங்கையின் அயலுறவுகள் பற்றியது. கலவரம் பற்றி தென்னிலங்கையில் பொதுவாக உருவாக்கப் பட்டு இன்னமும் நிலவும் எண்ணம் ஏதெனின் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13 அரசாங்கப் படையினர் பலியானதாலேயே 1983 கலவரம் நிகழ்ந்தது என்பதாகும். வட பகுதியில் இராணுவத்தைப் பெருந்தொகையிற் குவிக்கும் தேவை என்ன என்பதோ, முற்றிலும் சிங்களவர்களையே கொண்ட இராணுவத்தினரதும் மிகச் சில தமிழரையே கொண்ட பொலிஸ் படையினதும் நடத்தையால் மக்கள் எவ்வளவு வெறுப்புற்றிருந்தனர் என்பதோ தெற்கிற் பேசப்படவில்லை. அதைவிடப் 13 படையினரின் சாவுக்குப் பழிவாங்கலாகப் படையினர் அத் தாக்குதல் நடந்த அயலில் நடத்திய வெறியாட்டமும் அதிற் சாதாரணத் தமிழ் மக்கள் பலர் கொல்லபபட்டதும் பேசப்படுவதில்லை. இராணுவம் தனது கொலை வெறியைத் தணித்த பின்பு கொலையுண்ட படையினரின் சடலங்களைக் கொழும்பிற்குக் கொண்டுவந்து அதை ஒரு அரசியல் நிகழ்வாக்கியே 1983 வன்செயல்கள் கிளறப்பட்டன என்பது அரிதாகவே பேசப்பட்டுள்ளது. கொழும்பைச் சேராதவர்களான படையினரின் சடலங்களை அவர்களுடைய ஊர்கட்கே கொண்டு செல்வது தகுமெனப் பிரதமர் பிரேமதாச பரிந்துரைத்தும், அதை மீறிச் சனாதிபதி ஜயவர்தன சடலங்களைக் கொழும்புக்குக் கொண்டுவந்த நோக்கம் ஆழமானது. சடலங்கள் வந்துசேர முன்பே தமிழர் விரோத வன்முறை திட்டமிடப்பட்டது என நம்ப மிகுந்த நியாயங்கள் உள்ளன. 1977ம் ஆண்டு தொடங்கிய தமிழர் விரோதப் பணியை முழுமைப்படுத்தித் தமிழ் மக்களை நிரந்தரமாகப் பயமுறுத்தி வைப்பதே 1983 ஜ/லை வன்முறையின் நோக்கமாகும்.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைப் பணிவிக்க ஜயவர்தனவுக்கு உதவியாக எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மருமகனும் கடுமையான இடதுசாரி எதிர்ப்பாளருமான ஏ.ஜே. வில்சன் அமைந்தமை ஒருபுறமிருக்கக் கூட்டணித் தலைமை எவ்வகையிலும் தமிழ் மக்களைக் கிளர்ந்தெழுவிக்க ஆயத்தமில்லை என்பதை 1977 அளவிலேயே ஜயவர்தன அறிந்திருப்பார். வடக்கின் தமிழ் மக்களைப் பணிய வைப்பதான அவருடைய இலக்கை அடைய இளைஞர்களின் அதிருப்தி தடையாயிருந்தது. அவர்களை அடக்கி, வைக்க வேண்டிய இடத்தில் வைக்க அவர் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் எதிர்மாறான விளைவையே தந்தது. அவருடைய விரக்திக்குத் தூபமிடுமாறு, 1982 ஒக்றோபரில் நடந்த சனாதிபதித் தேர்தலிலும் அடுத்து 1982 டிசெம்பரில் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தைத் தேர்தலின்றி ஆறு ஆண்டுகளால் நீடிக்க அவர் நடத்திய சர்வசன வாக்கெடுப்பிலும் தமிழர், குறிப்பாக வடபுலத்து மக்கள், அவருடைய முகத்தில் அறைவது போல அவருக்கு எதிராகவும் பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிப்பதற்கு எதிராகவும் வாக்களித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது சந்தர்ப்பத்தில் கூட்டணி மிகக் கோழைத்தனமாக நடந்தது. யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் சிறப்பாக அதன் ஆங்கில வார ஏடான 'சற்றடே றிவ்யூ" அரசியற் சஞ்சிகையும் கடுமையாக விமர்சித்து வந்ததாலேயே கூட்டணி இறுதி நேரத்திற் பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிப்பதற்கு எதிராக வாக்களிக்குமாறு பரிந்துரைத்தது. அதற்குக் கட்டியங் கூறுவது போலச் சனாதிபதி தேர்தலின் போது அதன் நடத்தை அமைந்திருந்தது. அவர்கள் தேர்தலை வெல்லப் பயன்படுத்திய 'தமிழீழக் கோரிக்கை' பாசாங்கானது என்பதைச் சுட்டிக்காட்டி, 1976 வட்டுக் கோட்டைத் தீர்மானம் பற்றி அவ்வேளை அதிக ஊக்கங் காட்டாத குமார் பொன்னம்பலம், தமிழீழக் கோரிக்கையை முன்னிறுத்தித் தேர்தலில் நின்றார். கூட்டணியின் நிலை திருடனுக்குத் தேள் கொட்டியது போலாயிற்று. குமார் பொன்னம்பலத்தை எதிர்க்கவும் இயலாமல் உள்ளூர விரும்பியவாறு ஜயவர்தனவை வெளிப்படையாக ஆதரிக்கவும் இயலாமல் தடுமாறிய கூட்டணி மறைமுகமாக ஜயவர்தனவை ஆதரித்துப் பிரசாரஞ் செய்தது. எனினும் எந்தத் தமிழ்த் தேசியவாதியும் எதிர்பாராதளவு வாக்குக்களை ஸ்ரீ.ல.சு.க. வேட்பாளர் ஹெக்ற்றர் கொப்பேகடுவ பெற்றார். சிரிமா பண்டாரநாயக்க ஆட்சியில் விவசாயிகள் அனுபவித்த செல்வச் செழிப்பை ஜயவர்தன ஆட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் இழந்தமையே அதன் காரணமாகும்.

இவை யாவும் ஜயவர்தனவின் தமிழர் விரோத வன்மத்துக்குத் தூபமிட்டன. எனினும், பேரினவாத ஒடுக்கலைப் போராக வளர்ப்பதில் ஜயவர்தனவின் அக்கறைக்கு முக்கிய காரணம் தன் மேற்குலகச் சார்ப்பு அயற்கொள்கையும் திறந்த பொருளாதாரமும் தனியார் மயமாக்கலும் பிற நடவடிக்கைகளும் மக்களிடையே எழுப்பக் கூடிய எதிர்ப்பைத் திசை திருப்புவதாகும். எனினும் 1983 வன்முறையை அரசாங்கமே திட்டமிட்டு அரங்கேற்றியது என்பதைப் பலரும் நன்கறிவர். ஜயவர்தனவால் அதன் அளவை மட்டுப்படுத்த இயலாதவாறு யூ.என்.பி.யின் தீவிர பேரினவாதத் தலைவர்கள் வன்முறையை நாடு முழுவதும் பரப்பினர். நிகழ்வுகள் மிகவும் குரூரமாயும் காட்டுமிராண்டித்தனமாயும் அமைந்தபோதும் அவற்றில் எதையும் ஜயவர்தன கண்டிக்கவில்லை. மாறாக அதைச் சிங்கள மக்களின் நியாயமான கோபம் என்று நியாயப்படுத்தினார். அமைச்சர்களும் வெவ்வேறு அளவுகட்கு அதை நியாயப்படுத்தினர். இக் கொடுமையை ஒப்பேற்றியதும் போதாமற், தமிழரை அரசியல் ரீதியாகவும் தண்டிக்க முற்பட்டார். அரசியல் யாப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தின் மூலம் இலங்கை அரசுக்கும் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும் விசுவாசமாகச் சத்தியப் பிரமாணம் செய்யாத எவரும் அரசாங்கப் பதவியில் இருக்கவோ பாராளுமன்றத்திலே ஊராட்சியிலோ உறுப்புரிமை பெறவோ இயலாமலாக்கப்பட்டது. அதன் பயனாகப், பாராளுமனறத்தின் ஆயுட் காலத்தை மேலும் ஆறாண்டுகள் நீடித்ததை உள்ளூர விரும்பிப் பாசாங்காக எதிர்த்த கூட்டணித் தலைவர்கள் தமது பாராளுமன்ற ஆசனங்களை இழந்தனர்.

1983 வன்முறையை அவ் வேளை இலங்கையிலிருந்த சுற்றுலாப் பயணிகள் கண்டதுடன் காணொளிகளாகப் பதிவு செய்ததால் மேற்குலக ஊடகங்களில் அதன் அருவருக்கத்தக்க உண்மைகள் வெளியாயின. ஜயவர்தன ஆட்சிக்கு நெருக்கமான மேற்குலக ஆட்சிகளும் தோற்றத்துக்காகவேனும் இலங்கை அரசாங்கத்தைக் கண்டிப்பதாகக் காட்டிக் கொண்டன. அத்துடன் 1983ம் ஆண்டின் வன்முறையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டோர் மட்டுமன்றிப் பிற தமிழர்களும் தடையின்றி மேற்கு நாடுகளிற் தஞ்சம் புக இயலுமாயிற்று. அப் புலப்பெயர்வு தேசிய இனப் பிரச்சனைக்கு மேலுமொரு பரிமாணத்தைச் சேர்ந்தது. அதைப் பற்றி வேறொரு இடத்திற் கவனிப்போம்.

போராற் பாதிக்கப்பட்ட தமிழர்களிலே ஒரு பகுதியின் குறிப்பாகப் பொருள் வசதி குறைந்தோர் இந்தியாவுக்குப் பெயர்ந்தனர். அவர்களிடையே பொருள் வசதி படைத்தவர்களும் 1983க்குப் பின்பு தமிழ் மக்களுக்கு முகங்கொடுக்க இயலாதவர்களான பல கூட்டணித் தலைவர்களும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பல்வேறு தமிழ் பிரமுகர்களும் இருந்தனர். 1978ம் முதல் மீண்டும் இந்திராகாந்தியின் தலைமையிலிருந்த அரசாங்கம் இத்தகையதொரு வாய்ப்பிற்காகக் காத்திருந்தது.

1977இல் ஆட்சிக்கு வந்தது முதலாக இலங்கையின் பொருளாதாரத்தைச் சர்வதேச ஏகபோக முதலாளியிடம் சரண்புகுவித்த ஜயவர்தன அரசாங்கம் இலங்கையின் அயற் கொள்கையை முற்றாக அமெரிக்கச் சார்பானதாக்கியது. இந்தியாவின் நலன்கட்கும் பிராந்திய மேலாதிக்க நோக்கங்கட்கும் அது கேடாக அமைந்தது. எனவே 1983 தமிழர் விரோத வன்முறையையும் அதனால் விளைந்த அகதிகள் பிரச்சனையையும் காரணமாக்க இந்தியா ஒரு புறம் இலங்கைக்கு ராஜதந்திர நெருக்குவாரங்களைக் கொடுத்ததுடன் இன்னொரு புறம் தனது உளவு நிறுவனமான 'றோ' மூலமும் பிற முகவர்கள் மூலமும் தமிழ் இளைஞர் இயக்கங்கட்கு நிதியுதவியும் ஆயுதப் பயிற்சியும் வழங்கியது. இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்புக் கொள்கைக்கு உடன்பாடான இயக்கங்கள் சிறப்பான கவனிப்பைப் பெற்றன. அதேவேளை இயக்கத் தலைமைகளிடையே போட்டியும் ஊக்குவிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் ராஜதந்திர நெருக்குவாரங்களை ஜயவர்தன அரசாங்கம் இயன்றவரை தட்டிக்கழித்தது. 1983 முடிவில் முன்னெடுத்த பேச்சுக்களும் இந்திய ஊக்குவிப்பாளர்கள் 1984 ஜனவரியில் தொடக்கிய சர்வகட்சி மாநாடும் முடங்கின. இலங்கையின் ராணுவமும் விடுதலைப் புலிகளும் பெருமளவிலான படுகொலைகளை மாறிமாறி நடத்தி வந்தனர். இராணுவக் கெடுபிடிகளும் அடாவடித்தனமும் வலுத்தாலும் தமிழ்ப் போராளிகளின், குறிப்பாக விடுதலைப் புலிகளின், வன்செயல்களை அடக்க இயலவில்லை. மாறாக அவை வலுத்தன. தமிழர் விடுதலை இயக்கங்களின் வன்செயல்கட்கு இந்திய ஊக்குவிப்பு இருந்த நிலையில் இந்தியாவை நடுவராக வைத்துப் பேச்சுக்களை நடத்த இலங்கை அரசாங்கம் தயங்கியது. இருப்பினும் நியாயமான ஒரு தீர்வுக்கு ஜயவர்தன அரசாங்கம் எவ்வகையிலும் ஆயத்தமாயிருக்கவில்லை. அதே வேளை இந்தியக் குறுக்கீட்டைத் தவிர்க்கவியலாத சூழலையும் அது உணர்ந்தது. 1984இன் ஈற்றுப் பகுதியில் இந்திரா காந்தியின் கொலையும் ராஜீவ் காந்தியின் பதவியேற்பும் இந்திய அனுசரணையுடனான பேச்சுகட்கு வசதியாகின. எனினும் இந்திய நோக்கங்களோ இலங்கை அரசாங்க நோக்கங்களோ அடிப்படையில் மாறவில்லை.

1985இல் சிக்கிமின் தலைநகரான திம்புவில் நடந்த பேச்சுக்களே இலங்கை அரசாங்கத்துக்கும் போராளிகள் உட்பட்ட தமிழ்த் தேசியவாதிகட்கும் நடந்த முதல் அமைதிப் பேச்சுக்களாம். திம்பு பேச்சுக்களில் முன்வைத்த தமிழ்த் தேசிய நிலைப்பாடுகளின் சாராம்சம் வடக்குக் கிழக்கைப் பாராம்பரியப் பிரதேசமாகக் கொண்ட தமிழர், சுயநிர்ணய உரிமைக்கு அருகதையுள்ள ஒரு தேசிய இனம் என்பதாகும். அத்துடன் மலையகத் தமிழர் அனைவர்க்கும் குடியுரிமை என்பதும் சேர்க்கப்பட்டது. திம்புப் பேச்சுக்கள் முறிந்ததில் வியப்பேதுமில்லை. இலங்கை அரசாங்கம் தன் போர் முனைப்பைத் தீவிரமாக்கியது. குடாநாட்டுக்குள் அத்தியாவசியப் பொருட்கள் செல்வதை மறித்த வடமராட்சி நடவடிக்கையின் போது குடாநாடு கடல் முற்றுகைக்குள்ளானது. அப்போது, இந்திய அரசாங்கம் மனிதாபிமானத்தின் பேரிற் கடல் மூலம் உணவுப் பொதிகளை அனுப்ப முயன்று அது இயலாதபோது விமானம் மூலம் பொதிகளை வீசியது. அது இந்தியா ஜயவர்தன ஆட்சிக்கு விடுத்த ஒரு கடும் எச்சரிக்கை என்பதற்கு மேல் அதற்கு ஒரு அரசியல் முக்கியமும் இருக்கவில்லை. அதன் பின்பு இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் துரிதமாக ஒரு உடன்பாட்டுக்கு வந்தன என்றால், இந்திய அரசாங்க நெருக்குவாரத்திற்கு இலங்கை

தொடர்ச்சி 6ம் பக்கம்

# மைத்திரி-ரணில் ஆட்சியின் இடைக்கால வரவுசெலவுத் திட்டம்: ஒரு பார்வை

சிறீ

மைத்திரி-ரணில் தலைமையிலான புதிய ஆட்சியின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஜனவரி 29ம் திகதி இடைக்கால வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்திற்கும் முன்னைய மகிந்த ராஜபக்சவின் வரவு செலவுத் திட்டங்களுக்குமிடையே ஒரு வித்தியாகம் உண்டு. முன்னைய ஆட்சியின் போது ஜனாதிபதியே சகலதுமாயிருந்தார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வருடா வருடம் வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்து வந்தார். பொருட்களின் விலை அதிகரிப்புக்கு வர்த்தகர்கள் காரணம் என்றும் பொருட்களின் விலைக் குறைப்பு ஏற்படும் போது அது ஜனாதிபதியின் பணிப்புரையில் இடம்பெறுவதாகவும் கூறி வந்தமை குறிப்பிடதக்கது.

2015ம் ஆண்டிற்கான மகிந்தவின் வரவுசெலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை ரூபா 52,100 கோடி. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.6 சதவீதம். உண்மையிற் துண்டுவிழும் தொகை அதினும் அதிகம் எனப்படுகிறது.

2014 முடிய உள்ள காலப்பகுதியில் திறைசேரி, அரச உடைமை கொண்ட நிறுவனங்கள் உட்கட்டமைப்பு வசதிகளை நடைமுறைப்படுத்து முகமாக, 52,400 கோடி ரூபாவிற்கு வர்த்தக வங்கிகளுக்கு உத்தரவாதம் வழங்கியிருந்தது. அரச உடைமையான நிறுவனங்கள் செயற் திட்டங்களுக்குப் பெற்ற வங்கிக் கடனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அரசு அக் கடனைச் செலுத்தும்.

2014 அரச உடைமையான நிறுவனங்கள் வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை 59,300 கோடி ரூபாவாகும்.

மகிந்த அரசு சமர்ப்பித்த முன்னைய வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையில் அரச நிறுவனங்கள் பெற்றுக் கொண்ட அந்நியக் கடன் தொகையும் உள்ளடங்கவில்லை.



ரவி கருணாநாயக்க வெளியிட்ட தகவலின் படி 2014 முடியவுள்ள காலப்பகுதியில் அரசு செலுத்த வேண்டியிருந்த கடன் 737,300 கோடி ரூபாவாகும். இத் தொகையுடன் அரச நிறுவனங்களின் கடன் தொகையையும் சேர்த்தாற் கடன் தொகை 881,700 கோடி ரூபாவாகும். இது தனிநபர் ஒருவரை 427,220 ரூபாவுக்குக் கடனாளியாக்குகிறது.

முன்னைய அரசு கடந்த மூன்று வருடங்களாக மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 15 சதவீதத்தைப் பெறவில்லையென மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கூறுகிறார். 2015ம் ஆண்டில் 4000 கோடி ரூபா வரியை வரியிறுப்பாளர்களிடமிருந்து பெறுவதற்கு அவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்க முன்வந்தது. வரிகொடுப்பதை வேண்டுமென்றே தவிர்ப்பவர்களைத் தண்டிக்காமல் அவர்களுக்குச் சலுகைகள் வழங்க அத்தியாவசியப் பொருட்களின் மீது மறைமுக வரியை அறவிட்டு வருகிறார்கள்.

2015 ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அரச வருமானத்தை நேரடி வரியாக 22 சதவீதத்தையும் மறைமுக வரியாக (மக்கள் மீது) 78 சதவீதயாயும் அறவிட ஏற்பாடாயிருந்தது. நேரடியவரியான 22 சதவீதத்தைக் கூட அறவிடமுடியாத அரசு, மக்களின் பாவனைப் பொருள்கள் மீது 78 வீத மறைமுக வரியை அறவிடுகிறது.

புதிய நிதி அமைச்சர் மறைமுகவரியில் எத்தனை சதவீதத்தைக் குறைத்துள்ளார் என்பதையே நாம் அறிய வேண்டியுள்ளது.

உலகச் சந்தையில் எண்ணெய் விலை அரைவாசிக்குக் குறைந்த நிலையில், எண்ணெய் விலையிற் சிறு குறைப்பே செய்யப்பட்டுள்ளது.

14 இலட்சம் அரச ஊழியர்கட்கு இந்த மாதத்திலிருந்து (பெப்ரவரி) ரூபா 5000 சம்பள உயர்வு வழங்கும் நிதி அமைச்சர், அதே வேளை, 70 இலட்சம் தனியார் துறையினரை அம்போ எனக் கைவிட்டுவிட்டார். இது பல்தேசியாக் கம்பனிகட்கும் அந்நிய, உள்நாட்டுத் தனியார் நிறுவனங்கட்கும் இணங்கிப் போகும் போக்கின் வெளிப்பாடாகும். இதன்மூலம் தனியார் துறையின் சுரண்டல் தொடர்வதறகான வழிவகைகள் முன்பு போல் தொடர நல்லாட்சி அரசு வழிவகுத்துள்ளது.

மாவின் விலையைக் குறைத்ததாகக் (12ரூ 50 சதம்) கூறிய போதும் பாணின் விலையை ஆறு ரூபாவால் மட்டுமே குறைந்திருக்கிறார்கள். இவை வெறும் கண்துடைப்புகளே அன்றி வேறெதுவுமில்லை. முன்னைய அரசு சீனாவிடமிருந்து கடனைப் பெற்றதெனக் கூப்பாடு போட்டவர்கள் இன்று உலக வங்கியிடமிருந்தும் இந்தியாவிடமிருந்தும் கடனுக்குக் காவடி எடுக்கிறார்கள். வெளிவிவகார அமைச்சரின் முதல் வெளிநாட்டு விஜயம் இந்தியாவிற்கானது. ஒரு ஆங்கிலப் பத்திரிகை இந்தியத் தலைவர்களுக்கு பூஜை செய்ய வெளிவிவகார அமைச்சர் சென்றுள்ளார் எனத் தெரிவித்திருந்தது.

பொதுத் தேர்தலுக்கு முன் 20,000 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான அரச முறிகளை விற்கவுள்ளதாக சிலோன் ருடே பத்திரிகை தெரிவிக்கிறது. சர்வதேசச் சந்தையில் (அமெரிக்க-ஐரோப்பிய சமூகம்) பெப்ரவரி மாதத்தில் இக் கடனைப் பெறவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜீனா மகேந்திரன் கூறுகிறார். தற்போதைய மாற்றுவீதம் ஒரு டொலர் ரூபா 132.20. இக் கடனானது 26,44,000 கோடி ரூபாவாகும். ஏற்கெனவே வெளிநாடுகளிற் பெற்ற கடன்கட்கு வட்டியும், ஒரு பகுதி முதலுமாக மீளளிப்பதற்கே இந்தப் புதிய கடன் பெறப்படுகிறது.

மைத்திரி-ரணில் அரசின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு ஏமாற்றம் தரும் வகையிலான வெறும் ஆறுதல் பரிசு போன்றதேயாகும்.

# வடக்கின் மீன் வளத்தைக் கொள்ளையிடும் தமிழ்நாட்டு மீன் முதலாளிகள்

வடக்கின் கடல் பிரதேசத்தில் தென்னிந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறிப் பிரவேசித்து பாரிய அளவில் மீன்களைப் பிடித்து செல்கின்றன. இவ்வாறு இலங்கையின் கடல் எல்லையைத் தாண்டி வருபவர்கள் பெரு வள்ளங்களிலேயே வந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அதனால் வடபுலத்து மீன்வர்கள் கடும் பாதிப்புக்கு உட்படுகிறார்கள். தமது தொழில்களை உரியபடி செய்ய முடியாது நகூஷ்டமடைகின்றனர். சில வேளைகளில் தென்னிந்தியப் படகுகளில் வருவோர் வடபுலத்து மீனவர்களின் வலைகளை வெட்டிச் சேதப்படுத்துகின்றனர். இவ்வாறு அத்துமீறி வடபுலக் கடலில் மீன் பிடித்துச் செல்லும் தமிழ்நாட்டுப் பெரும் படகுகள் சாதாரண மீனவர்களுடையவை அல்ல. அவை தமிழ் நாட்டின் பெரும் மீன்பிடி முதலாளிகளுடையவை. அதில் வேலை செய்வோர் சம்பளத்திற்குத் தொழில் புரிவோராவார். ஆனால் இலங்கையின் கடல் எல்லையைத் தாண்டிச் சென்று மீன்பிடிக்க வைப்போர் பெரும் படகுகளின் சொந்தக்காரர்களான முதலாளிகளே. ஆனால் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காகத் தொழிலில் ஈடுபட வேண்டிய கட்டாயத்திலேயே தமிழ் நாட்டு மீனவர்கள் வடபுலக் கடலுள் அத்துமீற வர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதனாற் தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் அடைபடுகின்றனர். இத்தகைய சாதாரண தமிழ்நாட்டு மீனவர்கள் பெரும் படகுகளின் முதலாளிகளால் சுரண்டபடுவதுடன் வட



பகுதி மீனவர்களின் எதிரிகளாகவும் மாற்றப் படுகின்றனர்.

இந்நிலையில் இலங்கையின் வடபுல மீனவர்களின் நிலை மோசமானதகக் காணப்படுகிறது. முப்பது வருட யுத்தம் வடபுல மீனவர்களின் தொழில்களையும் வாழ்வையும் பெரும் அழிவுகளுக்கு உள்ளாக்கியது. அவற்றிலிருந்து மீனவர்கள் இன்னமும் மீளவில்லை. அதே வேளை இனியாவது சுதந்திரமாகத் தொழில் செய்யலாம் என்ற நிலை உருவாகியுள்ள சூழலிற், தமிழ்நாட்டுப் பெரும் மீன்பிடி முதலாளிகளின் கொள்ளை லாப ஏவலால், அவர்களது படகுகள் வடபுல மீனவர்கள் தமது தொழிலைச்சுதந்திரமாகச்செய்யவிடாது அத்துமீறிய அடாவடித்தனத் தொழிலில் ஈடுபடுகின்றன. எனவே எய்தவன் இருக்க அம்மை நோவது என்றவாறு தமிழ்நாட்டுப் பெரும் மீன் முதலாளிகளின் நிலை பற்றி இங்கு பேசப்படுவதில்லை. தொழில் நிர்ப்பந்தம் காரணமாக அவர்களால் ஏவப்பட்டு இங்கு வரும் சாதாரண மீனவர்களையே நம்மவர்கள் நோகின்றனர். அப் பெரும் முதலாளிகள் ரோலர் படகுகள் மூலமும் ஏனைய தடைசெய்யப்பட்ட வலைகள், உபகரணங்கள் மூலமும் வட பகுதியின் மீன் வளத்தைச் சூறையாடுகின்றனர்.

வடபுல மீனவர்கள் தமிழ்நாட்டுப் பெரும் படகுகளின் அத்துமீறிய மீன் பிடியாற் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இங்குள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் என்போர் அதைப் பற்றிப் பேசத் தயங்குகின்றனர். சிலர் வெறும் கண்துடைப்பாகப் பேசிப் பின்னர் மௌனம் காக்கின்றனர். தமிழ்நாட்டுப் பெரும் மீன் முதலாளிகளின் அத்துமீறலைச் சுட்டிக்காட்ட அவர்கள் தயாராக இல்லை. அது இந்திய எசமானர்களைக் கோபப்படுத்தும் என அஞ்சுகின்றனர். அதனால் அதைத் திசைதிருப்பித் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலையோ மீன்பிடியையோ பற்றி நீட்டி வாசிக்கின்றனர். ஏனெனிற் தென்னிலங்கை மீனவர்கள் பற்றிப் பேசுவது எளிதானதும் இனவாதம் பேச வசதியானதுமாகும்.

எனவே வட பகுதி மீனவர்கள் அணிதிரண்டு மாகாண சபையிடமும் மத்திய அரசாங்கத்திடமும் தமது கோரிக்கைகளை முன்வைத்து வெகுஜனப் போராட்டங்களை முன்னைவிடப் பன்மடங்காக முன்னெடுக்க வேண்டும். தமது தொழிற் பாதுகாப்பையும் உத்தரவாதத்தையும் பெறத் துணிய வேண்டும். தமிழ்த் தலைமைகள் தமது அரசியல் நலன்களுக்காக இந்தியாவிடமோ தமிழ்நாட்டு முதலாளிகளிடமோ நியாயம் கேட்கமாட்டார்கள். நமது மீனவ மக்களே நியாயங்கேட்டு வீதியில் இறங்க-வேண்டும்.

10ம் பக்கத் தொடர்ச்சி...

## இலங்கையின்...

அரசாங்கம் பணிந்து இந்தியா வலியுறுத்திய ஒரு தீர்வை ஏற்றது என்பதே அதன் பொருள்.

இந்திய இலங்கை உடன்படிக்கை வெறுமனே தமிழ் மக்களின் அபிலாட்சைகளைப் பற்றியதுமல்ல அவற்றைச் செவ்வனே நிறைவு செய்வதைப் பற்றியதுமல்ல. பேசப்படாத அதன் இன்னொரு அம்சம் முக்கியமானது. அதுஇந்திய அரசின் அனுமதியின்றி இலங்கை தனது பாதுகாப்புத் தொடர்பான எவ் வெளியுறவையும் மேற்கொள்வதை மறுப்பது. அது இலங்கையின் இறைமைக்குக் கேடானது. உடன்படிக்கையைத் தென்னிலங்கையில் ஏற்றோரும் தீவிரமாக எதிர்த்தோரும் அதைக் கவனியாமை அவர்களுடைய அக்கறைகள் இலங்கையின் இறைமை பற்றியனவல்ல என்பதைச் சுட்டின. ஸ்ரீ.ல.சு.க. தலைவியான சிறிமா பண்டாரநாயக்கா தனது எதிர்ப்பிற்குரிய காரணங்களில் அதையும் உள்ளடக்கியமை குறிப்பிடத்தக்கது. மற்றப்படி, வடக்கில் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) இந்திய இலங்கை உடன்படிக்கை தேசியப் பிரச்சனையைத் தீர்க்கப் போதாது என்பதையும் இந்திய மேலாதிக்க நோக்கங்கள் உடன்படிக்கையில் உள்ளடங்கியிருப்பதையும் சுட்டிக்காட்டி, உடனடியான சூழலில் தேசிய இனப் பிரச்சனையின் தீர்வை நோக்கிய ஒரு ஆக்கபூர்வமான நகர்வாக அதை வரவேற்றது.

இலங்கை இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் பதின்மூன்றாம் சட்டத் திருத்தம் நிறைவேறியது. வட, கீழ் மாகாணங்களை இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையுட்பட எட்டு மாகாண சபைகள் நிறுவப்பட்டன. எனினும், எந்த நோக்கத்திற்காக மாகாண சபைகள் நிறுவப்பட்டனவோ அந்த நோக்கம் இன்றுவரை நிறைவேற்றவில்லை என்பது வருந்தத்தக்க உண்மை.

இலங்கை இந்திய உடன்படிக்கையின் தோல்விக்கான காரணங்களில், அது இந்தியா தமிழ் மக்களையோ அவர்களின் பிரதிநிதிகளையோ கலந்தாலோசியாமல் தேசிய இனப் பிரச்சனை பற்றிய குறைபாடான புரிதலின் அடிப்படையில் இலங்கைத் தமிழர் சார்பில் எடுத்த முடிவு என்பது, இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை, அடிப்படையானது. எனினும் அதன் கீழ்த் தமிழ்த் தேசிய இனம் அனுபவித்திருக்கக் கூடிய சில உரிமைகளையும் அதிகாரங்களையும் இழக்கக் காரணம் விடுதலைப் புலிகளின் நிதானமற்ற அரசியல் என்பதையுங் கூற வேண்டும்.

எவ்வாறாயினும் இங்கு வலியுறுத்த வேண்டியது ஏதெனில் ஜயவர்தன அரசாங்கம், 1977 முதலாக அது கடைப்பிடித்த அயற் கொள்கை மூலம் இந்தியாவில் 1978இல் ஆட்சிக்கு மீண்ட காங்கிரஸ் ஆட்சியைப் பகைத்தது. இலங்கையின் அயற் கொள்கையும் பாதுகாப்புக் கொள்கையும் அமெரிக்கச் சார்பாக இருந்தமையைத் திருத்தி இயன்றளவு இந்திச் சார்பானதாக மாற்றும் நோக்கிலேயே இந்திய அரசாங்கம் செயற்பட்டது. அதற்கு இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை வாய்ப்பானது. 1977 வரை இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை பற்றி அசட்டையாயிருந்த இந்திய அரசாங்கத்தின் புதிய அக்கறை கவனிக்க வேண்டிய விடயமாகும். இலங்கையில் தமிழருக்கான தனிநாடு என்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஒரு மிரட்டல் என இந்திய ஆளும் வர்க்கம் கருதியதுடன் எந்த ஒரு அதிகாரப் பரவலாக்கமும் இந்திய மாநில அரசுகளின் அதிகாரத்தை மிஞ்சுவதை இந்தியா விரும்பவில்லை. இந்திய இலங்கை உடன்படிக்கையை இந்தியா இலங்கை மீது திணிக்க வசதியாக ஜயவர்தனவின் அமெரிக்கச் சார்புக் கொள்கையும் தேசிய இனஒடுக்கலும் அமைந்தன. தேசிய இனப் பிரச்சனையைப் போராக்குவதில் ஜயவர்தன ஆட்சியின் நோக்கம் எவ்வாறாயினும் அதன் தீவிரப்படுத்தலில் இந்தியக் குறுக்கீட்டுக்கு ஒரு முக்கிய பங்கிருந்தது.

இந்திய அரசு விரித்த வலையில் ஜயவர்தன அரசாங்கமும் அனைத்துத் தமிழ்த் தேசியவாதிகளும் கண்களை அகல விரித்தபடியே வீழ்ந்தனர் எனின் மிகையாகாது. இலங்கை இந்திய உடன்படிக்கை, இந்தியா தனது பிராந்திய மேலாதிக்க இலக்கை அடையும் நோக்கத்துக்கு மிக உதவியது. அது, குறுகிய காலத்தில் அமெரிக்காவுடனான பிராந்திய மேலாதிக்கப் போட்டியில் இந்தியாவின் வெற்றியாயினும் நீண்டகாலத்தில் இலங்கை இந்திய உறவிற் கசப்பையே ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும், 1983 வன்முறையின் விளைவுகள் ஒருபுறம் இந்திய மேலாதிக்க நோக்கங்கள் பற்றியவை. இந்திய அரசின் நடத்தை அதன் பின்பான ஒரு குறுகிய காலத்தைத் தவிர்த்தால் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையைத் தனக்கு வாய்ப்பாக்குவதைப் பற்றியதாகவே இருந்தது.

யூ.என்.பி. அரசாங்கம் மேற்கொண்ட பேரினவாத அணுகுமுறையின் விளைவுகளினின்று தென்னிலங்கை அரசியல் விடுபடவில்லை. இந்தியக் குறுக்கீடு தெற்கில் பேரினவாதத்தை வளர்க்கவே உதவியது. 13வது சட்டத் திருத்தத்தைத் தமிழர் சார்பான ஒரு இந்தியத் திணிப்பாகவே இன்றுவரை பெரும்பாலோர் காணுகின்றனர். அக் கருத்தைத் திருத்தப் போதியளவு முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களும் 13வது சட்டத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆயத்தமாயிருக்கவில்லை. சிங்கள மக்களின் அதிருப்தியைத் தனக்குச் சாதகமாக்க முயன்ற ஜே.வி.பி. பேரினவாதத் தீக்கு எண்ணெய் ஊற்றியது. தேசிய இனப் பிரச்சனையின் தீர்வைப் பற்றிய கனதியான அக்கறை இடையிடை ஏற்பட்ட போதும் அது நிலையாமைக்கு இலங்கையின் பிரதான முரண்பாடாகத் தேசிய இனப்பிரச்சனை முன்னணிக்கு வந்தமை முக்கிய காரணமெனலாம்.

தமிழ்த் தேசியவாதிகள் 1987 வரை முற்றாக இந்திய ஆதரவை நம்பியிருந்தனர். எனினும் இந்திய மேலாதிக்க நோக்கங்கள் விடுதலைப் புலிகளுடன் வெகு விரைவிலேயே பகைமைக்கு வழி கோலின. எவ்வாறாயினும் எல்லா நிலையிலும் ஒவ்வொரு தமிழ்த் தேசியவாத அமைப்பும் தமிழ் மக்களைத் தனக்குக் கீழ்ப்பட்ட ஒரு மக்கள் திரளாகவே கருதி வந்துள்ளதையும் தனது அரசியல் ஆதிக்கத்திற்கு ஆதரவாக அந்நிய வல்லரசுகளைச் சார்ந்து நின்றதையும் நாம் கவனிக்கலாம்.

ஒட்டுமொத்தமாக நோக்கின் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் அரசியல் பிற தேசிய இனங்களை விலக்கியே முன்னெடுக்கப்பட்ட ஒரு சூழலில் இலங்கையின் அரசியற், பொருளாதார, சமூக நெருக்கடிகள் 20ம் நூற்றாண்டின் இறுதிவரை மோசமாகி வந்தன.

1983க்குப் பின்பு போராக வடிவம் பெற்ற தேசிய இனப்பிரச்சனை போரின் முடிவு வரையான காலத்தின் செய்திகளாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் முக்கியம் பெற்றது. அவை குறிக்கும் அரசியற் போக்குகள் முக்கியமானவை. அவற்றையும் இலங்கையின் சமூக, பொருளாதாரப், பண்பாட்டுப் புலங்களில் நிகழ்ந்தவற்றையும் இனிவரும் பகுதிகளிற் சுருக்கமாகக் கவனிப்போம்.

---

7ம் பக்கத் தொடர்ச்சி...

## அதிகார மாற்றம்...

காரணமாக அவருடைய அம்பாந்தோட்டை மாவட்டத்யையும் பதுளை மாவட்டத்யையும் விட்டால் தென்னிலங்கைத் தொகுதிகள் யாவற்றிலும் ஏறத்தாழ 8 முதல் 12 சதவீதம் வரையும் வாக்காளர்களின் மனம் மாறியமையைப் புறக்கணிக்க இயலாது. அம்பாந்தோட்டையில் 4 சதவீத மனமாற்றமும் பொலன்நறுவையில் 23.5 சதவீதமான மனமாற்றமும் நிகழ்ந்தமைக்கு அவை வேட்பாளர்களின் சொந்தத் தொகுதிகள் என்பது முக்கிய காரணம். பதுளை மாகாண சபைத் தேர்தலின் பின்பு அங்கு அரசாங்கம் கடும் முயற்சி எடுத்தமை அங்கு குறைவான மாற்றத்துக்கு ஒரு காரணமாயிருக்கலாம். வடக்கு-கிழக்கின் வாக்களிப்பில் ஏற்பட்ட பெரிய மாற்றங்களில், தமிழர் 2010இற் போலன்றி, இம்முறை வாக்கெடுப்பில் உற்சாகங் காட்டியமையும் முஸ்லிம்களின் கடும் எதிர்ப்புணர்வும் கவனிக்க உகந்தன. திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்ட 16% மாற்றம் முக்கியமானது. எவ்வாறாயினும், நாடளாவிய முறையில் ராஜபக்ஸ ஆட்சியில் அதிருப்தி ஏறத்தாழ ஒருசீராகவே உருவாகியுள்ளது என்பதைப் பேரினவாதிகள் கவனிக்கப் போவதில்லை.

ராஜபக்ஸவைச் சார்ந்துள்ள பேரினவாதிகள், முஸ்லிம்களும் தமிழரும் சேர்ந்து தமது சனாதிபதியை வீழ்த்திவிட்டனர் என்ற மனக்கசப்பை ஏலவே வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இந்த ஆண்டு 1915 முஸ்லிம் விரோத வன்முறையின் நூற்றாண்டு என்பதும் கவனிக்கத்தக்கது. அதை விட இவ் வருடம் பாராளுமன்றப் பொதுத் தேர்தலும் நடக்கவுள்ளது. மாவட்ட அடிப்படையில் நோக்கின், தென்னிலங்கையின் 17 மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் ராஜபக்ஸவுக்குப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்துள்ளன. சிங்கள மக்களில் 45 சதவீதமானோளரவிலேயே மைத்திரிபால சிரிசேனவை ஆதரித்துள்ளனர். எவ்வித இன உறவு முன்னேற்றத்திற்கும் தடையாகத் தென்னிலங்கையிற் பேரினவாதம் இரு தரப்பிலும் வலிய அரசியற் சக்தியாய் உள்ளதை நாம் மறக்கலாகாது.

மைத்ரிபாலவின் வெற்றிக்கு ஜாதிக ஹெல உருமயவின் உண்மையான பங்களிப்புப் பெரிதல்ல. கொழும்பு மாவட்டத்தின் தெற்கு, கிழக்குப் பகுதிகளில் ஜாதிக ஹெல உருமயவுக்கு பெரும் செல்வாக்கு இருப்பதாக நம்பப்பட்டது. ஆனால் அது 2004 ஆண்டு தேர்தலில் யூ.என்.பி. அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை முன்னெடுத்தமை தொடர்பாக நகர்சார் சிங்கள நடுத்தர, உயர்தர வர்க்க மனக் கசப்பின் வெளிப்பாடாகும். 2000 ஆண்டு அரசியலில் அடிவைத்த சிஹல உருமய பிளவுண்டு சிதைந்தது. அதன் அப்பட்டமான மதவாதப் பிரதிநிதியாக எழுந்த ஜாதிக ஹெல உருமய, இரண்டு பெரிய கட்சிகளையும் பற்றிய மத்திய வர்க்க அதிருப்தியையும் அவ் வர்க்கத்தின் வலுவான பேரினவாத உணர்வுகளையும் பயன்படுத்தியது. அது கிளறிவிட்ட பேரினவாத உணர்வுகள் நாட்டில் ஏலவே வேரூன்றியிருந்த தேசிய இன முரண்பாடுகளால் ஊட்டம் பெற்றன. ஆனால் ஒரு மாற்று அரசியற் கட்சியாக வளர ஜாதிக ஹெல உருமயவுக்கு இயலவில்லை. நடுத்தர வர்க்கத்திடையே பேரினவாத்தை தூண்டும் ஒரு கருவியாக மட்டுமே அது இருந்தது. ஏனெனில் அதன் பேரினவாதத்தை வசதிக்கேற்ப உள்வாங்குவது இரண்டு பெரிய முதலாளிக் கட்சிகட்கும் கடினமானதல்ல.

தேசிய இனப் பிரச்சனையைத் தீர்ப்பது மைத்ரிபால நிருவாகத்தின் உடனடித் தேவையல்ல. அதை உறுதியளித்து அவர் தேர்தலில் நிற்கவுமில்லை. அவருடைய தேவைகள் தன்னுடைய ஆட்சியை உறுதிப்படுத்துகிற காரியங்களை மேற்கொள்வதாகும். குற்றச் செயல்களில் ஈடுபட்ட அரசாங்கத் தரப்பினர் சிலராவது தண்டிக்கப்படுவர் என எதிர்பார்க்கலாம். நீதியரசரின் நியமனம் முறைகேடானது எனினும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க மீது சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விலக்காமல் நீதித்துறையைத் தன் கட்டுப்பாட்டுக்குட் கொள்வது கடினம் என மைத்ரிபால அறிவார். அது எவ்வாறோ கவனிக்கப்பட்டுவிட்டது. பொலிஸ், ஆயுதப் படைகளின் களையெடுப்பு நிதானாக நிகழலாம். ஏனெனில் பொலிசும் தேர்தல் ஆணையாளரும் வெளி அழுத்தங்களாலோ வேறு காரணங்களாலோ தேர்தலுக்குப் பத்து நாட்கள் அளவில் முன்பிருந்து கொஞ்சம் 'நடுநிலையாக' நடந்தார்கள். எனவே புதிய சனாதிபதி வலிந்து பகையைத் தேட முனைய மாட்டார். அதைவிட, அடுத்த பொதுத் தேர்தல் சில மாதங்களில் நடக்கவுள்ளது.

வாக்கெடுப்பை இப்போதைய தேர்தல் முறையிற் கணித்தல் இரண்டு அணிகள் மட்டுமே போட்டியிடும் ஒரு தேவுதலில், ராஜபக்ஸ தரப்பு 105 ஆசனங்களையும் எதிவுத்தரப்பு 120 ஆசனங்களையும் பெறும். அவற்றில் 30 அளவில் தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ்க் கட்சிகட்குரியன. 1977இலிருந்த தொகுதி அடிப்படையில் நோக்கின் வடக்குக் கிழக்கின் 24 தேர்தல் வட்டாரங்களில் மகிந்த ராஜபக்ஸ இரண்டில் மட்டுமே வென்று எஞ்சியுள்ள 136 வட்டாரங்களில் தொண்ணூற்றிரண்டில் வென்றுள்ளனர். மலையகத்தில் முக்கியமாக நுவரெலியாவிலும் வேறும் வட்டாரங்களிலும் தெற்கில் புத்தளம், பேருவல உட்பட்ட பல வட்டாரங்களிலும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் ஆதரவாலேயே மைத்ரிபால வென்றுள்ளார். எனவே, சிங்கள வாக்காளர்களிடையே ராஜபக்ஸவின் ஆதரவுத் தளம் வலுவானது என்பதில் ஐயமில்லை. ஆயினும் தேர்தல் பிரசாரத்தின் சமமின்மையும் அரச வளங்களின் துஷ்பிரயோகமும் லஞ்சமும் ஆற்றிய பங்கும் புறக்கணிக்கத்தகாதன. இருந்தும் ராஜபக்ஸ தலைமையில் உடனடியாக ஒரு பொதுத் தேர்தல் நடந்திருந்தால் ஸ்ரீ.ல.சு.க.வும் அதன் தற்போதைய கூட்டாளிகளும் பெரும்பான்மை ஆசனங்களை இல்லாவிடினும் பெரும்பான்மைக்குக் கிட்டிய தொகையை வென்றிருப்பர்.

எனவே ராஜபக்ஸவின் கட்டுப்பாட்டிலுள்ள ஸ்ரீ.ல.சு.க.வைத் தன் வசமாக்கும் தேவை மைத்ரிபாலவுக்கு உண்டு. கட்சி ஒழுங்குகட்கு முரணானவே ராஜபக்ஸ அவரைக் கட்சிப் பொதுச் செயலாளர் பொறுப்பினின்று விலக்கினார். அவர் சட்டரீதியாக அப் பதவியை மீட்டு அதன் மூலம் ஸ்ரீ.ல.சு.க.வைத் தன்வசமாக்க இடமிருந்தது. அத்துடன் ஸ்ரீ.ல.சு.கவில் மேலும் பலர் மைத்ரிபாலவின் பக்கம் திரும்பின் அதன் மீது ராஜபக்ஸவின் பிடி நெகிழும். ராஜபக்ஸ இதுவரை உடைக்காமல் விட்டு வைத்த ஒரே சிங்கள அரசியற் கட்சியான ஸ்ரீ.ல.சு.க.வை உடைக்கும் வாய்ப்பு மைத்ரிபாலவுக்குக் கிடைக்க முதலே ராஜபக்ஸ ஆதரவுப் பிரிவினர் அதை உடைக்க முயன்றனர். எதிர்பாராதவாறு, ராஜக்பக்ஸ எவ்வாறோ மனம் மாற்றுண்டு தலைமையை மைத்ரிபாலவுக்கு விட்டுக்கொடுத்ததால் உடனடிப் பிளவு தவிர்க்கப்பட்டது.

அடுத்த சில மாதங்கள் முத்கியமாக மைத்ரிபாலவின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் பணிகளிற் செலவாகும். எனவே வாக்குறுயளித்த 100 நாட் திட்டம் வெற்றிகரமாக முடியுமா என்பது நிச்சயமற்றது. மைத்ரிபால உறுதியளிக்காத 'களை பிடுங்கற்' பணிகள் தவறாமல் இடம்பெறுவது உறுதி.

சிங்கள மக்கள் மத்தியிற், குறிப்பாகப் பேரினவாதிகள் மத்தியிற், தமது ஆட்சியை மாற்றச் சிறுபான்மைச் சமூகங்கள் வழங்கிய பெரும் பங்கு பற்றிய ஆதங்கம் உள்ளது. அதே வேளை மைத்ரிபாலவின் பேரினவாதக் கூட்டாளியான ஜாதிக ஹெல உருமயவும் அவரை மறைமுகமாக ஆதரித்த ஜே.வி.பியும் முஸ்லிம்களையும் தமிழரையும் மெச்சிப் பேசியுள்ள போதும், அந் நன்றி பாராட்டல்கள் உதட்டளவிலானவை மட்டுமே.

ராஜபக்ஸ தோல்வியை மனதார ஏற்றாரா அல்லது வேறு வழியின்றி ஏற்றாரா என்ற நியாயமான ஐயம் வலுப்பட்டுள்ளது. எனினும் இராணு உதவியுடன் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை இயலாமலாக்கிய சக்திகள் உள்நாட்டை விட வெளிநாட்டிலேயே வலுவாக இருந்தன எனத் தேர்தலுக்குச் சற்று முன்பான நிகழ்வுகளும் பின்பான நிகழ்வுகளும் உறுதிப்படுத்தின.

ராஜபக்ஸ ஆட்சி போய்விட்டது என்ற மகிழ்ச்சி மைத்ரிபால ஆட்சியைப் பற்றிய புதிய கனவுகளை எழுப்பியுள்ளது. ஆனால் நிலைமைகளை நிதானித்து நோக்கின், நாட்டின் நேர்மையான முற்போக்கு-சனநாயக-இடதுசாரிச் சக்திகள் தமது அடுத்த நகர்வைத் திட்டமிட வேண்டிய தருணம் இது.

# சுன்னாகம் மின் உற்பத்தியினால் நன்னீர் கிணறுகள் நாசமாக்கப்பட்டுள்ளன.



யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீர் உவராகி வருவதால், மலக்கழிவு நீர் கலத்தல், மற்றும் கழிவு இரசாயனப் பாவனை போன்றவற்றால் நன்னீர் மாசடைந்து வருவது பற்றி ஏற்கனவே விவாதங்களும் எச்சரிக்கைகளும் உள்ளன. அதன் காரணமாகவே கிளிநொச்சி இரணைமடுக் குள நீரை யாழ் குடாநாட்டிற்குக் கொண்டு செல்லும் திட்டம் பற்றிப் பேசப்பட்டது. மாசடைவின் மூலம் யாழ் குடாநாட்டு நிலத்தடி நீர் குடிப்பதற்கும் ஏனைய பாவனைக்கும் மட்டுமன்றி விவசாயத் திற்கும் பயனற்றுப் போகும் அபாயம் அதிகரித்து வருவதைச் சூழல் மீது அக்கறை கொண்டோர் சுட்டிக் காட்டி வந்துள்ளனர்.

இச் சூழலிற் குடாநாட்டின் மையப் பகுதியான வலி-தெற்கு, வலி-வடக்கு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் புதிய வகைத் தண்ணீர்ப் பிரச்சினை உருவாகியுள்ளது. பல மாதங்கள் முன்பு சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்த கிணறுகளில் எண்ணெய்ப் படிவுகள் காணப்பட்டன. இன்று அவை ஏனைய பகுதிகளுக்கு விரைவாகப் பரவியுள்ளன. ஒரு தகவலின் படி, இதுவரை ஆயிரத்து ஐந்நூறு வரையான கிணறுகளில் இவ் எண்ணெய் படிவுகள் காணப்பட்ட தாகத் தெரிகிறது. அதனாற் பாதிக்கப்பட்ட கிணறுகளில் இருந்து நன்னீர் பெற முடியா துள்ளது. எனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிப்பதற்கு மட்டும் நீர்த் தாங்கிகள் வைத்து தண்ணீர் பவுசர் மூலம் பிரதேச சபைகள் இரண்டும் குடிநீர் வழங்கி வருகின்றன. ஆனால் நாளாந்தம் மேன்மேலும் எண்ணெய் படிவுகள் கிணறுகளில் தோன்றியபடி உள்ளன. இது நன்னீர் வழங்குவதிற் பெரும் பிரச்சினையை உருவாக்கி வருகிறது. போதியளவு நீர்த் தாங்கிகள் இல்லாததாற் தூர இடங்கட்குச் சென்று நன்னீர் பெறவேண்டிய நிலை காணப்படுகிறது.

இவ்வாறு பெறப்படும் நன்னீர் குடிக்கவும் சமைக்கவும் மட்டுமே பயன்படுகிறது. ஆனாற் குளிக்கவும் உடைகள், பாத்திரங்கள் கழுவவும் கால்நடைகளுக்கு வைக்கவும் மட்டுமல்லாது விவசாயத்திற்கும் அதே எண்ணெக் கழிவு கலந்த நீரே பயன்பட்டு வருகிறது. அதன் விளைவுகள் உடனடியாக வெளிப்படாவிடினும் விரைவாகவே கொடிய நோய்கள் மக்களைப் பற்றிக் கொள்ளலாம் எனச் சுகாதாரத துறை சார்ந்தோர் எச்சரித்து வருகின்றனர். அதன் முக்கியத்தை எடுத்துக் காட்டவும் மக்களை விழிப்புறுத்தவும் வைத்தியர்கள் சுழற்சி முறையில் கவனயீர்ப்புப் போராட்டம் நடாத்தினர். அதற்கு முன்பாக சுன்னாகத்தில் பொது அமைப்புகள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். அதிற் பாதிக்கப்பட்ட மக்களுடன் அரசியற் கட்சிகளும் கலந்து கொண்டன. இவற்றின் பின், சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இயங்கி வந்த "நொதேண் பவர்" என்னும் மின் உற்பத்திக் கம்பனியின் கழிவு எண்ணெய் நிலத்தடியில் கலந்த காரணத்தாலேயே கிணறுகள் மாசடைந்து வருகின்றன என்ற பாரிய குற்றச்சாட்டு எழுந்தது. நீதிமன்றம் வரை சென்ற அப் பிரச்சினை மக்கள் மத்தியில் கடும் விசனத்தையும் எதிர்ப்பயையும் எதிர்கொண்டது. நீதிமன்ற விசாரணையின் நடுவே மேற்படி நொதேண் பவர் கம்பனியை மூடிச் சீல் வைக்கும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இப்போது அக் கம்பனி பூட்டப் பட்டுள்ளது.

இக் கம்பனி ஒரு பல்தேசியக் கம்பனியாகும். அதன் ஒரே நோக்கம் லாபம் சம்பாதிப்பதாகும். இதுவரை பலநூறு கோடி ரூபாய்கள் லாப மீட்டிவிட்டது. அது அதன் கழிவு எண்ணெயை நிலத்தின் கீழ்ச் செலுத்தியதாகவே நம்பப்படுகிறது. இருப்பினும் கம்பனி கோடி ரூபாய்கள் லாபமீட்டிவிட்டது. இருப்பினும் ஆதாரபூர்வமாக அது உறுதிப்படவில்லை. இந் நிலையிலேயே வட மாகாண சபை அண்மையில் இவ் விடயத்தைத் தனது கவனத்திலெடுத்து ஒரு நிபுணர் குழுவை நியமித்திருப்பதாக அறிவித்து, உடனடியாகவே ஆய்வில் ஈடுபடுவதாகவும் மக்களுக்குக் கூறியுள்ளது. பிரச்சினைகள் எழும்போது, அவற்றை நேர்மையாக அணுகித் தீர்ப்பதற்கன்றி அதன் தீவிரத்தைத் தணிப்பதற்கும் திசை திருப்புவதற்குமே குழுக்கள் அமைப்பது வழக்கமாகும். அவ்வாறான ஒரு முயற்சியாக மாகாண சபையின் நிபுணர் குழு செயற்படுமா அல்லது பாதிக்கப்பட்ட வலி தெற்கு, வலி-வடக்கு மக்களின் அடிப்படை மனித உரிமையான நன்னீர் பெறுதல் மறுக்கப்பட்டமைக்கு நீதி கிடைக்க வழி ஏற்படுத்திக் கொடுக்குமா? பெறுபேறுகளைக் காண மக்கள் காத்திருக்கின்றனர்.

நொதேண் பவர் மின் உற்பத்திக கம்பனி பலர் முதலிட்டுள்ள ஒரு பல்தேசியக் கம்பனியாகும். அதில் புலம் பெயர்ந்த பணக்காரத் தமிழரும் பங்குதாரராவர். எண்ணெய் மூலம் மின் பிறப்பாக்கி யந்திரத்தை இயக்கி அதில் வரும் மின்சாரத்தை இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் நிலையத்திற்கு விற்று வந்தது. மின்சார சபை இம் மின்சாரத்தை மக்களுக்கும் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விநியோகித்துக் கட்டளை அறவீட்டைச் செய்து வந்தது. யுத்தச் சூழலில் இவ்வாறான மின் உற்பத்தி தேவைப்பட்ட ஒன்றாகும். ஆனால் அத் தேவையைச் சாட்டாக்கி அதே மக்களுக்குப் பாரிய அழிவைத் தரக்கூடியவாறு கழிவு எண்ணெயை நிலத்தின் கீழ் துளையிட்டுப் பாய்ச்சியிருந்தால் அதைவிட்ட மக்களுக்கு எதிரானதும் துரோகமானதுமான செயல் வேறு இருக்கமுடியாது. முதலாளிய முதலீடும் உற்பத்தி முறைமையும் மனித உழைப்பையும் வளங்களையும் சுரண்டுவதும் கொள்ளையிடுவதும் பெரும் லாபம் பெறுவதற்காகும். அத் தகைய லாபமீட்டலாற் சூழல் மாசடைவதோ மக்கள் பாதிக்கப்படுவதோ முதலீட்டாளர்களுக்கு ஒரு பொருட்டல்ல. எத்தனை பேர் நோய்வாய்ப்பட்டாலும் எத்தனை பேர் செத்து மடிந்தாலும் லாபவெறி கொண்ட முதலாளித்துவத்திற்கு அக்கறைகிடையாது. அதுபோன்றே சூழல் மாசடைவதும் அடுத்து வரும் தலைமுறையினர் பாதிக்கப்படுவதும் இம் முதலாளித்துவ முதலைகளுக்குப் பிரச்சினையல்ல. இத் தகைய முதலாளித்துவ முதலீட்டாளர்களையே வட மாகாண சபையும் முதலமைச்சரும் கரம் கூப்பி வருந்தி வரவழைக்கின்றனர். இரண்டு வருடங்கள் முன்பு வெலிவேரியவில் நன்னீரை நச்சுப்படுத்தி மக்களது கிணறுகளை நாசப்படுத்தியது ரப்பர் கையுறை தயாரிக்கும் கம்பனியின் கழிவு இரசாயனமாகும். அதே விதமாக இப்போது சுன்னாகத்தில் ஒரு பல்தேசியக் கம்பனியானது கழிவு எண்ணெயை நிலத்தடி நீரில் கலக்க விட்டு மக்களின் நன்னீர் கிணறுகளை நாசப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மக்கள் விழிப்படைவது அவசியம். அவ்வாறு விழிப்படைந்ததாலேயே சுன்னாகம் தண்ணீர் பிரச்சினை இந்தளவு முக்கியத்துவம் பெற்றது. தொடர்ந்தும் மக்கள் விழிப்புடன் முன்னோக்கிச் செல்வதன் ஊடாக மாற்று நடவடிக்கைகளைத் தாமதமின்றி முன்னெடுக்க முடியும். மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினையான வலி-தெற்கு வலி-வடக்கு மக்களின் நன்னீர்ப் பிரச்சினைக்குத் தாமதமற்றத் தீர்வு அவசியமாகும்.

5ம் பக்கத் தொடர்ச்சி...

## எட்டாத பழத்துக்கு...

மோடி யாழ் முதலமைச்சரை டில்லிக்கு அழைப்பாரெனத் தமிழ்த் தரப்பும் ஊடகங்களும் விடாது கனாக்கண்ட போதும் இன்னமும் அந்த அழைப்பு வரவில்லை. இப்போது, தேர்தல் முடிந்து பதவி ஏற்ற சில மணிநேரங்களில் டில்லியிலிருந்து மைத்ரிபாலவுக்கு அழைப்பு வந்துள்ளது. டில்லியின் முதல் அக்கறை 13வது சட்டத் திருத்தமாயிருக்குமா, இலங்கையிற் தனது செல்வாக்கை மீள வலுப்படுத்துவதாயிருக்குமா?

வடபுலத்து மீனவர் பிரச்சனையைப் பற்றியும் சம்பூர் நிலப் பறிப்பைப் பற்றியும் தமிழர் பிரதிநிதிகள் வாய் திறப்பார்களா? அவர்கள் சாதாரணத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்ததாக வரலாறில்லை. அதை மாற்றுமாறு மக்கள் தான் அவர்களை வற்புறுத்த வேண்டும்.

போராற் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியேற்றமும் புனர்வாழ்வும் பற்றியும் படையினராற் பறிக்கப்பட்ட நிலங்கள் பற்றியும் அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்துவார்களா? அதனை வெறும் பேச்சின் மூலமன்றிச் செயல்மூலம் காட்டுவார்களா?

அரசாங்கத்தைக் கொண்டு எதையும் செய்விக்க வாக்குப் பெட்டி அரசியல் மூலம் பதவிகளைப் பெற்றவர்கள் உதவமாட்டார்கள். எனவே மக்களை ஒற்றுமைப்படுத்தி அணிதிரட்டுவதை விட நம்பகமான வேறு வழி இல்லை.

தமிழ் மக்களை ஒன்றுபடுத்துவது என்ற பெயரில் அவர்களைப் பிற சமூகத்தினரிடமிருந்து விலக்கும் வேலைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியேனுங் கைவிடும் என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை.

5ம் பக்கத் தொடர்ச்சி...

## தமிழ்த் தேசிய...


கூட்டமைப்புக்கு உயர் சாதி, உயர் வர்க்க, மேட்டுக்குடி ஆதிக்க அரசியலே அடிப்படையாயிருக்கிறது. தமிழ்த் தேசியம் என்பதைக் கொண்டு அதைப் போர்த்து மூடித் தமது தமிழர் தரப்பு அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் கூறும் தமிழ்த் தேசியத்தில் முற்போக்குத் தன்மை மருந்திற்குங் கிடையாது. முழுக்க முழுக்க நிலவுடைமை வழிவந்த பிற்போக்குக் கருத்தியலின் மையமாகவே இன்றைய தமிழ்த் தேசியம் இருந்து வருகிறது.

மேலும் அவர்களது சர்வதேச நிலைப்பாடு அமெரிக்க, இந்திய, ஐரோப்பிய நாடுகளைப் பக்தி விசுவாசமாகத் தொழுது நிற்பதாகும். எடுத்ததற்கெல்லாம் சர்வதேசத்திடம் செல்வோம் என்பதன் அர்த்தம் மேற்குலக, இந்திய எசமானர்கள் மீதான அடிமை விசுவாசமேயன்றி வேறல்ல. எனவே அவர்களது நிலைப்பாட்டிற்கும் எண்ணங்களுக்கும் நெருக்கமான ஒரு ஆட்சியாகவே மைத்திரி-ரணில் ஆட்சி அமைந்திருக்கிறது. அதனாலேயே, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அரசாங்கம் உருவாக்கிய தேசிய நிறைவேற்றுச் சபையில் உறுப்பினராக இருக்கிறார். அந்த அடிப்படையில், அரசாங்கத்தை ஆதரிப்பதன் அடையாளமாகச் சுதந்திர தின விழாவிற் பங்கேற்றார். தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும், அதன் மூத்த தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் சிற்றம்பலமும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் கண்டன அறிக்கைகளை விடுத்து வந்தாலும் சம்மந்தனும் சுமந்திரனும் அரசாங்க விசுவாசகளாகவே பேசி வருகிறார்கள். உண்மையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் வெவ்வேறு வேடங்கள் பூண்டு நல்ல நடிப்புடன் கூடிய அரசியல் நகைச்சுவை நாடகமே நாளாந்தம் நடக்கிறது. அரசாங்கத்தையும் அதன் நடவடிக்கையையும் ஏசுவது போலச் நம்பிக்கை இல்லைத்தான் ஆனால் நம்பிக்கையுடன் இருந்து பார்ப்போம் என்று சிலரும் பேசுகிறார்கள். கடுமையாக எதிர்ப்பது போல் வசனம் பேசிச் சிலர் நடித்து வருகிறார்கள். சிலர் அங்கும் பிடி கொடாது இங்கும் பிடிகொடாது நழுவற் பேச்சுடன் சமாளித்து வருகிறார்கள். என்ன செய்வது! இன்று அமெரிக்க, இந்திய, ஐரோப்பிய ஆசி பெற்றுள்ள ஆட்சியை எதிர்க்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இயலாது. எதிர்த்தால் அது எசமானர்களை எதிர்ப்பதாகிவிடும். அத்துடன் சிங்கள உயர் வர்க்க மேட்டுக்குடிச் சகபாடிகளை எதிர்ப்பதாகவும் அமைந்து விடும். அதே வேளை அரசாங்கத்துடன் இணைந்தால் தமிழ் மக்கள் அவர்களை நிராகரித்து விடுவார்கள். தாங்கள் வாக்களித்த ஒரே காரணத்திற்காகத் தமிழ் மக்கள் மைத்திரி-ரணில் ஆட்சியை ஆதரிப்பார்கள் என எவரும் தப்புக் கணக்குப் போட முடியாது. தமது ஆட்சி எப்படியானது என்பதை இந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் அண்மையில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ராணுவக், கடற்படைத் தலைமையகங்களில் வைத்துத் தெளிவாகக் கூறிச் சென்றார். தமது அரசாங்கத்தின் சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாடு இதுதான். அதற்கு மேல் தமிழ் மக்கள் எதையும் எதிர்பார்க்க கூடாது என்பதையே அமைச்சர் நாகரிகமாக ஆனால் வெளிப்படையாகக் கூறிச் சென்றிருக்கிறார். இதற்குப் பின்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சம்பந்தனும் சுமந்திரனும் வேண்டிப் பெற வேறு என்ன இருக்கிறது?

ஆனால் விரைவில் வரவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அவசியமானதாகும். அதுவரை, கூட்டமைப்பினர் தம்மை எதிர்ப்பு அரசியலின் பிரதிநிதிகளாகத் தமிழ் மக்கள் முன்னால் நிறுத்திக் கொள்ள அக்கறை காட்டுவர். அடுத்து வருவதைப் பின்னர் பார்ப்போம்.

# புதிய உலக ஒழுங்கை மாற்றியமைக்கும் களமாக உக்ரேன்

உலகோன்



ரஷ்யாவைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் ரஷ்யாவின் அண்டை நாடுகளில் அமெரிக்கா இராணுவத் தளங்களை நிறுவிவந்துள்ளது. சில முன்னாள் சோவியத் நாடுகளையும் நட்பு நாடுகளையும் அமெரிக்கா நேட்டோவினுள் இணைத்து ரஷ்யாவைச் சுற்றிவளைப்பது போலச், சீனாவையும் சுற்றிவளைக்கும் வகையில் இராணுவத் தளங்களை அமைத்துள்ளது.

உக்ரேனை மையப்படுத்திய அரசியல் நிகழ்வுகள் மிக அபாயமான கட்டத்தை எட்டிக்கொண்டிருக்கின்றன. அமெரிக்காவினதும் நேட்டோவினதும் ரஷ்யாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் புதிய கட்டத்தை அடைந்துள்ளன. இது புதிய அமெரிக்காவைத் தலைமையிற் கொண்ட "புதிய உலக ஒழுங்கு" என்பதன் சர்வதேச அரசியல் நெருக்கடியைப் புலப்படுத்துகிறது. இன்னமும் முடியாத சிரிய உள்நாட்டு யுத்தமும் அதில் சிரிய அரசு விரோ-தப் போராளிகட்கு அமெரிக்க ஆதரவும் சிரிய அரசுக்கு ரஷ்ய ஆதரவும் உலகை மீண்டுமொரு இரு-மையக் கெடுபிடிப் போர்க்காலத்திற்குக் கொண்டுபோவது போன்ற தோற்றம் உருவாகக் காரணமாயின. ரஷ்யாவின் அண்டை நாடும் அதன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளங்களையுங் கொண்ட உக்ரேனில் ரஷ்ய சார்பு ஆட்சியைக் கவிழ்த்து மேற்குலகச் சார்பான ஆட்சியின் உருவாக்கமும் அதையடுத்து உக்ரேனின் சில பகுதிகள் சுதந்திரத் தனியரசுகளாகவும் ரஷ்யாவுடன் இணைய வேண்டுவதுமான அறிவிப்பு அமெரிக்க-ரஷ்ய முரண்பாட்டை மறைமுக மோதலுக்குட் தள்ளியது.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஆழமடையும் பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவான சிக்கன நடவடிக்கைகளும் மக்கள் மத்தியில் அரசுகளின் மீது அதிருப்தியையும் வெறுப்பையும் உருவாக்குகின்றன. அதைக் கையாள இயலாது மேற்குலக அரசுகள் திண்டாடுகின்றன. முக்கியமான பிரச்சனைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திருப்புவதே தனக்குள்ள ஒரே வழி என ஏகாதிபத்தியம் அறியும். எனவே, ஐ.எஸ்.ஐ.எஸ்.ஐத் தொடர்ந்து ரஷ்யாவும் விளாடிமிர் புட்டினும் 'புதிய எதிரி' உருவாக்கத்திற்குப் பயன்படுகின்றனர். கெடுபிடிப் போரின் இரண்டாம் பாகம் என அட்டைப்படம் வரைந்து அமெரிக்காவிலிருந்து வரும் "டைம்" பத்திரிகை பீதி கிளப்புகிறது. மொத்தத்தில் ரஷ்யா குற்றவாளி போலவும் அமெரிக்கா ரஷ்ய அடாவடித்தனத்தை தடுக்கும் மீட்பர் போன்றதுமான ஒரு சித்திரத்தை மேற்குலக ஊடகங்கள் கட்டியெழுப்புகின்றன. உண்மை வேறு.

உக்ரேனின் பூகோள ரீதியான அமைவிடம் அதைக் கேந்திரரீதியிற் கிழக்கு ஐரோப்பாவின் முக்கிய நாடாக்கியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கிழக்கு ஐரோப்பாவில் அதிகரித்துள்ள ரஷ்யச் செல்வாக்கும் ரஷ்யாவுக்கும் கிழக்கு ஐரோப்பாவின் முன்னைய சோவியத் ஒன்றிய நாடுகட்கும் இடையிலான நல்லுறவும் கூட்டிணைவும் அமெரிக்காவின் ஏகாதிபத்திய நலன்கட்கு ஊறானவை. அதைக் குலைக்கவும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுவவும் அமெரிக்கா தொடர்ந்து முயன்றுள்ளது. 2000ம் ஆண்டை ஒட்டிய காலத்தில் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளாக இருந்த ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா "நிறப் புரட்சிகள்" என்ற பெயரில் மக்கள் எழுச்சிகள் மூலம் ஆட்சி மாற்றங்களைத் தூண்டித், தனக்குச் சார்பான ஆட்சிகளை உறுதிசெய்தது.

அவ் வகையில் 2003 இல் ஜோர்ஜியாவில் நடந்த "இளஞ்சிவப்புப் புரட்சியும்" 2004இல் உக்ரேனில் நடந்த "செம்மஞ்சட் புரட்சியும்" 2005இல் கஸக்ஸ்தானில் இடம்பெற்ற ற்யூலிப் புரட்சியும் 2006இல் பெலரூஸில் இடம்பெற்ற ஜீன்ஸ் புரட்சியும் குறிப்பிடத்தக்கவை. 1989இல் யுகோஸ்லாவியாவின் வெல்வெற் புரட்சியின் வழியாக அமெரிக்கா திட்டமிட்ட நிறப் புரட்சிகள், அமெரிக்க ஆதரவு என்.ஜீ.ஓக்களின் ஆதரவுடன் கிழக்கு ஐரோப்பாவில் நடந்தேறி அமெரிக்கச் சார்பு ஆட்சிகளைப் பதவியிலிருத்தின.

கிழக்கு ஐரோப்பாவில் நிறப்புரட்சிகள் அமெரிக்க சார்பு ஆட்சிகளை உருவாக்கிய போதும் அவை நீண்டகாலம் நிலைக்கவில்லை. சிலகாலத்திலேயே ரஷ்ய ஆதரவுடன் எதிர்ப் புரட்சிகள் அரங்கேறின. அதற்குக் கோடுகாட்டுவதாய் 2008இல் ரஷ்யா ஜோர்ஜியாவின் அத்துமீறலுக்குப் பதிலளிக்கும் வகையில் தனது படைகளை அனுப்பி ஜோர்ஜியப் படைகளைப் பின்வாங்கச் செய்தது. இது வல்லரசு அரசியலில் ரஷ்யாவின் மீள்வருகையை உறுதிப்படுத்தியது. அதைத்தொடர்ந்து அமெரிக்க எதிர்ப்பு ஆட்சிகள் உக்ரேன் உட்பட்ட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளிற் தேர்தல் மூலம் பதவிக்கு வந்தன. அப் போக்கைத் தடுக்குமுகமாகவும் ரஷ்யாவைத் தனிமைப்படுத்துமாறும் அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியை நாடியது. ஐரோப்பிய ஒன்றியம் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளை ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் இணைய அழைத்தது. முதலில் அழைப்பை ஏற்றுப் பின்னர் அதன் மோசமான விளைவுகளை உணர்ந்து மறுத்த உக்ரேன் ஜனாதிபதி அமெரிக்க சார்ப்புப் புரட்சியால் அகற்றப்பட்டதுடன் சிக்கல் அதிகரித்தது.

இது ஒருபுறமிருக்க, ரஷ்யாவைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் ரஷ்யாவின் அண்டை நாடுகளில் அமெரிக்கா இராணுவத் தளங்களை நிறுவிவந்துள்ளது. சில முன்னாள் சோவியத் நாடுகளையும் நட்புநாடுகளையும் அமெரிக்கா நேட்டோவினுள் இணைத்து ரஷ்யாவைச்



சுற்றிவளைப்பது போலச், சீனாவையும் சுற்றிவளைக்கும் வகையில் இராணுவத் தளங்களை அமைத்துள்ளது.

அதேவேளை, உக்ரேனில் ரஷ்யாவின் ஆதிக்கம் ஓங்குவதையும் பிராந்தியத்தில் ரஷ்யா வலியதொரு சக்தியாக உருவாகுவதையும் கண்டு வெருண்ட அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் ரஷ்யாமீது பொருளாதாரத் தடைவிதித்தனர். ஆனாற் பொருளாதாரத் தடைகளை விதித்துக் கிட்டத்தட்ட ஓராண்டாகியும் ரஷ்யா பணியவில்லை. ரஷ்யாவின் எண்ணெய் வருமானத்தைப் பாதிக்கும் நோக்குடன் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கச் சார்பு எண்ணெய் உற்பத்தி நாடுகள் அளவுக்கதிகமான எண்ணெயைச் சந்தைக்கு அனுப்பி எண்ணெய் விலை வேகமாகக் குறைய வழி செய்தனஉ. அதன்மூலம் ரஷ்யப் பொருளாதாரத்தைச் சீஉகுலைப்பதே அவர்களின் நோக்கம். மாறாக, எண்ணெய் விலைவீழ்ச்சி உலகெங்கும் எண்ணெய் உற்பத்தியிலுள்ள அமெரிக்க ஐரோப்பியக் கம்பெனிகளுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவுகளை அமெரிக்காவும் ஐரோப்பாவும் இப்போது அனுபவிக்கின்றன. வேலை இழப்பு, நாணய மதிப்பிறக்கம் என மேற்குலகின்பொருளாதாரம் அல்லாடுகிறது. அமெரிக்க மத்திய வங்கிக் கணிப்பில், எண்ணெய் விலைகள் உயராவிடின் 2015ம் ஆண்டு அமெரிக்காவின் 8 மாநிலங்களில் குறைந்தது 250,000 பேர் வேலை இழக்கநேரிடும்.

இப் பின்னணியில் ரஷ்யாவிற்கெதிராக உக்ரேனை மையப்படுத்திய அமெரிக்காப் போர் முழக்கத்தைக் கவனிக்கவேண்டும். அமெரிக்கா எப்படியாவது உக்ரேனை ஐரோப்பிய ஒன்றியத்துட் கொண்டுவருவதன் மூலம் நேட்டோவின் விஸ்தரிப்பையும் ரஷ்யாவை அதன் எல்லைகளிலேயே அச்சுறுத்தும் நிலையொன்றையும் உருவாக்க விரும்புகிறது. இந் நிலையிலேயே உக்ரேனுக்கு நேரடி இராணுவ உதவி வழங்குவதன் மூலம் பிராந்தியத்தில் முடிவற்ற போருக்கு அச்சாரமிடத் தயாராகிறது. உக்ரேனுக்கு ஆயத உதவி வழங்கும் நோக்கம் உக்ரேன் அரசு கிளர்ச்சியாளர்களைப் போரில் வெல்வதல்ல. மாறாக மொத்தப் பிராந்தியத்தையும் யுத்தமயமாக்கி முடிவிலாப் போருக்குள் ரஷ்யாவைத் தள்ளுவதன் மூலம் நீண்ட காலத்தில் ரஷ்யாவில் ஒரு ஆட்சிமாற்றத்தை உருவாக்குவதே.

இதனாலேயே அண்மையில் மின்ஸ்க்கில் 16 மணிநேரப் பேச்சுக்கட்குப் பின்னர் ஜேர்மன் ஆட்சி முதல்வருக்கும் ரஷ்ய, பிரெஞ்சு, உக்ரேனிய ஜனாதிபதிகட்கும் இடையே எட்டப்பட்ட உக்ரேனிய போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்க அமெரிக்கா மறுத்துள்ளதோடு நேரடியாக உக்ரேனிய அரசாங்கத்துக்கு ஆயுதங்களை வழங்குவதாக அறிவித்துள்ளது. மொத்தத்தில் உக்ரேன் நெருக்கடி முடிவுக்கு வருவதை அமெரிக்கா விரும்பவில்லை. ஆனால் ஜேஉமனியினதும் பிரான்சினதும் நிலைப்பாடுகள் அவ்வாறல்ல. முடிவுறாத போரும் ரஷ்யாவுடனான உறவில் ஏற்படும் விரிசலும் பொருளாதார ரீதியில் இரு நாடுகளையும் கடுமையாகப் பாதிக்கும். ஜேர்மனியும் பிரான்சும் ரஷ்யாவைத் தனிமைப்படுத்த விரும்பும் அதே வேளை, ஐரோப்பாவை மையப்படுத்திய இன்னொரு போர் ஜேர்மனியையும் பிரான்சையும் மோசமாகப் பாதிக்கும்.

அமெரிக்கா ரஷ்யாவில் ஒரு ஆட்சிமாற்றத்தை விரும்பப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமான மூன்று மேல்வருமாறு: (1) புதிய நிலவரங்களின்படி ஆசியா தவிர்க்கவியலாத பகுதியாகியுள்ளது. குறிப்பாக மத்திய ஆசியா பூகோளரீதியிலும் இராணுவ மூலோபாய ரீதியிலும் அதி முக்கியமாகிறது. அமெரிக்கா மத்திய ஆசியாவில் ஆதரவுத் தளத்தை உருவாக்கப் பெரிய தடையா ரஷ்யா உள்ளது. அமெரிக்கா தனது இராணுவத் தளங்களை ஆசியாவில் நிறு வமுடியாமைக்கு ரஷ்யச் செல்வாக்கே பிரதான காரணம். அத்தோடு 'யூரேசியா' எப்படும் கிழக்கு ஐரோப்பிய - மத்திய ஆசியப் பகுதி வளம் மிகுந்த, பொருளாதார வலுவுள்ள பிராந்தியமாகும். அதைக் கட்டுப்படுத்துவது உலகப் பொருளாதாரத்தின் கணிசமான அளவைக் கட்டுப்படுத்துதற்குச் சமனானது. எனவே அமெரிக்கா இப் பகுதியின் கட்டுப்பாட்டுககு ஏங்குகிறது. அதற்காக எதையும் செய்யத் தயாராகிறது.

புட்டினை அகற்ற அமெரிக்கா விரும்ப இரண்டாவது காரணம் சிரியா, ஈரான், உக்ரேன் ஆகிய விடயங்களில் அமெரிக்கா நினைத்ததைச் செய்ய இயலாமைக்கு முக்கியமான ஒரு காரணம் புட்டின். அல்லாவிடின் அமெரிக்காவின் திட்டப்படி சிரியாவிலும் ஈரானிலும் ஆட்சிமாற்றங்கள் ஏற்படுவதோடு உக்ரேனை முற்றாக ஐரோப்பிய ஒன்றியத்துள் இணைத்து ரஷ்ய எல்லையில் நேட்டோ பிரசன்ன மூலம் அமெரிக்க ஏவுகணைகளை நிறுவியிருக்கலாம். ஆனால் இன்று அவை இயலவில்லை.


மூன்றாவது காரணம் புட்டின் பல கூட்டமைப்புக்களில் குறிப்பாக பிரிக்ஸ் வங்கி (BRICS bank), யுரேஷியன் பொருளாதார ஒன்றியம் (Eurasian Economic Union), ஷங்ஹாய் கூட்டிணைவு அமையம் (Shanghai Cooperation Organization) இணைந்து அவற்றை வலுவான கூட்டமைப்புக்களாக்கவும் உதவியுள்ளார். இவை அமெரிக்காவுக்கும் நவதாராள நிதி நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றுக்குச் சவாலாகவும் மாற்றாகவும் ஆகியுள்ளன.

அதே வேளை, சர்வதேச நாணய நிதியம் அமெரிக்கச் சார்பு உக்ரேனிய அரசுக்கு 17 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க உடன்பட்டுக், கடனைப் பெற மொன்சாண்டோ என்ற அமெரிக்கப் பல்தேசிய நிறுவனம் மரபணு மாற்றிய பயிர்களைக் கட்டற்று உற்பத்தி செய்ய உக்ரேன் அனுமதிக்கவேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்துள்ளது. வளமான விவசாய நிலங்களைக் கொண்ட நாடு உக்ரேன். மோண்சாண்டோ கால்பதிக்குமாயின் சிலகாலத்திலேயே விளை நிலங்கள் நஞ்சாகிப் பாவனைக்குதவாது போகும். இவ்வாறு உக்ரேன் நெருக்கடி பல்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ளது.


இன்று மேற்குலகு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியும் சிக்கன நடவடிக்கைகட்கெதிரான மக்களின் போராட்டங்களும் ஏகாதிபத்தியத்தின் உள்ளார்ந்த நெருக்கடிகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன.


உக்ரேன் நெருக்கடியில் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஒரு பக்கத்திலும் ரஷ்யா மறுபக்கத்திலும் அதற்கு ஆதரவாகச் சீனாவும் உள்ளன. ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் எதிர்பார்த்த பலனைத் தராததால், அமெரிக்கா இன்னொரு போருக்கான முரசை அறைகிறது. இப் போர் நிகழுமாயின் அமெரிக்கா இன்னொரு வகையில் தனது சாவுமணியைத் தானே அறைகிறது எனலாம். முதலாம் உலகப் போரும் இதே பால்ட்டிக் பகுதியில் ஒரு நிகழ்வுடனேயே தொடங்கியமை கவனிக்கத்தக்கது.


# தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் 25வது வருட நினைவு நாள் புரட்சிகர உணர்வுடன் இடம்பெற்றது












பொதுவுடைமை இயக்கத்தின் மாக்சிச லெனினிசப் புரட்சிகர முன்னோடிகளில் ஒருவர். தோழர் கே.ஏ. சுப்பிரமணியம், தோழர்கள் நா. சண்முகதாசன், மு. கார்த்திகேசன், டாக்டர் சு.வே. சீனிவாசகம் போன்ற புரட்சிகரச் செயல் வீரர்களோடு ஒருவராக வாழ்ந்து மறைந்தவர். தோழர் மணியம் சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி வைக்காது வாழ்ந்தவர். தனது அரசியல் வாழ்வையும் குடும்ப வாழ்வையும் பிரித்து வைத்து அதுவேறு இதுவேறு என வாழாது இரண்டையும் இணைத்துப் பாட்டாளி வர்க்க அரசியலுக்கு முன்னுரிமை வழங்கி வந்தவர். எளிமையான வாழ்வு கடினமான கட்சிப் பணி என்பதை இறுதிவரை முன்னெடுத்து வாழ்ந்தவர். கோட்பாடும் நடைமுறையும் இணைந்து செல்லும் வகையில் இயங்கியல் அணுகுமுறை மூலம் அன்றாடக் கட்சிப் பணிகளை முன்னெடுத்து வந்தவர். எப்போதும் தனது சொந்த வாழ்வை இரண்டாம் மூன்றாம் இடத்தில் வைத்துக் கட்சிக்கும் மக்களுக்கும் முதலாம் இடம் அளித்து முழுநேர அரசியல் ஊழியனாக இறுதி மூச்சுவரை புரட்சிகரப் பயணம் மேற்கொண்டவர். "ஊருக்குத் தான் உபதேசம் உனக்கில்லை" என வாழாது தனது தவறுகளைத் தானே கண்டறிந்து திருத்தியும், தோழர்கள் சுட்டிக்காட்டிய போது ஏற்றுக் கொண்டும் தன்முனைப்புத் தலைதூக்காது கவனித்து வாழ்ந்து கட்சிக்கும் தோழர்களுக்கும் வழிகாட்டி வாழ்ந்து மறைந்தவர் தோழர் மணியம்.

அத்தகைய முன்னோடித் தோழர் மணியம் வருடாந்தம் நினைவு கூரப்படுகிறார். அவ் வகையில் 2014 ஆண்டும் நவம்பர் 27ம் திகதி அவரது 25வது வருட நினைவு தின நிகழ்வுகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. கொழும்பில் 29.11.2014 கலாநிதி சி. சிவசேகரம் தலைமையில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் பேராசிரியர் ஜயதேவ உயன்கொடவின் நினைவுப் பேருரை "இணக்கத்தின் இணங்க இயலாமை. போரின் பின்னான இணக்கம்: தனிமைகள் கடந்து சிந்தித்தல்" எனும் தலைப்பில் இடம்பெற்றது. மேலும் தோழர் சி.கா. செந்திவேல் எழுதிய 'தோழர் மணியம் நினைவுகள்" நூல் வெளியீடும் இடம்பெற்றது. நூலின் முதற் பிரயைத் தோழர் மணியத்தின் துணைவியார் வள்ளியம்மை பெற்றார். வரவேற்புரையைத் தோழர் சோ. தேவராஜாவும், நூல் ஆய்வுரையைத் தோழர் சிவ. இராஜேந்திரனும் நன்றியுரையைத் தோழர் இரா. ரஞ்சனும் வழங்கினர். கலை நிகழ்வாக தேசிய கலை இலக்கியப் பேரவையின் "வேடமுக ஆட்டம்" இடம்பெற்றது.

தோழர் மணியத்தின் 25வது வருட நினைவு தினத்தின் யாழ்ப்பாணக் கூட்டம் கொக்குவிலில் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் 25-01-2015 அன்று தோழர் இ. தவராஜா தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையைக் க. தணிகாசலமும் நூல் ஆய்வுரையை எம். இராசநாயகமும் வழங்கினர். மூத்த தோழர் இ. செல்வநாயகம் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். தோழர்கள் வெ. மகேந்திரன், சோ. தேவராஜா ஆகியோர் கருத்துரை வழங்கினர். தோழர் கா. செல்வம் கதிர்காமநாதன் நன்றியுரை வழங்கினார். தோழர் த. பிரகாஷ் நிகழ்வை வழி நடத்தினார்.

## புரட்சிகர அஞ்சலிகள்



### திருமதி தங்கம் சூடாமணி

கடந்த 11-02-2015 அன்று மூத்த பொதுவுடைமைவாதி இ.கா. சூடாமணியின் துணைவி திருமதி தங்கம் சூடாமணி வவுனியாவில் இயற்கை எய்தினார். அவரது இறுதி அஞ்சலி நிகழ்வானது 13-02-2015 அன்று அவரது இல்லத்தில் எவ்வித மதச் சடங்குகளும் இன்றி அஞ்சலியுரைகள், மலரஞ்சலியுடன் மிக எளிமையாக இடம்பெற்றது. அவரது வெற்றுடல் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சித் தோழர்கள், நண்பர்கள் உட்பட பெருந்தொகையானோரின் பங்குபற்றலுடன் வவுனியா பூந்தோட்ட மயானத்தில் எரியூட்டப்பட்டது. அவரது மறைவுக்கு புதிய நீதி தனது இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.




### தோழர் சி. புலேந்திரன்

கடந்த 20-12-2014 ல் கரவெட்டி கன்பொல்லைத் தோழர் சி. புலேந்திரன் நோய் வாய்ப்பட்டு இயற்கை எய்தினார். அவர் இளம் வயதுமுதல் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து வாலிபர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பவற்றில் போராளித் தோழராக இருந்து வந்தவர். புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் உறுப்பினராக இருந்த தோழர் புலேந்திரனின் மறைவுக்கு புதிய நீதி தனது இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.



### திரு. பெ. செல்வராஜ்

தேசிய கலை இலக்கியப் பேரவை மாத்தளைக் கிளை உறுப்பினரும் அதன் உப அமைப்பான செங்கதிர் கலைக்குழுவின் தலைமை செயற்பாட்டாளருமான மாத்தளை ரத்வத்தையைச் சேர்ந்த பெ.செல்வராஜ் அவர்கள் இயற்கை எய்தினார். இவர் நாட்டார் கலைகளில் வல்லவரான மக்கள் கலைஞர் என்பதுடன் புதிய ஜனநாயக மாக்சிச கட்சியின் ஆதரவாளரும் தொழிற்சங்க தலைவருமாவார். செல்வராஜ் அவர்களின் மறைவுக்கு புதிய நீதி தனது இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.



## இந்திய மீனவர்களின் அத்துமீறிய தாக்குதலுக்குக் கண்டனம்

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த நூற்றுக் கணக்கான இழுவைப் படகுகளில் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து, கூரிய ஆயுதங்கள் கொட்டன்கள் வலைக்குக்கட்டும் ஈயக்குண்டுகள் போத்தல்கள் என்பவற்றைப் பயன்படுத்தி, மீன்பிடியில் ஈடுபட்டிருந்த எமது மீனவர்களைப் படுமோசமான முறையில் தாக்கிப் படுகாயங்கள் விளைவித்துள்ளார்கள். அத்துடன் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்து அச்சுறுத்தியதுடன் எமது மீனவர்களின் மீன் வலைகளையும் வெட்டி நாசம் செய்துவிட்டு சென்றுள்ளனர். இக்கொடுரச் சம்பவத்தை எமது புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக்கட்சி மிக வன்மையாக கண்டிக்கிறது இச்சம்பவம் பற்றி வடமாகாண, மத்திய அரசாங்கங்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என வற்புறுத்துகின்றது.

இந்திய இழுவைப் படகுகளில் எமது கடல் பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிப்போர் சாதாரண இந்திய மீனவர்கள் அல்லர் பெரும் மீன் முதலாளிகளின் கையாட்களே ஆவர். கடந்த வியாழக்கிழமையன்று இருபது ட்ரோலர் படகுகளில் வந்து மீன் கொள்ளையில் ஈடுபட்டது மட்டுமில்லாமல் எமது மீனவர்களைக் கடும் காயப்படுத்திய செயலை எவரும் தட்டிக்கழித்துவிட முடியாது. இத்தகைய அத்துமீறல் ட்ரோலர் மீன் பிடியையும் எமது மீனவர்களைக் கண்மூடித்தனமாக தாக்குவதையும் வலைகளை வெட்டி நாசப்படுத்துவதையும் தடுத்து நிறுத்துவதற்கு மாகாணசபை ஆட்சியும் மத்திய ஆட்சியினரும் பாராமுகம் காட்டாது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது மீனவர்களையும் அவர்களது தொழிலையும் பாதுகாத்து வாழ்வாதாரத்திற்கான தொழிற் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம்.

இவ்வாறு புதிய ஜனநாயக மார்ச்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன், 28.02.2015 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவுத்துள்ளார்.




கடந்த பெப்ரவரி 24 ம் திகதி கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன்பாக முன்னிலை சோசலிசக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தோழர்கள் பங்கு கொண்டனர். "அரசியற் கைதிகளை விடுதலை செய், காணாமல் போனோருக்கு பதில் கூறு, சிறைப் படுகொலைகளுக்கு நீதி விசாரணை, குமார் குணரட்னத்திற்கு அரசியல் செய்ய இடமளி" ஆகிய முழக்கங்கள் அங்கு முன்வைக்கப்பட்டன.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தோழர் மணியம் நினைவுகள் நூல் அறிமுக நிகழ்வில் பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட, முனைவர் சி. சிவசேகரம், தோழர் சி. கா. செந்திவேல், திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் ஆகியோர் இருப்பதைப் படத்தில் காணலாம்.





சுன்னாகம் மின்நிலையக் கழிவு எண்ணையால் நிலத்தடி நீர் மாசடைந்திருக்கும் பிரச்சினையை முன்வைத்து பொது அமைப்புகளும் அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து ஜனவரி 17ம் திகதி சுன்னாகம் மின்சார சபை முன்பாக முன்னெடுத்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்ட மக்களையும் அரசியற் பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.



மலையக மக்களுக்கு 20பேர்ச் காணி, வீட்டுரிமையை வலியுறுத்தி சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு மாத்தளையில் மார்ச் 1ம் திகதி நடாத்தியிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் புதிய ஜனநாயக மா.லெ கட்சி, முன்னிலை சோசலிக்கட்சி, அடையாளம், மொன்லார், மலையக சமூக ஆய்வு மையம் மற்றும் பல இளைஞர் அமைப்புகளும் பங்குபெற்றன.



கடந்த வருட பிற்பகுதியில் ஏற்பட்ட மீரியபெத்த அனர்த்தத்தைக் கண்டிக்கும் முகமாக அப்புத்தளையில் ஒழுங்குசெய்யப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்ட மக்களையும், ஆர்ப்பாட்டத்தில் முன் நின்ற சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் தோழர்களையும் படத்திற் காணலாம்.

வெளியிடுபவர் – வே. மகேந்திரன், இல. 15/4, மகிந்தாராம வீதி, கல்கிசை. அச்சுப்பதிப்பு – கொம் பிரிண்ட் சிஸ்டம், HL 1/2, டயஸ் பிளேஸ், கொழும்பு 12